

## அதிரவைக்கும் அழிவுக்கதை... ஏஜெண்ட் ஆரஞ்சு!

கார்த்திகேயன் ராமலிங்கம்



## இந்திய அரசமைப்புச் சட்டத்தின் நோக்கங்களை மீட்டெடுக்கவே போராடுகிறோம்!

பெஸ்வாடா வில்சன்

பூவுலகின் நண்பர்கள் வெளியீடு | www.poovulagu.org | ஆகஸ்ட் 2016 | ரூ.25

# பூவுலகு

சுற்றுச்சூழலுக்கான மாத இதழ்



## தமிழக முதல்வருக்கு பூவுலகின் நண்பர்களிடமிருந்து

# ஒரு மனம் திறந்த மடல்!

சமீபத்தில் புகுஷிமா அணு உலை விபத்து நடந்த இடத்திற்குச் சென்று வந்துள்ளார் புகைப்படக் கலைஞர் அமிர்தராஜ் ஸ்டீபன். அவரது பார்வையில் அந்நகரம்.




அணுக்கழிவு சேமிப்புக் கிடங்கு



அமிர்தராஜ் ஸ்டீபன்

வெறும் எண்ணிக்கையாகவோ தகவலாகவோ முடிந்து விடக் கூடிய ஒரு சூழலுக்கு, மனித முகத்தை தருவதில் புகைப்படங்களுக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு. ஒரு புகைப்படம் நமது கூட்டு மன சாட்சியின் ஒரு பகுதி ஆகலாம். வரலாற்றை நினைவில் வைத்து அதன் பிழைகளை மீண்டும் செய்யாமல் தவிர்க்க அது நமக்கு உதவக்கூடும் என்கிறார் புகைப்பட கலைஞர் ஜேம்ஸ் நாட்வே.

தொடர்ச்சி.. 51ம் பக்கம்



அணுசக்தி எதிரான பிரச்சாரம்



அணுக்கதிரியக்க அளவை ஆய்வு செய்யும் தொழிலாளர்கள்

# பூவுலகு

சுற்றுச்சூழலுக்கான மாத இதழ்

ஆகஸ்ட் 2016

**ஆசிரியர்**
கோ. சுந்தர்ராஜன்

**கவுரவ ஆசிரியர்**
மருத்துவர் கு. சிவராமன்

**நிர்வாக ஆசிரியர்**
கவிதா முரளிதரன்

**இணை ஆசிரியர்**
வழ. பி. சுந்தரராஜன்

**ஆசிரியர் குழு**
வழ. மு. வெற்றிச்செல்வன்
தாரிணி பத்மநாபன்
ஜீயோ டாமின்
விஜயலட்சுமி பாஸ்கரன்
'ஆற்றல்' பிரவீன்குமார்
மு. சீனிவாசன்

**ஆலோசனைக் குழு**
தியடோர் பாஸ்கரன்
பாவலர் அறிவுமதி
வழ. மு. இராதாகிருஷ்ணன்
ஈரோடு மரு வெ. ஜீவானந்தம்
வைகை குமாரசாமி
பேரா. சுல்தான் இஸ்மாயில்
சுப. உதயகுமாரன், பாமயன்
அரச்சலூர் செல்வம், நக்கீரன்

**வடிவமைப்பு**
மெய்யருள்

**நிர்வாக ஒருங்கிணைப்பு**
கோ. இராஜாராம் | 90949 90900

**அச்சாக்கம்**
ஜோதி பிரிண்டர்ஸ், சென்னை

**பூவுலகின் நண்பர்கள்**
AM 77, 14வது முதன்மைச் சாலை,
சாந்தி காலனி, அண்ணா நகர்,
சென்னை 600040

**இணையம்:** www.poovulagu.org
**வலைப்பூ:** www.poovulagu.net
**ஃபேஸ்புக்:** www.facebook.com/poovulagu
**மின்னஞ்சல்:** info@poovulagu.org (நிர்வாகம்)
write4poovulagu@gmail.com (ஆசிரியர் குழு)

## சூழலியல் தீவிரவாதம் காத்திருக்கும் ஆபத்துகள்


வெடிக்கக் காத்துக்கொண்டிருக்கின்றன புகைந்து கொண்டிருக்கும் சில பிரச்னைகள். இந்தியாவை சூழும் தீவிர வாத பிரச்னைகள் பற்றிய உரையாடல்கள் இந்திய அரசியல் பரப்பில் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் அசல் இந்தியாவை, அதில் வாழும் எளிய மக்களை சூழக் காத்திருக்கும் சூழலியல் தீவிரவாதம் பற்றிய உரையாடல்களோ விவாதங்களோ இங்கு ஏற்பட வேயில்லை. இந்த தீவிர வாதத்தை இந்தியாவின் சாதாரண மக்களின் மீது ஏவுவது இந்திய அதிகார வர்க்கம் என்பதுதான் அதை சூழ்ந்திருக்கும் மௌனத்திற்கான காரணம்.

கடந்த நாட்களில் மிக ஆரவாரமாக வீடியோ கான்ப ரென்சிங் மூலம் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ரஷ்ய அணுவுலைகள் அமைந்திருக்கும் கூடங்குளத்திலும் அதன் சுற்றுபுறங்களிலும் வாழும் மக்களும் சரி, மிதிர்விரிதி மற்றும் ஹரிப்பூரில் மக்கள் எதிர்ப்பால் நிராகரிக்கப்பட்ட அணுவுலைகளை அதிகார வர்க்கத்தின் துணையோடு நிறுவ தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கொவ்வடா மக்களும் சரி – இந்த சூழலியல் தீவிரவாதத்திற்கு பலியாக காத்திருப்பவர்களே. இந்த அணுவுலைகளில் உள்ள பிரச்னைகளை, அங்குள்ள எளிய மக்களின் சிக்கல்களை பற்றி இரு வேறு கட்டுரைகளில் பேசுகிறது பூவுலகின் இந்த இதழ். குறிப்பாக தமிழக முதல்வருக்கான மனம் திறந்த மடலில் திறந்த மனதோடு சில கேள்விகளை முன் வைத்திருக்கிறோம். அதை மக்கள் மீதான அக்கறையின் பாற்பட்ட திறந்த மனதோடு அணுகுவார் என்று எதிர் பார்க்கிறோம்.

புதிய அணுவுலைகள் அமையவிருக்கும் கொவ்வடா பகுதிக்கு அணு சக்தி எதிர்ப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப் பாளர் எஸ்.பி.உதயகுமாருடனும் புகைப்பட கலைஞர் அமிர்தராஜ் ஸ்டீபனுடனும் சென்று வந்தார் பூவுலகின் நண்பர்கள் அமைப்பைச் சேர்ந்த கோ.சுந்தர்ராஜன். மக்களின் நியாயமான பயங்களையும் சந்தேகங்களையும் தன் கட்டுரையில் பதிவு செய்திருக்கிறார் அவர்.

தவிர ஏஜெண்ட் ஆரஞ்ச் பற்றிய முக்கிய கட்டுரையும் மகசேசே விருது பெற்ற பெஸ்வாடா வில்சனின் பேட்டியின் மொழியாக்கமும் இந்த இதழில் இடம் பெற்றிருக்கிறது. வெடிக்கக் காத்திருக்கும் இன்னொரு பெரும் பூதமான மரபணு மாற்றப்பட்ட கடுகு பற்றிய விரிவான கட்டுரை ஒன்று அடுத்த இதழில் இடம் பெறும்.

**பூவுலகை பேணுவோம்!** •



# அஞ்சலி

## மகாஸ்வேதா தேவி

விரல்சேர்த்து
நீங்கள் விரித்த
ஆகாயத்தில்
சிறுபறவைகள்
சிறகடித்துக்
கொண்டேயிருக்கும்..

“சாமானிய மக்களே உண்மையான வரலாற்றை உருவாக்குகிறார்கள் என்று நம்புபவள் நான். அவர்களிடம் தலைமுறை தலைமுறையாகப் புழங்கும் நாட்டுப்புறக் கலைகள், தொன்மக் கதைகள், நாடோடிப் பாடல்கள் எனப் பல்வேறு வடிவங்களின் வழி நாம் பார்ப்பதுதான் என்ன? எனது எழுத்துக்கான மூல காரணம் அவர்கள். எழுதுவதற்கான மன எழுச்சியைத் தருபவர்களும் அவர்களே!”

மஹாஸ்வேதா தேவி

# உள்ளே



அமோல் பயஸ் என்கிற காட்டுயிர் புகைப்பட நிபுணர் ததோபா அந்தாரி புலிகள் சரணாலயத்தில் தன் தாயைக் கட்டித்தழுவும் குட்டிப்புலியின் நெகிழ்ச்சியான நிகழ்வை புகைப்படம் எடுத்துள்ளார். அந்த மாநில வனத்துறை அமைச்சர் ஸ்டாம்பில் அந்த புகைப்படத்தை அச்சிடும் முடிவையும் அறிவித்துள்ளார். 'புலிகளைக் காப்போம்' என்ற வாசகத்துடன் விழிப்புணர்வு பிரச்சாரத்தையும் அமோல் பயஸ் இந்த புகைப்படத்தின் உதவியுடன் மேற்கொண்டு வருகிறார்.


| | | |
|---|---|---|
| தெலுங்கு தேசமா? அணுவுலை தேசமா? | சுந்தரராஜன் | 06 |
| இந்திய அரசமைப்பு சட்டத்தின் நோக்கங்களை மீட்டெடுக்கவே போராடுகிறோம்... | பெஸ்வாடா வில்சன் | 09 |
| வெட்டப்படுவது மரங்களல்ல இப்பூவுலகின் எதிர்காலம்! | நிலன் | 17 |
| ஆழ் சூழலியம் | நிவேதா முருகேசன் | 20 |
| சில அம்மாக்கள் வேற மாதிரி | ஜியோ டாமின் | 25 |
| பசுமைத் திருமணம் | எழிலன் | 24 |
| வளர்ச்சி... அழிவின் வளர்ச்சி! | அறச்சலூர் செல்வம் | 26 |
| அதிரவைக்கும் அழிவுக்கதை : ஏஜெண்ட் ஆரஞ்சு | கார்த்திகேயன் ராமலிங்கம் | 30 |
| மரபீணிக் கடுகை மறுதளிக்க 25 காரணங்கள்! | | 33 |
| சுற்றுச்சூழல் சர்வாதிகாரத்திலிருந்து.. வந்தனா சிவா | | 39 |
| தமிழக முதல்வருக்கு ஒரு மனம் திறந்த மடல்! | பூவுலகின் நண்பர்கள் | 42 |
| வாசகர் கேள்வி வல்லுநர் பதில் | | 44 |
| 'சில கல்வியாளர்களுக்கு ஒரு அழைப்பு' | கவிதை | 46 |
| ஹிரோஷிமா பலியாளிடமிருந்து பராக் ஒபாமாவிற்கு... | | 47 |




# தெலுங்கு தேசமா? அணுவுலை தேசமா?



**கோ.சுந்தர்ராஜன்**

இந்தியாவின் ஆன்மா அழுக்குப் படியாமல் வாழும் ஒரு அசலான கிராமத்துக்குள்கால்பதித்தஉணர்வைத் தருகிறது கொவ்வடா.விசாகப்பட்டினத்திலிருந்து 68 கி.மீ தொலைவில் மிக அழகான பூமி. எங்கு பார்த் தாலும் செழித்து நிற்கும் பசுமை. விவசாய நிலத்தில் பல மீனவர்களும் இருக்கிறார்கள். இந்திய வரைபடத்தில் பிற மாநிலங்களாலும் மக்களாலும் கண்டுக்கொள்ளப்படாமலேயே போயிருக்கும் கொவ்வடா.இடிந்தகரை மக்களின் போராட்டம் எப்படி தமிழகம்கூட அறிந்திராத அந்த கடல் கிராமத்தை சர்வதேச போராட்ட வரைப்படத்தில் பிரதான இடம்பிடிக்க வைத்ததோ அப்படியொரு போராட்டத்துக்கு தயாராக நிற்கிறார்கள் கொவ்வடா மக்கள். அழகிய கொவ்வடாவை அணுவுலை பூமியாக மாற்ற திட்டமிட்டிருக்கிறது இந்திய அரசும் ஆந்திர அரசும். இருபெரும் அதிகார மையங்களை எதிர்த்து போராட்டத்துக்கு தயாராகி வருகிறார்கள் கொவ்வடா மக்கள். கடந்த வாரம், அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் எஸ்.பி. உதய குமாருடனும் கூடங்குளம் போராட்டத்தை தொடர்ச்சியாக தனது கேமராவில் பதிவுசெய்து வரும் புகைப்பட கலைஞர் அமிர்தராஜ் ஸ்டீபனுடனும் கொவ்வடாவுக்குச் சென்றிருந்தேன்.

புகுஷிமாவிற்கு பிறகு இடிந்தகரை மக் களிடம் பார்த்த கொந்தளிப்பான உணர்வை கொவ்வடா மக்களிடமும் பார்க்க முடிந்தது. இவர்களது போராட்டத்திற்கும் ஒரு வரலாறு உண்டு. ஆனால் குஜராத்திலுள்ள மிதிரிவிரிதி கிராமத்து

மக்களின் வீரியமான போராட்டத்தை பார்த்து அங்கு அணுவுலை அமைக்கும் திட்டத்தை கைவிட்ட மத்திய அரசு, கொவ்வடா மக்களின் போராட்டத்தை ஏனோ கண்டுகொள்ளவில்லை. மக்களும் விடுவதாயில்லை. ''அங்கிருக்கும் மீனவர்களும் விவசாயிகளும் பெண்களும் அணுவுலைகளை கடுமையாக எதிர்க்கிறார்கள். இங்கிருக்கும் மருந்தக தொழிற்சாலையின் கழிவு கடல் நீரில்தான் கலக்கப்படுகிறது. அதனால் கடந்த சில வருடங்களாகவே மீன் வரத்து குறைந்திருக்கிறது. இப்போது அணுவுலையும் வந்துவிட்டால் நாங்கள் எல்லோரும் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான்'' என்று குமுறுகிறார் பாபு.

மிதிரிவிர்தி மக்களின் போராட்டத்தால் அமைய முடியாமல்போன வெஸ்டிங் ஹவுஸ் அணுவுலைகள்தான் இப்போது கொவ் வடாவுக்கு வரவிருக்கிறது. 2032க்குள் 63,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்துவிட வேண்டும் என்கிற 'மாபெரும்' திட்டத்துடன் தமிழ்நாட்டையும் ஆந்திராவையும் குறிவைத் திருக்கிறது இந்திய அரசாங்கம். இந்த திட்டத்தின் படி ஆந்திராவில் மட்டும் 30,000 மெகாவாட் உற்பத்தி செய்ய வேண்டும். அதாவது கடலோர பகுதிகளில் ஒவ்வொரு 200 கி.மீக்கும் 6000 மெகாவாட் உற்பத்தி செய்யும் அணுவுலைகள் அமைக்கப்படும். அத்தனை கழிவுகளும் கடலில் கொட்டப்படும் என்றால் ஆந்திர கடல்களின், மீனவர்களின் எதிர்காலமும் வாழ் வாதாரமும் பாதிக்கப்படும் என்பதில் எந்த சந்தேகமும் வேண்டாம்.

ஆனால் கொவ்வடாவில் அமைய விருக்கும் வெஸ்டிங் ஹவுஸ் அணுவுலை களைப் பொருத்தவரையில் அது அந்த பகுதி மக்களின் வாழ்வாதாரத்துக்கு சவால் விடும் அணுவுலைகள் மட்டுமல்ல, இந்திய பொருளாதாரத்தையும் வல்லரசு ஆக யாரிடம் வேண்டுமானாலும் ஏமாறுவதற்கு தயாராக இருக்கும் அதன் பேராசையையும் பகடி செய்யும் திட்டமும்கூட.

எனில் வெஸ்டிங்ஹவுஸ் நிறுவனம் அமெரிக்காவிலேயே நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனம். வெஸ்டிங்ஹவுஸ் நிறுவனம் தயாரிக்கும் அணுவுலைகளை அமெரிக்காவிலுள்ள பல நிறுவனங்களே வாங்க மறுக்கின்றன. கடந்த சில வருடங்களில் மட்டும் வெஸ்டிங் ஹவுஸிடமிருந்து அணுவுலைகளை வாங்கும் திட்டத்தை சில நிறுவனங்கள் கைவிட்டிருக்கின்றன. இது பற்றி கடந்த வாரம் சென்னை வந்த இயற்பியலாளர் சுவரத் ராஜுவிடம் பேசிக்கொண்டிருந்தேன். கொவ்வடாவில் அமைய விருக்கும் 6 அணு உலைகளின் விலை கிட்டத்தட்ட சுமார் 4 லட்சம் கோடி ரூபாயாக இருக்கும் என்கிறார் அவர். 4 லட்சம் கோடி செலவில் அமையவிருக்கும் ஒரு திட்டத்திற்கு டெண்டர் விடுவது போன்ற எந்த நடைமுறையும் நடக்கவில்லை. நஷ்டத்தில் இயங்கும் வெஸ்டிங் ஹவுஸ் நிறுவனத்தை ஏன் தேர்ந்தெடுத்தோம் என்று இந்திய அரசு எந்த விளக்கமும் தரவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக கொவ்வடாவில் அமையவிருக்கும் அணு வுலைகள் உலகில் இன்றைய தேதியில் வேறு எங்கும் இயங்கவில்லை.

இந்த அரசியல் எதுவும் தெரியாமலேயே கொவ்வடாவை சேர்ந்த மக்கள் அணு உலைகளை எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது நிலத்தில் அமையவிருக்கும் அணுவுலைகள் அவர்களது வாழ்வாதாரத்தை விழுங்கத் தயாராக இருக்கும் பெரும்பூதம். அவர் களுடைய சாதாரண கோரிக்கையெல்லாம் அணுவுலைகளால் தங்களது எளிமையான, இயல்பான வாழ்க்கை திசை மாறிவிடக்கூடாது என்பதுதான்.

இன்று நேற்றில்லை, கொவ்வடாவில் அணு உலை அமையலாம் என்று பேச்சு எழத் தொடங்கிய நாளிலிருந்தே இந்த மக்கள் அதை எதிர்த்து கடுமையாக போராடி வருகிறார்கள். 2011ல் கொவ்வடாவில் அணு சக்திக்கு எதிரான மக்கள் கூட்டமைப்பு நடத்திய ஒரு கூட்டத்தில் பெருமளவில் பெண்கள் கலந்துகொண்டு தங்கள் பகுதியில் அணு உலை வருவதற்கு எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள்.

டிசம்பர் 2012 தொடங்கி ஒரு வருடம் தொடர் உண்ணாவிரதமும் இருந்தார்கள் அவர்கள். பல அமைப்புகளும் இந்திய அளவில் அணு சக்திக்கு எதிராக பிரச்சாரம் செய்துவரும் பல அறிவு ஜீவிகளும் இந்த தொடர் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டார்கள். இடிந்தகரை ஏற்படுத்திய தாக்கம் இந்த போராட்டம். இது மட்டுமன்றி இன்னும் பல விதங்களிலும் இந்த மக்கள் எதிர்ப்பை காட்டியிருக்கிறார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்னால் கொவ்வடாவில் அடித்த புயல் இவர்களை இன்னமும் கலங்க வைத்துக் கொண்டிருக்கிறது. பல குடிசைப்



பகுதிகளையும் படகுகளையும் ஒரு புயல் அடித்துச் சென்றுவிட முடியும் என்றால் அணு உலை விபத்து என்ன செய்யும் என்ற இவர்களது கேள்விக்கு இன்று வரையில் பதில் இல்லை. புகுஷிமாவில் விபத்துக்குள்ளான டாய்ச்சி அணு உலைகளை விட ஒன்றரை மடங்கு பெரிது கொவ்வடாவில் அமையவிருக்கும் அணு உலை. புகுஷிமாவில் ஏற்பட்டதுபோல ஒரு விபத்து நிகழ்ந்தால் அதன் பாதிப்பு புகுஷிமாவை விட பன்மடங்கு அதிகமாக இருக்கும் என்று அச்சப்படுகிறார்கள் இந்த பகுதியைச் சேர்ந்த ஆர்வலர்கள்.

பல வருடங்களாகவே இந்த மக்கள் அணு உலைகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந் தாலும் 2014ன் புயலுக்கு பிறகு கடலோரப் பகுதியில் அணு உலை அமைப்பதில் உள்ள ஆபத்துகளை உணர்ந்து திட்டத்தை அரசாங்கம் கைவிடும் என்ற இவர்களது எதிர்பார்ப்பு இன்று பொய்யாகியிருக்கிறது. இந்த எதிர்ப்பு அரசியல் வடிவம் பெற வில்லை என்பது வேண்டுமானால் இவர்களது போராட்டத்தின் தோல்விக்கு காரணமாக இருக்கலாம். ஆனால் எதிர்ப்பில் இருந்த உணர்வு நிஜம். அவர்களது பயங்கள் ஆதாரமற்றவை என்று புறம்தள்ள முடியாதவை. இதை அவர்களுடன் உரையாடும் யாரும் எளிதில் உணர முடியும்.

வளர்ச்சியின் பெயரில் அதிகார வர்க்கம் ஒரு திட்டத்தை கொண்டு வரும்போது அதை தமது எளிய வாழ்வாதாரத்தின் பேரில் எதிர்க்கும் பொதுமக்களுக்கு பெரும்பாலான இடங் களில் தோல்வியே கிடைக்கிறது. அதிகார வர்க்கம் பேசும் வளர்ச்சி என்பது யாருக்காக என்று தேய்ந்துபோன ஆனால் இப்போதும் பதில் இல்லாத கேள்வியைத்தான் கொவ்வடா போராட்டமும் எழுப்புகிறது. மக்களும் போராட்டத்தைவிட தயாரில்லை. அதிகாரவர்க்கத்தைப் பொறுத்தவரை அதை இந்தியாவை வளர்ந்த நாடாக முன்னிறுத்த ஒரு துருப்புச்சீட்டு மட்டுமே. ஆனால் போராட்டக்காரர்களைப் பொறுத்தவரையில் அது அவர்களது, அவர்களது சந்ததியினரது வாழ்க்கையும் அதன் ஆதாரமும் சார்ந்தது. அவற்றின் மீது தொடுக்கப்படும் வளர்ச்சி மோகத்தின் வேட்டையை தோல்விக்கு முகம் கொடுத்துக்கொண்டாவது எதிர்க்க வேண்டிய நிலையிலேயே அவர்கள் இருக்கிறார்கள்.

இது தெலுங்கு தேசமா அல்லது அணுவுலை தேசமா என்கிற கோஷத்தை முன்வைத்து அணுவுலைகள் அற்ற ஆந்திராவை நோக்கிய தங்களது போராட்டப் பயணத்தை தொடங்கி யிருக்கிறார்கள் கொவ்வடா மக்கள். மிகப்பெரிய அதிகார மையத்துக்கு எதிரான போராட்டம் அது என்பதை அவர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். அந்த அதிகார மையம் அவர்களுக்கானதல்ல. அவர்கள் வாக்களித்து தேர்ந்தெடுத்த அரசும் அவர்களுக்கானதல்ல.

இந்த போராட்டத்தில் வெற்றி கிடைக்காமல் போகலாம். ஆனாலும் எதிர்ப்புணர்வை காட்ட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். "எங்கள் குரல் கேட்கப்பட வேண்டும், எங்கள் துயரம் உணரப்பட வேண்டும், எங்கள் கண்ணீருக்கு பதில் வேண்டும், எங்கள் எதிர்ப் புக்கு நீதி வேண்டும்" என்பதே அந்த மக்களின் எதிர்பார்ப்பு. அது இடிந்தகரை அவர்களுக்கு கற்றுத்தந்த பாடம். ●



தமிழில்: **திண்டி பரத்**

# இந்திய அரசமைப்பு சட்டத்தின் நோக்கங்களை மீட்டெடுக்கவே போராடுகிறோம்...

## பெஸ்வாடா விஸ்சனுடன் நேர்காணல்

மத்திய அரசு சில மாதங்களுக்கு முன்பு பத்ம விருது ஒன்றை கொடுப்பதற்காக அணுகிய போது, "எனக்கு நேரமில்லை" என்று மறுத்தவர் பெஸ வாடா வில்சன். "இந்த அரசிடமிருந்து எனக்கு எந்தவொரு விருதும் வேண்டாம்" என்று கூறிய வில்சனுக்கு 2016ம் ஆண்டுக்கான ரமோன் மகசேசே விருது வழங்கப் பட்டுள்ளது. மனித மலம் அள்ளுபவர்களின் விடுதலைக் காகவும் அதைப்போன்ற இழிவான நடை முறைகளை ஒழிப்பதற்காகவும் சஃபாய் கர்மாச் சாரி அந்தோலன் என்ற அமைப்பை நடத்தி வருபவர் பெஸவாடா வில்சன். பிலிப்பைன்ஸ் அதிபராக பதவி வகித்த ரமோன் மகசேசே பெயரால் கடந்த சுமார் 60 ஆண்டுகளாக ரமோன் மகசேசே விருது வழங்கப்படுகிறது. ஆசியாவின் நோபல் பரிசு என்றும் இவ்விருது அழைக்கப்படுகிறது.

"வெறுமென துடைப்பத்தை எடுத்து சுத்தம் செய்வதுபோல பாசாங்குக் காட்டுவது நிதர்சனத்தை மாற்றிவிடாது" என்று கடுமையான விமர்சனங்களை முன்வைக்கும் வில்சன், "பட்டியல் இனத்தவர்களின் அமைப்பு சார்ந்த ஒதுக்குதலே பிரச்சினைக்குக் காரணம் என்பதை உணர்ந்து கொள்ளாமல் 'தூய்மை இந்தியா' திட்டத்திற்கு அரசு கொடுக்கும் ஆடம்பர விளம்பரங்கள் எந்த பலனையும் தராது!" என்கிறார்.

"நாங்கள் தான் கழிவறைகளை சுத்தம் செய்ய வேண்டும்; எம் மக்கள்தான் கழிவு நீர் தொட்டிக்குள் மூச்சடைத்து இறப்பதும். உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை என்றால் தேசத்தில் ஆங்காங்கே பார்க்கப்படும் தலித் எழுச்சி நாடெங்கும் பரவலாகி, தலித்கள் எந்தவித துப்புரவு பணியிலும் ஈடுபடமாட்டார்கள்" என்று

எச்சரிக்கிறார் வில்சன். இந்தியாவின் மத்திய அரசு அளிக்க முன் வந்த விருதை வேண்டாம் என்று மறுத்த பெஸ வாடா வில்சன் ரமோன் மகசேசே விருதை ஏற்றிருக்கிறார். இதையொட்டி "தி ஹிந்து சென்டர் ஃபார் பாலிடிக்ஸ் அண்ட் பப்ளிக் பாலிஸி" சார்பில் வித்யா சுப்ரமணியன் மேற்கொண்ட நேர் காணலின் ஒரு பகுதி இங்கே.

**விருதுகள் உங்களுக்குப் பெரிதில்லை. இருப்பினும், இது உங்களுக்கும் உங்கள் அமைப்புக்கும் கிடைத்த சர்வதேச அங்கீகாரம். உங்கள் போராட்டங்களை இது முன் நகர்த்துகிறதா?**



இந்தவிருது எனக்கு முக்கியம்தான். ஏனென்றால், மனித மலம் அள்ளுவது எந்த வகையிலும் சாதி சார்ந்த ஒன்றுதான் என்பதை இந்த விருது ஒப்புக்கொள்கிறது. எனவே இது முக்கியத்துவம் பெறுகிறது. இந்த விருதின் சான்றிதழில் "மலம் அள்ளுவது இந்தியாவின் மனிதத் தன்மை மீது பீடித்திருக்கும் நோய். கட்டமைக்கப்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுகள் மூலம் தலித்கள், இந்தியாவின் 'தீண்டத்தகாதவர்கள்' மீது சுமத்தப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தியாவில் சாதிய ரீதியான ஒடுக்குமுறை இருப்பது பதிவு செய்யப்படுகிறது. எனவே இந்த விருது மிகவும் முக்கியமானது.

தூய்மை இந்தியா (Swachh Bharat) திட்டத்தினால் உருவாக்கப்பட்ட சத்தங்களின் மூலம் மூழ்கடிக்கப்பட்ட எங்கள் குரலை இந்த விருதிலிருந்து கண்டெடுத்துள்ளோம். பிரதமர் துடைப்பத்தைக் கையிலெடுத்து மற்றவர்களையும் இணையுமாறு அறைகூவல் விடுத்தார். இதன் மூலம், சுத்தம் செய்வது எல்லோரின் கடமை என்ற செய்தி முன்மொழியப்பட்டது. இது கேலிக்குரிய விஷயம். மலம் அள்ளுவதிலிருந்து கழிவுநீர் தொட்டியில் இறங்குவது, குப்பைகளை அப்புறப்படுத்துவதுவரை, சுத்தம் செய்யும் வேலை என்பது பாரம்பரியமாகவும், பிரத்யேகமாகவும் தலித் சமூகத்தின் ஒரு சாராருக்கே அளிக்கப்பட்டு வந்துள்ளது. ஒரு புதிய சுத்தம் செய்யும் திட்டத்தை அறிவிப்பதால் இது மாறி விடுமா?

தூய்மை இந்தியா திட்டத்திற்கு எங்கள் எதிர்ப்பு பல நிலைகளில் இருக்கிறது. ஆனால், எல்லாவற்றுக்கும் அடிநாதமாக மிகவும் உணர்வற்ற வகையிலான அணுகுமுறையின் மேலேயே எங்கள் கோபம் அதிகமாக உள்ளது. பிரதமரும் அவருடைய மந்திரிகளும் துடைப்பத்தைக் கையிலெடுத்தபோது, அதை அழகியல் (விளம்பர) தன்மையுடையதாக மாற்றினர். எங்களைப் பொறுத்தவரை, துடைப்பம் ஒடுக்கு முறையின் குறியீடு, இந்தச் சமூகம் எங்கள் மீது திணிக்கும் மனிதத்தன்மையற்றச் செயல். அம்பேத்கர் எங்களுக்கான முழக்கமாக, "துடைப்பத்தை உதறுங்கள், பேனாவை எடுங்கள்" என்று கூறியிருக்கிறார். எங்கள் பெண்கள் அவர்களாகவே முன் வந்து துடைப்பத்தை உதறினார்கள், மலக்கூடையை எரித்தார்கள். நாங்கள் முன்னேறிக் கொண்டிருந்தோம். பிரதமரின் அறைகூவல் எங்களை முற்றிலுமாக வேறு ஒரு நிலையில் பாதித்தது.

என் அனுபவத்தில் கூறுகிறேன், என் அம்மா நான் துடைப்பத்தை எப்போதும் தொடக்கூடாது என்றார். ஆகையால் பிரதமரின் தூய்மை இந்தியா திட்டத்திற்கு துடைப்பத்தை எடுத்துப் பெருக்குவதென்பதை நான் ஒருபோதும் செய்ய மாட்டேன். அவர், "நாம் எல்லோரும் சுத்தப்படுத்துவோம்" என்று சொல்லியிருக்கக்கூடாது. இதுவரை துப்புரவு பணியில் 5000 வருடங்களாக ஈடுபட்டுவரும் எங்களுக்கான முழக்கம் வேறாக இருந்திருக்க வேண்டும். பிரதமரோ, அவருடைய அதிகாரிகளோ எங்கள் பரிதாபகரமான நிலையைப் பற்றி நினைத்திருப்பார்களா? எங்கள் முன்னேற்றத்தை பற்றிச் சிந்தித்திருப்பார்களா? அவர் தூய்மை இந்தியா திட்டத்திற்கு பெரும் தொகையை ஒதுக்குவதாக அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்புடன், அவர் துப்புரவு பணியாளர்களுக்கென்று ஒரு தொகையை ஒதுக்கியிருக்க வேண்டாமா? அதாவது, ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்தார் என்பதற்காகவே மலம் அள்ளுதல் மற்றும் துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்த, ஈடுபட்டிருக்கும் மொத்த சமூகத்தினரையும் இதில் சேர்க்க வேண்டும். அரசாங்க அமைப்புகளின் கீழா அல்லது தனியார் அமைப்புகளின் கீழா என்று பாரபட்சம் பார்க்காமல் சேர்க்க வேண்டும்.



முரணைப் பாருங்கள், பிரதமரின் அறை கூவலை மதித்து குறைந்தபட்சம் ஆரம்பத் திலாவது அனைவரும் சுத்தப்படுத்துகிறேன் என்று மிகவேகமாக களத்தில் இறங்கினர். இறுதியில், கிராமப்புறங்களிலிருக்கும் பள்ளியில் பால்மிகி (தலித்கள்) மாணவ மாணவிகள்தான் பள்ளியை சுத்தப்படுத்த ஆசிரியர்களால் பணிக்கப்பட்டனர்.

**அது எப்படி உங்களுக்குத் தெரியும்?**

பால்மிகி சமூகத்தைச் சேர்ந்த பெற்றோர் களிடமிருந்து வரும் செய்திகளின் அடிப் படையிலேயே இதைக் கூறுகிறேன் (90 சதவீத துப்புரவு பணியாளர்கள் பால்மிகி சமூகத் திலிருந்தே வருகிறார்கள்). மிக அதிர்ச்சியடைய வைத்த விஷயம் இது. பல பத்தாண்டுகளாக பெற்றோர்களிடம் குழந்தைகளைப் படிக்க வைக்குமாறு வலியுறுத்தி வருகிறோம். ஆனால் நடந்ததைப் பாருங்கள்? மக்களின் மனதில், சுத்தம் செய்யும் பணி இவர்களுக்கானது என்று அழுத்தமாகப் பதிந்துள்ளது. குப்பைகளைச் சேகரிப்பது, கழிவறைகளைச் சுத்தம் செய்வது எங்கள் சாதியினருக்கே உரியது என்று நினைக் கிறார்கள்.

**பல இடங்களில் தலித் மக்கள் ஒன்றிணைந்து, வீதிக்கு வந்து போராடுவதை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

சாதி ஏற்றத்தாழ்வுகளை இனிமேலும் பொறுத்துக் கொள்ள முடியாது என்று அரசுக்கு விடும் எச்சரிக்கை இது. சட்டத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, நாட்டின் ஒரு சாரார் மற்றவர்களைத் தாக்குவதற்கு யார் உரிமை கொடுத்தது?

இது தலித்கள் சம்பந்தப்பட்ட விஷயம் மட்டுமல்ல. இது அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கம் மற்றும் சரிசமமாக வாழ்வதற்கான அடிப்படை உரிமையை நிலைநாட்டுதல் பற்றியது. எனவே, தலித்களை சமமானவர்களாக மதிக்க சமூகத்தைச் சீர்திருத்த வேண்டும் என்று கூறுபவர்களின் கூற்றை நான் ஏற்கமாட்டேன். நம் அரசியலமைப்பு சட்டத்தின் கீழ், சம உரிமையும் நலிவடைந்தப் பிரிவினரைக் காப்பதும் நாட்டின் முக்கிய கடமை. இது எப்போதும் நடைமுறையில் இல்லை என்றாலும், நாட்டை ஆளுபவர்கள் கடந்த இரண்டு வருடங்களாக முற்றிலும் அவர்கள் கடமைகளைத் தட்டிக் கழித்திருக்கிறார்கள். பசுப் பாதுகாப்பு என்ற பெயரில் இந்துத்துவ அடிப்படைவாதிகள்

அரசை நிலைகுலைத்துவிட்டு, சட்டத்தைத் தங்கள் கைகளில் எடுத்துள்ளனர்.

இன்று பசு மாட்டுச் சடலங்களை அப்புறப் படுத்த மறுக்கும் தலித்களின் செயல் பல வகைகளில், மலக் கூடையை எரித்த எங்கள் பெண்கள் செயலை ஒத்திருக்கின்றன. வரும் காலங்களில் எங்கள் மக்களின் அதிகமானோர், அவர்கள் பிறந்த சாதியினாலேயே திணிக்கப்படும் துப்புரவுப் பணியை செய்ய மறுப்பார்கள்.

**திறந்த வெளியில் மலம் கழிப்பதை தடுக்கும் நோக்கில் கிட்டத்தட்ட 80 இலட்சம் கழிவறைகள் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ளன. பல தாராளவாதிகளால் ஒப்புக்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் வாதம், இது தேசத்திற்குத் தேவை மற்றும் நன்மை பயப்பவை என்பதாகும். உங்கள் பொது கூட்டங்களில் பலவற்றிலும், உங்கள் சமீபத்திய நேர்காணல்களிலும், அதிக கழிவறை அதிக கழிவு நீர் தொட்டியை உருவாக்கும்; கூடவே அதிக இறப்புகளை உருவாக்கும் என்று கூறியிருக்கிறீர்கள். ஆனால் அரசாங்கமோ, கிராமப்புறங்களில் கட்டப்படும் இரு தொட்டி கழிவறை முறையானது, மலம் அள்ளுவதற்கான தேவையை முற்றிலுமாகப் போக்கிவிடும் என்று கூறுகிறது. இரு தொட்டி கழிவறை தானாகவே நிர்வகித்துக் கொள்ளும் திறனுடையது, இரண்டாவது தொட்டி நிறைவடையும்போது, முதல் தொட்டியில் இருக்கும் கழிவு-மலம் உரமாக மாறியிருக்கும், இதன் மூலம் அதை நீக்குவதற்கு தேவையில்லை அல்லவா?**

கழிவறைக் கட்டுவது எங்களுக்கு எந்த வகையிலும் உதவப் போவதில்லை, அது எங்களை இன்னும் பின்னோக்கியே இட்டுச் செல்லும். கழிவகற்றும் மொத்த செயல்பாடும் இயந்திரமயமாக்கப்பட வேண்டும். தெளிவான திட்டமிடல் இல்லையென்றால், பெரிய மாற்றம் எதுவும் நிகழப் போவதில்லை. கிராமப்புறங்களில் கழிவறையை வீட்டுக்குள்ளே கட்டும் பழக்கம் இல்லை. வீட்டு வளாகத்துக்குள் கழிவறை கட்டுவதை அசுத்தம் விளைவிப்பதாகப் மக்கள் பார்க்கிறார்கள். இதன் அபாயம், எங்கள் சாதி மக்களே கழிவறைகளை சுத்தம் செய்யப் பணிக்கப்படுவர். நீங்கள் சொல்வது ஆய்வின் மூலமும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ரிசர்ச் இன்ஸ்ட்டியூட் ஃபார் கம்பேஷ்னேட் எக்கனாமிக்ஸ் செப்டம்பர் 2015—ல் வெளியிட்டுள்ள ஆய்வானது, தீண்டாமைக்கும் திறந்த வெளியில் மலம் கழிப்பதற்கும் உள்ள ஆழமான உறவை சுட்டிக்காட்டுகிறது! யார் தீண்டாமையைக் கடைபிடிக்கிறார்களோ, அவர்களேதான் நேரடியாகவோ மறைமுகமாகவோ, திறந்த வெளியில் மலம் கழிப்பதைச் செய்கிறார்கள். 'சாதி, தூய்மை, அசுத்தம் மற்றும் திறந்தவெளியில் மலம் கழித்தலின் புதிர்' என தலைப்பிட்ட அந்த ஆய்வு: "மற்ற நாடுகளில், கழிவுநீர் தொட்டியை சுத்தப்படுத்துவதென்பது விரும்பத்தகாத அல்லது கீழ்நிலை வேலையாகக் கருதப்பட்டாலும், அதை நிர்மாணிக்க சந்தை விதிமுறைகள் உள்ளன. ஆனால், சாதி இந்துக்களுக்கோ கழிவுநீர் தொட்டியைச் சுத்தப்படுத்துவது என்பது நினைத்துப் பார்க்கக் கூட முடியாத ஒரு விஷயமாக உள்ளது, அல்லது ஒரு தலித்தைத் தவிர வேறு யாரும் செய்யக் கூடாதென்றே கருதுகிறார்கள்" மேலும் அந்த ஆய்வில் "பல கிராம வாசிகள், கழிவுநீர் தொட்டி நிரம்புவதற்கு முன்பே அது அசுத்தப்பட்டுவிடுவதாகக் கருதி, அடிக்கடி சுத்தம் செய்கின்றனர். இதன் விளைவாக கிராமப்புறங்களில் கட்டப்படும் கழிவுநீர் தொட்டி பல பத்தாண்டுகளுக்கு நிறை வடையாதபடிக்குப் பெரிதாகக் கட்டப்படுகிறது" என்று கூறப்பட்டுள்ளது.

அது மிகச்சரியான கருத்து. அடிமட்ட நிலைகளில் மாற்றங்களை உருவாக்காமல், கழிவறை கட்டப்படும் படலம் தொடர்ந்தால், இன்றிருப்பதைவிட எங்கள் நிலைமை இன்னும் மோசமாகவே ஆகும். அவர்கள் வீட்டினுள்ளோ அல்லது வீட்டின் அருகாமையிலோகூட கழிவறைகளைக் கட்ட அனுமதிக்காத மக்கள், அதைக் கண்டிப்பாக அவர்களே சுத்தம் செய்ய மாட்டார்கள். எனவே நாங்கள் இரண்டு இடங்களில் தேவைப்படுகிறோம்: பல இலட்சம் கழிவறை பான்களை சுத்தம் செய்வதற்கு. ஒரு கழிவறை பலரால் உபயோகப்படுத்தப்படும்போது, துர்நாற்றம் வீசுவதாகவும் கறை படிந்ததாகவும் மாறுவது இயல்புதான். அதுவும், தண்ணீர் பற்றாக்குறையுள்ள நம் நாட்டில் இது அதிகமாக இருக்கும். எங்கள் மக்களைத் தவிர யார் இதைச் சுத்தம் செய்வர்?

இரண்டாவதாக, கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்வதற்கு எங்களைப் பணிப்பார்கள். நான் கூற வரும் விஷயம், தொட்டியைச் சுத்தம் செய்யும்போது அதிலிருக்கும் மலம் அழுகிவிடும் என்று கூறினாலும், உண்மையில் மக்கள் 'தூய்மை' எண்ணம் காரணமாக அதை அடிக்கடி சுத்தம் செய்யவே எத்தனிப்பார்கள்.



எங்களைத் தவிர யார் இந்தத் தொட்டியைச் சுத்தம் செய்வது?

மேலும் பெரும்பான்மையான நகர்ப் புறங்களில், நிலத்தடி கழிவுநீர் வடிகால் அமைப்பு இல்லாததால், அதிக கழிவறை, அதிக கழிவு நீர் தொட்டியையே உருவாக்கும். நாங்கள் மேற்கொண்ட மாதிரி கணக்கெடுப்பின்படி, கிட்டத்தட்ட 1200 பேர் கழிவுநீர் தொட்டிகளிலும் சாக்கடைகளிலும் மூச்சுத் திணறி இறந்திருக்கிறார்கள். நகர்ப்புறங்களில், கழிவுநீர் தொட்டி பெரும்பான்மையாக நிறுவப்பட்டால், இந்த எண்ணிக்கைக் கற்பனைக்கு எட்டாதவாறு அதிகரிக்கும்.

**நான் அறிந்தவரை, கழிவுநீர் தொட்டிகள் சக்ஷன் பம்ப் என்ற உறிஞ்சும் கருவி மூலமே காலி செய்யப்படுகிறது, இல்லையா?**

ஆம், அது நடக்கிறது. ஆனால், சக்ஷன் பம்ப் பொறுத்தப்பட்ட வண்டியை கூப்பிடுவதற்கு நிறைய செலவாகும். இதைத் தவிர்ப்பதற்காக நாங்களே சுத்தம் செய்ய பணிக்கப்படுகிறோம் என்பதுதான் உண்மை. தினந்தினம் கழிவுநீர் தொட்டியின் மூலம் இறப்பு நடக்கிறது என்ற ஆதாரம் போதாதா, நாங்கள்தான் ஒவ்வொரு நாளும் சுத்தம் செய்ய அமர்த்தப்படுகிறோம் என்பதை நிருபிப்பதற்கு? எனவே எங்கள் பயமே, தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம், நீங்கள் மேலும் நிறைய மக்களுக்கு மரண அழைப்பு விடுக்கிறீர்கள் என்பதே.

**பிறகு என்னதான் தீர்வு? திறந்தவெளி மலம் கழித்தலை முடிவுக்குக் கொண்டு வர வேண்டாமா, சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டாமா?**

கண்டிப்பாக. முதலில் ஒழுங்கான அமைப்பைக் கட்டமையுங்கள். நாட்டைச் சுத்தப்படுத்துகிறேன் எனக் கூறிக்கொண்டு, கடுமையான வேலைகளை எங்களிடமே சுமத்தும் நடைமுறை இல்லாதவாறு உறுதி செய்ய வேண்டும். நகரங்களில் நிலத்தடி கழிவுப்பொருள் வடிகால் அமைப்பை உறுதி செய்யுங்கள். இது சாத்தியமில்லை என்றால், பாதுகாப்புச் சாதனங்களைக் கொடுத்தோ கொடுக்காமலோ, மனிதர்கள் மூலமாக கழிவு நீக்கப்படுவதை முழுவதுமாகத் தடை செய்யுங்கள். 2013 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட "மனிதக் கழிவற்றும் பணியில் ஈடுபடுத்தலை தடுத்தல் மற்றும் அவர்களுக்கு மறுவாழ்வளித்தல் சட்டம்" (The Prohibition of Employment As Manual Scavengers And Their Rehablitation Act, 2013) மற்றும் விதிகள், எங்கள் தொடர்ச்சியான பணிக்கும், போராட்டங்களுக்குமான விளைவு. இது 1993 ஆம் ஆண்டு சட்டத்தின் பிற்போக்குத் தனங்களையும், செயலற்ற தன்மைகளையும் நீக்கியுள்ளது. ஆனால் 2013 ஆம் வருடச்

சட்டத்தின் பலனாக நடந்ததென்னவோ, கழிவுநீர் தொட்டிகளிலும் சாக்கடைகளிலும் இறங்குபவர்களுக்கு பாதுகாப்புச் சாதனங்கள் கொடுப்பது மட்டுமே.

**ஏன்? ஏன் ஒருவர் கழிவுநீர் தொட்டிகளிலோ சாக்கடை களிலோ இறங்க வேண்டும்? யார் இந்தப் பாதுகாப்புச் சாதனங்கள் விதிமுறைகளை மதிக்கிறார்கள்?**

பிரச்சினை என்னவென்றால் அரசு ஒரு யோசனையிலிருந்து மற்றொன்றுக்குத் தாவிக் கொண்டே இருப்பதுதான். நமது நகரங்களில் சரியான வடிகால் அமைப்புகள் இல்லாமல் மோசமாகஉள்ளன.ஆனால்இவற்றை சரிசெய்வதற்கு பதிலாக ஸ்மார்ட் நகரங்களை உருவாக்க ஆட்சியில் இருப்பவர்கள் ஆசைப்படுகிறார்கள். நமது இரயில்வே துறைக்கு பயோ—டாய்லட்ஸை உருவாக்க 2019 வரையாவது ஆகும். இப்படிச் செய்வதன் மூலமே தண்டவாளத்திலிருந்து மனிதர்கள் மலம் அள்ளுவதை ஒழிக்க முடியும். ஆனால் இதை துரிதப்படுத்துவதற்கு பதில், புல்லட் இரயில்களைக் கொண்டு வர ஆட்சியாளர்கள் அவசரப்படுகிறார்கள்.



**2013-ல் இயற்றப்பட்ட புதிய சட்டம்**

**உங்கள் கடின உழைப்புக்குக் கிடைத்த வெற்றி. அந்தச் சட்டம் வெளிப்படையாகவே சாதிய ஏற்றத்தாழ்வுகள் பற்றியும், மலம் அள்ளுவதில் தலித்களே பணிக்கப் படுகிறார்கள் என்றும் கூறுகிறது. ஆனால் அந்தச் சட்டத்தில் பல குறைகள் இருப்பதாகவும் நீங்கள் திருப்தியடையும் அளவுக்கு அவை தீர்க்கப்படவில்லை என்றும் கூறுகிறீர்கள். ஏன்?**

அந்தச்சட்டத்திலேயே குறைகள் இருக்கின்றன. அதை நடைமுறைப் படுத்துவதிலும் மிகப்பெரிய பெரிய சிக்கல் இருக்கிறது. ஆனால் 2013 ஆம் ஆண்டுச் சட்டத்தின் மிகப் பெரிய குறைபாடு, இந்தச் சட்டம் அமலுக்கு வரும்போதோ அல்லது அதற்குப் பிற்பாடோ, மலம் அள்ளுபவர்களை (மட்டும்) மலம் அள்ளுதலில் “ஈடுபட்டுள்ள (அ) பணியமர்த்தப்பட்டுள்ள” நபர் என்று வரையறுப்பது தான். இதை உறுதி செய்வதுபோல இச்சட்டத்தின் 10ஆம் பிரிவு, (மனிதக் கழிவகற்றும் வேலைக்கு மனிதர்களை பணியமர்த்தும்) எந்தக் குற்றமும் அது நடைபெற்ற காலத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் பதிவு செய்யப்பட்டால்தான் குற்றமாக ஏற்கப்படும் என்று கூறுகிறது. அதாவது இந்தச் சட்டம் அமலுக்கு வரும் முன்பே, இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களை இந்த சட்டம் அங்கீகரிக்கவில்லை. மேலும் இச்சட்டம், வேறு வாழக்கைக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் மலம் அள்ளும் வேலையிலிருந்து தானாக வெளியேறியவர்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை.

எங்கள் அமைப்பு மூலமாக மனித வரலாற்றிலேயே மிகவும் இழிவான தொழிலாக கருதப்படும் மலம் அகற்றும் வேலை செய்து வந்தவர்களை அத்தொழிலிருந்து வெளியேறுமாறு வலியுறுத்தினோம். “உங்கள் அவலங்களிலிருந்து விடுதலைப் பெற மற்றவர்களுக்காகக் காத்திருக் காதீர்கள். நீங்களே அதைச் செய்யுங்கள்” என்றோம். எங்களது வலியுறுத்தலை ஏற்று, இந்த தொழிலிருந்து வெளியேறியவர்களில் 90 சதவீதம் பேர் பெண்கள். இப்போது, இந்தப் பெண்களுக்கெல்லாம் என்ன ஆனதென்று பாருங்கள். இந்தச் சட்டத்தின் கீழும் அதன் விதிமுறைகளின் கீழும் மறு வாழ்வுக்காக ரூ.40,000 கொடுக்கப்படும். இந்த சட்டம் வருவதற்கு முன்பு, தானாக முன்வந்து இந்தப் பணியை விட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கிடையாது. இதைப் பார்க்கும் போது, அவர்களுக்குத் தெரிந்த ஒரே வேலையைத் துறந்தவர்களின் துணிவு மெச்சத்தக்கது. அதுவும், எதிர்காலம் எப்படி இருக்குமென்று துளியும் பயப்படாமல் அதைச் செய்தார்கள்.

இந்த முரணைப் பாருங்கள்: இந்தச் சட்டத்தின் கீழ் நிவாரணம் மற்றும் மறு வாழ்வுக்கான கணக்கெடுப்பு முடியும்வரை மலம் அள்ளுபவர்கள் அவர்கள் பணியைத் தொடர்ந்தே ஆக வேண்டும். இது நீண்ட காலக் காத்திருப்பாக மாறக்கூடும். ஏனென்றால் அதிகாரத்தில் இருப் பவர்கள் அவ்வளவு சீக்கிரம் மலம் அள்ளுபவர்களை அந்தப் பணியில் இருப்பதாக ஒப்புக் கொள்ள மாட்டார்கள். உச்ச நீதிமன்ற விசாரணையின் போது, எங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தின் மூலமே இதை நாங்கள் உறுதியாகக் கூறுகிறோம். அரசு தரப்பு வழக்கறிஞர், மலம் அகற்றும் பணியில் மனிதர்கள் ஈடுபடுத்தப்படவில்லை என்று

கூறினார். நாங்கள் சமர்ப்பித்த புகைப்பட ஆதாரங்களையும் அவை பழையது என்று கூறி ஏற்க மறுத்தார். இந்த தொழிலாளர்கள் பொய் சொல்லவில்லை என்பதை நிரூபிக்க, நீதிமன்ற விசாரணை நடந்த நாளன்றே அவர்கள் வேலை செய்த கழிப்பறைகளை பின்புலமாகக் கொண்டு புகைப்படங்கள் எடுத்தனர். ஆதாரத் துக்காக, புகைப்படம் எடுக்கையில் அன்றைய செய்தித் தாளினை சுவரில் ஒட்டி எடுத்தனர். இப்போது புரிகிறதா? நடைமுறைகள் எவ்வளவு கீழ்த்தரமாக, இழிவுடன், உணர்வற்று பின்பற்றப் படுகிறதென்று.

**மார்ச் 2014இல் உச்சநீதிமன்ற தீர்ப்பில் கழிவுநீர் தொட்டி மற்றும் சாக்கடையைச் சுத்தம் செய்வது மனிதர்களே மலம் அள்ளுவதற்குச் சமம் என்று கூறி, அந்தப் பணியில் ஈடுபட்டு இறந்தவர்களின் குடும்பத்தார்க்கு 10 இலட்சம் ரூபாய் இழப்பீடாகக் கொடுப்பதாகக் கூறியிருந்ததை உங்களுடைய அமைப்பு பிற செயற்பாட்டாளர்களும் வரவேற்றீர்கள். ஆனால், இப்போதோ அது உங்களுக்கு மகிழ்வளிப்பதாக இல்லை, ஏன்?**

மலக்கழிவு தொட்டிகளையோ, குழாய் களையோ சுத்தம் செய்யும்போது கொல்லப் பட்டவர்களுக்கு பத்து லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், இதுபோன்ற உயிரிழப்புகளுக்கு யார் பொறுப்பேற்பது என்று கூறவில்லை. இந்த மரணத்திற்கு காரண மானவர்கள் சிறை செல்லவேண்டும் என்று உச்சநீதிமன்றம் சொல்லவில்லை. இந்த வழக்கை மூன்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகள் மற்றும் 18 நீதிபதிகள் சுமார் 11 வருடங்கள் விசாரித்தனர்.

ஆனால் இறுதியில் யாராவது இறந்தால் அவர்களின் குடும்பத்திற்கு இழப்பீடாக 10 இலட்சம் ரூபாய் கொடுங்கள் என்று மட்டும்தான் கூறினர். மலம் அள்ளுபவர்களின் உயிர் அவ்வளவு மலிவானதா? இதன் பெயர் நீதியா? இவ்வாறான இறப்புகளை கொலையாகக் கருதக்கூடாதா?

2013ம் ஆண்டு சட்டம் குற்றவாளிகளை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று தெளிவாகக் கூறுகிறது. மனிதர்களை மலம் அள்ளுமாறு பணிப்பவர்களுக்கு அது சிறை வாசத்துடன் கூடிய தண்டனையை வழங்க பரிந்துரைத்தது.மேலும்“அபாயகரமான வகையில் மலக்கழிவு தொட்டி மற்றும் குழாய்களை சுத்தம் செய்ய பணிப்பவர்களுக்கு” சிறைவாசத்துடன் கூடிய தண்டனையை வழங்க வழி செய்தது. இந்தத் தீர்ப்பின்படி, இந்த குற்றத்தை செய்ததாக இதுநாள்வரை எந்த ஒரு நபரோ, அதிகாரியோ விசாரணைக்குக் கூட உட்படுத்தப்படவில்லை. நாம் அனைவரும் அறிந்ததுபோல, இன்றுவரை சில நகராட்சி அமைப்புகள் மனிதர்களையே மலம் அள்ளுவதற்கு அமர்த்துகின்றன. அதைப்போலத்தான் நகர நிர்வாகமோ, மாவட்ட நிர்வாகமோ எங்கள் சமூக மக்களை அபாயகரமான மலக்கழிவு தொட்டிக்களையும், குழாய்களையும் சுத்தம் செய்ய அனுப்புகிறார்கள். மலக்கழிவு தொட்டிக்குள்ளோ, குழாய்க் குள்ளோ ஒருவர் இறந்தால், அதற்கு யார் பொறுப்பு? எனவே, இந்த உயிரிழப்புகளை கொலையாகக் கருதச் சொல்கிறோம். இந்த குற்றம்புரிந்த அதிகாரிகளை 2013ம் ஆண்டுச் சட்டத்தின் கீழும், பட்டியலினத்தவர்கள் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 1989— ன் கீழும் தண்டிக்க வேண்டும் என்கிறோம்.

விசாரணை நடந்து கொண்டிருந்தபோது, உச்ச நீதிமன்றம் எங்கள் பெண்கள் மலம் அள்ளுவதாகச் சொல்வது பொய் என்றது. நான் முன்னரே சொன்னதுபோல அவர்களின் குற்றச்சாட்டை மறுக்க, அந்தப் பெண்கள் கழிப்பறையின் சுவரில் அன்றைய செய்தித் தாளை பின்புலமாகக் கொண்டபடி புகைப்படம் எடுத்தனர். ஆனால், நாங்கள் பொய் சொல்வதாகக் குற்றம் சாட்டிய அதிகாரி ஏன் தண்டிக்கப்படவில்லை?

எந்த உயிரிழப்பையும், எந்த காயத்தையும் இழப்பீடு கொடுத்து முடித்துவிடலாம் என்ற போக்கு நிலவுகிறது. இந்த வழக்கின் தீர்ப்பை கேட்பதற்காக தங்கள் சொந்த ஊரிலிருந்து டெல்லிக்கு வந்த பெண்கள், இந்தக் குற்றங் களுக்காக எவரொருவரும் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்பதை அறிந்து கண்ணீர் சிந்தினர்.

**2013ம் ஆண்டு சட்டத்தினாலும், உச்ச நீதிமன்ற தீர்ப்பினாலும் ஏதாவது நேர்மறையான தாக்கம் உண்டாயிற்றா?**

2013ம் ஆண்டு சட்டத்தைப் பற்றியும் உச்ச நீதிமன்ற தீர்ப்பைப் பற்றியும் மாவட்ட நிர்வாகத்தினர் எவ்வளவு அறிந்துள்ளனர் என்று

தெரிந்தால் நீங்கள் அதிர்ச்சியடைவீர்கள். 1993ம் ஆண்டு சட்டம், மலம் அகற்றும் வேலைக்கு மனிதர்களை அமர்த்துபவர்கள் மற்றும் வேலை செய்பவர்கள் ஆகிய இருவரையும் குற்றவாளி என்றது. 2013ம் ஆண்டு சட்டம் பணியாளர்களை நீக்கி, வேலைக்கு அமர்த்துபவர்களை மட்டுமே குற்றவாளிகள் எனக் கூறியது. இது தனிநபர், தனியார் அமைப்பு அல்லது அரசாங்க அமைப்பு ஆகிய அனைவருக்கும் பொருந்தும்.

ஆயினும், இன்றுவரை பெரும்பான்மையான மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, 2013ம் ஆண்டு சட்டம் நிறைவேறியது தெரியாது. இந்த சட்டத்தின்கீழ் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிப்பதற்காக மலம் அகற்றும் தொழிலாளர்கள் குறித்த புள்ளிவிவரத்தை சேகரிக்க வேண்டிய அரசு அமைப்புகள், சட்டத்தை சரிவர புரிந்து கொள்ளாமல் மலம் அகற்றும் தொழிலாளர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று விளக்கம் கேட்டு நோட்டிஸ் அனுப்புகின்றன.

உதாரணத்திற்கு, ஏப்ரல் 2015இல், உத்தரா கண்ட் உதம்சிங் நகரிலுள்ள ஜஸ்புர் முனிசிபல் கார்ப்பரேஷன், கமலா என்பவருக்கு மனித மலம் அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த, ஏன் அவர் தண்டிக்கப் படக்கூடாது என்று விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியது.

2013ம் ஆண்டு சட்டத்தையும் உச்ச நீதிமன்ற தீர்ப்பையும் கேலி செய்யும் விஷயம் இது. ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்பட்டவர்களையே குற்றவாளிகளாக பாவித்து தண்டனை வழங்கப்படும் என்று கூறுவது மேலும் கொடுமை அல்லவா ?

**நாம் ஆரம்பித்த இடத்திற்கே மறுபடியும் வந்திருக் கிறோம். உனா தாக்குதலுக்குப் பின்பான தலித் எழுச்சி மேலும் பெரிதாகவும் பரவலாகவும் வளருவதற்கு வாய்ப்பிருப்பதாகத் தெரிகிறது. அப்படிப் பார்க்கையில், உங்கள் அமைப்பின் பெயரான "சஃபாய் கரம்சாரி அந்தோலன்" (மனிதக் கழிவகற்றும் தொழிலாளர் இயக்கம்) என்பதே முரணாக இல்லையா?**

தலித் மக்கள் விழிப்பணர்வு எங்கள் கோரிக் கைகளுக்குக் கண்டிப்பாகத் துணையாக இருக்கும். இந்த சமீபத்திய விருது கூட சர்வதேச கவனத்தை சஃபாய் கரம்சாரி அந்தோலனை நோக்கி திருப்பி இருக்கிறது.

துப்பரவு பணியைப் பொருத்தவரை நான் முன்னரே கூறியதுபோல, அந்தப் பணியை நாங்கள் செய்யப் போவதில்லை என்பதில் தெளிவாக இருக்கிறோம். இந்தப் பணி எங்கள் பிறப்பின் காரணமாகவே திணிக்கப்படுகிறது. நாங்கள் செய்யும் வேலையை நிரந்தரமாக்குங்கள் என்றோ அதிக சம்பளம் கொடுங்கள் என்றோ எங்கள் அமைப்பு என்றுமே கேட்டதில்லை. எங்கள் கோரிக்கை மலம் அள்ளுபவர்களின் விடுதலை மற்றும் உலர் கழிவறைகளை ஒழிப்பது. எங்கள் மக்கள் அபாயகரமான மலக்கழிவு தொட்டிகளையும், குழாய்களையும் சுத்தம் செய்வதிலிருந்தும் அகற்றுவது.

அரசுக்கு எங்கள் கோரிக்கை : மன்னிப்புக் கேளுங்கள்

இதில் சோகமான அம்சம் என்னவென்றால், உச்ச நீதிமன்றம் உட்பட அனைத்து அமைப்பு களும் எங்களுக்கு பாதுகாப்புச் சாதனங்களைக் கொடுத்து, பணிபுரியும் சூழலை மேம்படுத்த முயற்சிக்கின்றன. இதனால், பால்மிகி சமூகத்தைச் சேர்ந்த நாங்கள், அபாயகரமான மலக்கழிவு தொட்டிகளிலும், குழாய்களிலும் தொடர்ந்து பணிபுரியவே வழிவகை செய்யப்படுகிறது.

ஆனால், நாங்கள் தற்போது செய்யும் இந்தப் பணி எந்த விதத்திலும் நிலைத்திருக்கக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறோம்.

**உங்கள் இயக்கத்தை மேம்படுத்தவும் உங்கள் கோரிக்கையை அதிகார ரீதியாக செறிவூட்டவும் அரசியலில் நுழைவீர்களா?**

தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். எங்கள் "சஃபாய் கரம்சாரி அந்தோலன்" (மனிதக் கழிவகற்றும் தொழிலாளர் இயக்கம்) சமூக இயக்கம் அல்ல. எங்கள் மீதான அணுகுமுறையை மாற்றிக் கொள்ளுமாறு நாங்கள் மக்களிடம் பிச்சை கேட்கவில்லை. இது ஒரு அரசியல் போராட்டம். இந்திய அரசியலமைப்புச் சட்டம் உத்தரவாதம் அளித்துள்ள சுயமரியாதை, கௌரவம் மற்றும் சம உரிமைக்கான அரசியல் போராட்டம்.

நன்றி: தி இந்து மையம்

●



நிலன்

ஆபத்தின் விளிம்பில் திருவண்ணாமலை கிரிவலப்பாதை மரங்கள்

# வெட்டப்படுவது மரங்களல்ல இப்பூவுலகின் எதிர்காலம்!

நம்முடைய நலனுக்காக என்றைக்கு சமரசம் ஆகிறோமோ, அப்போதுதான் தீமையின் திசையில் நாம் கால் வைக்கத் தொடங்குகிறோம் என்று கூறினார் இயற்கை வேளாண் அறிஞர் கோ நம்மாழ்வார்.

வளர்ச்சித் திட்டங்கள் என்ற பெயரில் நடைபெறும் சாலை விரிவாக்கம், மேம்பாலம், ரயில்வே பாலம் என்பது போன்ற பல கட்டுமான நடவடிக்கைகளுக்காக நாம் பல நூறு ஆண்டுகளாக இப்பூவுலகில் வாழும் பறப்பனவற்றிற்கு கூட்டையும், நடப்பனவற்றிற்கு நிழலையும், சுவாசிக்க மூச்சுக்காற்றையும் தந்துதவி வரும் மரங்களை தொடர்ச்சியாக வெட்டி வரும் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்படி ஒரு பேரழிவுத் திட்டத்தைத்தான் தமிழக அரசின் நெடுஞ் சாலைத்துறையானது திருவண்ணா மலையில் அவசரகால பாதைத் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அண்ணாமலையின் அடிவாரத்தில் அமைந் துள்ளது அருணாச்சலேஸ்வரர் கோவில். இது மிகவும் பழமை வாய்ந்த சிவ வழிபாட்டுத்தலம் ஆகும். ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் பல லட்சம் சிவ வழிபாட்டாளர்கள் இந்தக் கோவிலின் கிரிவலப்பாதை என்றழைக்கப் படுகிற மலைவலப் பாதையை நடந்தே சுற்றி வருகின்றனர். இந்தப் பாதையின் தூரம் 14 கி.மீ ஆகும். பாதை நெடுகிலும் இருபுறமும் மூலிகை தவரங்களாலும், பல அரிய வகை மரங்களாலும் சூழப்பட்டு இயற்கை எழில் சூழ்ந்து காணப்படுகிறது. இந்தப் பாதையானது பாண்டிய மன்னன் மாறவர்மன் விக்கிரம பாண்டியனால் 13ஆம் நூற்றாண்டில் உருவாக்கப் பட்டது. இந்தப் பாதையானது பல்லுயிர்ப் பெருக்கம் நடைபெறுகிற உயிர்ச் சூழல் மிகுந்த சோனகிரி வனம், அண்ணாமலை காப்புக்காடு, சாலையோர மரங்கள் மற்றும் புதர்க்காடுகள் என மூன்று நிலைகளை உள்ளடக்கியது.

இந்த கிரிவலப்பாதையில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக தமிழக அரசு ரூ. 65 கோடி ஒதுக்கியிருந்தது. அந்தப் பணிகளை செயல்படுத்தத் தொடங்கியபோதுதான் அங்கு முதலில் பிரச்சினை வெடித்தது, பல ஆண்டுகளாக கிரிவலப்பாதையில் நின்று

கொண்டிருந்த 20க்கும் மேற்பட்ட மரங்களை நெடுஞ்சாலைத் துறையினர் வெட்டினர், இதைக் கண்டவுடன் அப்பகுதி மக்களும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் சாலை மறியல், மனிதச் சங்கிலி போன்ற போராட்டங்களை ஜூலை மாதம் நடத்தினர்.

இதுகுறித்து பத்திரிகைகளில் வெளியான செய்தியை வைத்து தாமாகவே முன்வந்து இதை ஒரு வழக்காக ஏற்று தென்மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயம் மரங்களை வெட்டுவதற்கு தடைவிதித்தது. நெடுஞ் சாலைத்துறையினரோ கிரிவலம் செல்லும் நாட்களில் அதிகப்படியான கூட்டம் வருவதால் நெரிசலைக் குறைப்பதற்காகத்தான் சாலையை விரிவாக்கம் செய்யப்போகிறோம் எனவும் முதலில் 365 மரங்களை வெட்டப்போகிறோம் எனக் கூறிவிட்டு பொதுமக்களின் எதிர்ப்புக்குப் பின்னர் 100 மரங்கள் வெட்டப்போகிறோம் எனவும் கூறி வருகின்றனர்,

உண்மையாகவே மரங்களை வெட்டி சாலையை விரிவாக்கம் செய்யும் அளவிற்கு கிரிவல நாட்களில் அங்கு நெரிசல் ஏற்படுகிறதா என எக்ஸ்னோரா அமைப்பின் தலைவரும் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த வருமான கிருஷ்ணகுமாரிடம் கேட்டதற்கு "பல வருடங்களாக நான் கிரிவலம் சென்று வருகிறேன் ஒரு முறை கூட நெரிசலால் பிரச்சினை ஏற்பட்டதே இல்லை. ஒப்பந்ததாரர்களும், அரசு அதிகாரிகளும் பணம் சம்பாதிக்க மட்டுமே இந்த சாலை விரிவாக்கத் திட்டத்தை செயல்படுத்தி வருகின்றனர்.

கிரிவலப்பாதையை வலம் வருபவர்கள் அனைவரும் அங்குள்ள தாவரங்களையும், மரங்களையும் சிவனின் ஓர் அங்கமாகவே வழிபடுகின்றனர். கிரிவலப்பாதையில் உள்ள மரங்களை வெட்டினால் மழை பெய்யும் நாட்களில் மண் அரிப்பு ஏற்பட்டு நீரானது மலையில் சேகரமாகாத நிலை ஏற்படும். இதனால் அந்தப் பகுதியின் பசுமைப் போர்வையானது முற்றிலுமாக அழியும் அபாயம் உள்ளது. இதுபற்றிய எந்தவொரு சுற்றுச்சூழல் தாக்க ஆய்வும் மேற்கொள்ளாமல் அரசாங்கம் இத்திட்டத்தை தொடங்கியிருப்பது மிகவும் அதிர்ச்சியளிக்கிறது. மேலும் சில மரங்களை வெட்டாமல் அதைக் சுற்றி சிமெண்டையும், தாரையும் கொட்டி நிரப்பும் திட்டமும் உள்ளது. இதுவும் மரத்தை வெட்டுவதற்கு சமமான செயல்தான். அப்படி மரத்தின் அடிப்பாகத்தை மூடினால் கொஞ்சம் கொஞ்சமாக மரம் உயிரிழந்து விடும். இந்த மரங்களின் ஒரு கிளையை வெட்டினால்கூட அதை நம்பி வாழும் குரங்குகள் பறவைகள் போன்ற எண்ணற்ற உயிரினங்களின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும்.

திருவண்ணாமலை மக்களுக்கு இயற்கைச் சூழலை அனுபவித்து உணர்வதற்கு இந்த அண்ணாமலையின் கிரிவலப்பாதைதான் ஒரே வாய்ப்பாகும். இந்தப் பாதையில் விரிவாக்கத்தை அனுமதித்தால் தொடர்ச்சியாக பெரிய அளவில் பிரிவாக்கம் நடைபெற்று இதன் இயற்கையான கட்டமைப்பே சிதைந்து விடும். சாலை விரிவாக்கம் செய்யப்பட்டால் அங்கு வாகனப் பெருக்கம் ஏற்பட வாய்ப்பாக இருப்பதால் இரவு நேரங்களில் பல்வேறு காரணங்களுக்காக மலையிலிருந்து கீழிறங்கும் விலங்குகள் வாகனத்தில் மோதி உயிரிழக்க வாய்ப்புகள் அதிகம். இப்படி எந்த கோணத்தில் பார்த்தாலும் இத்திட்டட்தை அனுமதிக்கவே முடியாது" எனக் கூறினார்.

திருவண்ணாமலை மாவட்டமானது அதன் குடிநீர்த்தேவை, நிலத்தடி நீர், வேளாண்மைக்குத் தேவையான நீர்வசதி உள்ளிட்ட அனைத்திற்கும் ஏரி, குளங்களை மட்டுமே நம்பியுள்ளது. அந்த மாவட்ட நிர்வாக ஆவணக் கணக்கின்படி 360 நீர்நிலைகள் அங்குள்ளன. அதில் பல நீர்நிலைகள் தற்போது ஆக்கிரமிப்பில் உள்ளன. அண்ணாமலையைச் சுற்றி மட்டும் 100 குளங்கள் உள்ளன. அக்குளங்களின் ஒரே நீர் ஆதாரம் அந்த மலையின் மேல் பொழியும் மழைநீர் பல வகையான நீர்வழிப்பாதைகளின் மூலமாக குளத்திற்கு வந்தடைவதுதான். தற்போது நடைபெறும் சாலை விரிவாக்கப்பணி முழுமை யடைந்தால் நீர்வழிப்பாதைகள் முழுவதும் அடைபட்டு குளங்கள் வற்றும் அபாயமும் உள்ளது.

இந்த திட்டத்தை தீட்டியவர்களுக்கு அண்ணாமலை கற்குன்றாகவும், சோனகிரிக் காடு புதர்க் காடாகவும்தான் தோன்றியது போலும். திட்ட வரைவு அறிக்கையில் மிகவும் தந்திரமாக மரத்தை வெட்டப் போகிறோம் என குறிப்பிடாமல் புதர்களை அகற்றுகிறோம் என்றே குறிப்பிட்டுள்ளனர் அரசு அதிகாரிகள். இவர்கள் புதர் என்று குறிப்பிட்ட பகுதிதான் பல்வேறு மூலிகைத் தாவரங்களும், நூறு ஆண்டுகள் வாழ்ந்து வரும் மரங்களும், அரிய வகை


பறவைகளும், விலங்குகளும் உயிர்த்திருக்கும் பகுதி என்கிறார் திருவண்ணாமலை பகுதியைச் சேர்ந்த இயற்கை வேளாண்மை செய்து வரும் உழவர் குமார் அம்பாயிரம் “திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் நாங்கள் நூறு மரங்களை மட்டுமே வெட்டு வோம் எனக் கூறிவிட்டு ஆயிரக்கணக்கான மரங்களை வெட்டவிருக்கிறது மாவட்ட நிர்வாகம். ஆனால் அவர்கள் வெட்டுவதாக கணக்கில் கூறியவை மரங்களல்ல அவை குட்டைப்புதர் மருத நிலக் காடுகள் ஆகும்.




இந்த காட்டில் மரங்களை எடுத்துக் கொண்டால் இலுப்பை, நாவல், கடம்பன், மருது, கருங்காலி, வெளுங்கன், சந்தனம், வேம்பு, வேங்கை, செம்மரம், ஆலமரம், கல்லாத்தி, இச்சி, அத்தி, புங்கை, புளியன், துறிஞ்சி, கருவேலம், வில்வம், காட்டு எலுமிச்சை, அழிஞ் சில், பொரசு, காட்டு முருங்கை, செந்தனக்கு, மந்தாரை, காட்டுக்கொளஞ்சி போன்றவையும் மோதிரக்கனி, கொகக்கி முள், பெர்னி விராளகி போன்ற புதர்களும், செங்காந்தள், ஆதாண்டை, செங்கத்தாலி போன்ற கொடிகளும், புள்ளிமான், மந்தி, முயல், காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, மரநாய், புனுகுபூனை, எறும்புதின்னி, காட்டுப் பூனை, சிகப்புகீரி, சாம்பல்கீரி, அணில், நரி, குரங்கு போன்ற விலங்குகளும், சோலைப்பாடி, மைனா, ஈ பிடிப்பான், கிளி, ஆந்தை, மயில், குயில், செம்போத்து, பனங்காடை, தையல்சிட்டு, தூக்கணாங் குருவி, மாங்குயில், தோட்டக்கள்ளன், சிலம்பல், சருகுகோழி, கள்ளிபுறா, மணிப்புறா, கௌதாரி, காடை, வானம்பாடி, அண்டங்காக்கா, வல்லூறு, ராசாளி போன்ற பறவைகளும், பல்லாயிரக் கணக்கான நுண்ணுயிரிகளும் இந்த மலையோட நீரையும், தென்றலையும், மரத்தையும் அமைதியான சூழலையும் நம்பி ஒன்றை மற்றொன்று சார்ந்து பல நூறு வருசமா வாழ்ந்துட்டு வருது. அவங்க வெட்டப்போறது வெறும் மரத்த மட்டுமில்ல ஒரு வனத்த, ஒரு பல்லுயிரின இயற்கை மண்டலத்தை. இதை எப்படியாவது தடுக்கனும்” என்றார் குமார் அம்பாயிரம். காஷ்மீர், உத்தரகாண்ட், சென்னை, பெங்களூர் இப்படி தொடர்ச்சியாக இயற்கை கட்டமைப்பை சிதைத்ததால் வெள்ளம் எற்பட்ட சம்பவங்களை நாம் யாரும் மறந்திருக்க மாட்டோம். அந்தத் தவறுகளில் இருந்து நாம் பாடம் கற்றுள்ளோம் என்பதை நிரூபித்துக் காட்டுவதற்கு வாய்ப்பாக நம்முன் திருவண்ணாமலை கிரிவலப்பாதை விரிவாக்கப் பிரச்சினை இருக்கிறது.

நமக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக தென்மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயம் இந்த விவகாரத்தில் ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது அதில் தற்போதைக்கு கிரிவலப்பாதையில் உள்ள ஒரு மரத்தைக் கூட வெட்டக்கூடாது எனவும், சிமெண்ட், ஜல்லி போன்றவற்றை கொட்டி பாதை அமைக்கக் கூடாதெனவும் வேண்டுமானால் மண்பாதை மட்டுமே அமைக்கலாம் எனவும் ஓய்வுபெற்ற நீதிபதி மற்றும் மாவட்ட வனத்துறை அதிகாரி தலைமையில் இச்சூழலை கண்காணிக்க குழு அமைக்கப்பட்டு ஆராய்ந்து அடுத்தகட்ட முடிவுகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஆகஸ்ட் 18ஆம் தேதி கூறியுள்ளது. அண்ணாமலை வனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நம்மாலான முயற்சியை நாம் அனைவரும் செய்ய வேண்டும். ஏனெனில் திருவண்ணாமலையில் வெட்டப்படுவது மரங்கள் மட்டுமல்ல இப்பூவுலகின் எதிர்காலமும் கூட.

●



# ஆழ் சூழலியம்

**நிவேதா முருகேசன்**

பள்ளி வகுப்பறையில் உங்களது 5வயது குழந்தை குறைந்த மதிப்பெண் வாங்கியதற்காகப் பின்தள்ளப்படுவதை உங்களால் நியாயப்படுத்த முடியுமா? அதே குழந்தை மிகச்சிறப்பாக பாட்டு பாடியதற்காக மற்ற குழந்தைகளை விட கொஞ்சம் அதிகமாக கவனிக்கப்பட்டால் உங்களால் ஏற்றுக்கொள்ள முடியுமா? ‘ஆம் ‘ என்று சொல்பவர்கள் தயவு செய்து இதைப் படிக்க வேண்டாம்!

இந்த அதி நாகரிகத்திற்குக் கொஞ்சமும் சலிக்காத செயல்தான் நாம் தேக்கு மரத்திற்கும் பலா மரத்திற்கும் விலை பேசி வருவது. உலகின் பல்வேறு பகுதிகளில், பல காலக்கட்டங்களில் சூழலியல் புரட்சிகள் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. அவற்றின் அடர்த்தியை ஒப்பிட்டுப் பார்த்தால், நம்மால் அவை அனைத்தையும் ஒரே தலத்தில் பொருத்தி அணுக முடியாது. விரிவாகச் சொன்னால், அவை நிகழ்த்தப்பட்டிருப்பதற்கான நோக்கத்தையும், அதனுடனான சூழலியல் பார்வையையும் ‘ஆழமானது’, ‘மேம்போக்கானது’ என இரண்டாகப் பிரிக்கலாம்.

‘புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துவோம்; அப்போதுதான் படிம எரிபொருட்களை நம் எதிர்கால சங்கதிகளுக்குச் சேர்த்து வைக்க முடியும்‘, ‘பூச்சிக்கொல்லி பயன்படுத்தாதீர்கள்! நம் உடல்களில் அவை புற்று நோயை உண்டாக்கும்!’,’ மரம் நடுவோம் மழை பெறுவோம் ‘— இது போன்ற வாசகங்களை நாம் அனைவரும் வெகு இயல்பாகக் கடந்து வந்திருப்போம். என்னதான் இந்த செயல்களின் கடைசி புள்ளி, இயற்கையைப் பாதுகாப்பது போன்று தோன்றினாலும், இவற்றின் தொடக்கப் புள்ளியை குறிவைத்து பல கேள்விகளை எழுப்புகிறது அர்னே நேஸ் (Arne Naess) என்பவரின் ‘ஆழ் சூழலியம்’ எனும் கோட்பாடு.

உலகம் மனிதர்கள் பயன்படுத்திக் கொண்டு வாழ உருவாக்கப்பட்டது; தங்களது வாழ்விற்காக இயற்கையின் எதையும் எதுவாகவேனும் மாற்றிக் கொள்ளலாம். அந்த மாற்றம் அவர்களுக்கே ஆபத்தாக முடியுமென்றோ, அந்த வளங்கள் தீர்ந்து போகக்கூடுமென்றோ தோன்றினால், மீண்டுமொரு மாற்றத்தைக் கொண்டுவந்து தங்கள் இனத்தைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற அடிப்படை எண்ணம் தெரிந்தோ தெரியாமலோ சில Green collar களை இயக்கிக் கொண்டிருக்கின்றன. இந்த Anthropocentric (மனிதர்களை மையப்படுத்திய) சூழலியல் அணுகுமுறையில் இருந்து சற்று விலகி நிற்கின்றன ஆழ் சூழலியம் கொள்கைகள்.

ஆழ் சூழலியம் கோட்பாட்டின் மிக முக்கிய நெறிமுறை என்னவென்றால், இயற்கை வளங்களெல்லாம், மனிதர்கள் முழு உரிமை எடுத்துக் கொண்டு பயன்படுத்திக்கொள்வதற்காக அல்ல என்பதுதான். அதன்படி எந்த ஒரு இனத்தின் வாழ்வும், மற்ற அனைத்து இனங்களின் வாழ்வையும் வளங்களையும் பொருத்ததே எனலாம். இதன் கோட்பாட்டை எட்டு முக்கிய கருத்துகளில் விரிவுபடுத்தியிருக்கிறார் நேஸ்.

1. இந்த உலகத்திலுள்ள ஒவ்வொரு மனித உயிர்கள் மற்றும் மனிதரல்லாத பிற உயிர்களின் நல்வாழ்வும் செழிப்பும் அதனதற்கேற்ற உள்ளார்ந்த மதிப்புகளைக் கொண்டுள்ளது. இந்த மதிப்புகள், மனிதர்களின் பயன்பாட்டிற்கேற்ற அளவுகோளைச் சார்ந்ததல்ல (ஜெர்மன் ஷெப்பட்டுக்கும், பொமெரேனியனுக்கும் நாம் எவ்வளவு வேண்டு மானாலும் விலை சூட்டலாம். ஆனால் அவை இரண்டும் தனித்தனியே தங்களுக்கென்று சில உள்ளார்ந்த மதிப்புகளுடன் வாழ்கின்றன).

2. உயிர்களின் செழுமையும் பன்முகத் தன்மையும், தங்களுக்கான மற்றும் பிற உயிர்களுக்கான உள்ளார்ந்த மதிப்புகளை உணர்ந்துகொள்ள வழிவகுக்கிறது.

3. தங்களது அதி முக்கிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதைத் தாண்டி, இயற்கையின் செழுமையையும் பன்முகத் தன்மையையும் குறைக்க மனிதர் களுக்கு எந்த உரிமையும் இல்லை.

4. மனித வாழ்வின் செழுமையும் கலாச் சாரமும் அந்த இனத்தின் கணிசமான குறைதலில் இணக்கத்துடன் இருப்பவை. இதே போன்று மனிதரல்லாத பிற உயிர்களின் செழுமையும் அதனதன் இனத்தொகையின் கணிசமான குறைவை சார்ந்தே உள்ளது.

5. இயற்கையினிடத்தில் மனிதர்களின் குறுக்கீடு தற்போது மிக மிக அதிகமாகி யுள்ளது. மற்றும் இச்சூழல் மேலும் மேலும் ஆபத்தாகிக் கொண்டே வருகிறது.

6. ஆகையால் கொள்கைகள் மாற்றப்பட வேண்டும். இந்த மாற்றம் தற்போதைய பொருளாதாரம், தொழில் நுட்பம், சித்தாந்தம் ஆகிய அனைத்தையும் பாதிக்கும்.

7. இந்த சித்தாந்த மாற்றம் உள்ளார்ந்த மதிப்பு சார்ந்த நல்லவாழ்க்கை தரத்திற்கு வழிவகுக்குமே ஒழிய தற்போதைய மனப் பான்மையின் உயர்ந்த வாழ்க்கை தரத்தைப் பாராட்டுவதாக இராது. உயர்வு என்பது எதனடிப்படையில் கொள்ளப்படுகிறது என்பது உணரப்படும். பெரியது என்று நாம் எதை நம்பிக் கொண்டிருக்கிறோமோ ஸ் அது உருவகையில் மட்டுமே பெரியது என்ற ஆழ்ந்த விழிப்புணர்வு ஏற்படும். பெரிது, சிறப்பு இவை இரண்டிற்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது என்பது உணரப்படும்.

8. மேற்கூறிய அனைத்துக் கருத்துகளையும் உணர்ந்து ஏற்றுக் கொள்பவர்கள், அந்த மாற்றங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ செயல்படுத்த கடமை பட்டுள்ளனர்.

மீண்டும் இவை அனைத்தையும் மூன்று எளிய கருத்துக்களில் சுருக்கிக்கொள்ளலாம்;

1. காட்டுயிர் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு
2. மக்கள் தொகை கட்டுப்பாடு
3. எளிய வாழ்க்கைமுறை

இந்த கொள்கைகளுக்கெல்லாம் அடிப் படையாக நேஸ் நம்புவது, ஒரேயொரு சூழலியல் பார்வையைத்தான்.

வாழ்வதற்கான ஒவ்வொரு உயிரின் உரிமையும், கணக்கில்கொள்ள முடியாத அளவிற்கு ஒரு உலகளாவிய உரிமை. இந்த உரிமையைத் தாண்டி எந்த ஒரு உயிரினத்திற்கும் இந்த பூமியின் மீது அதிகாரம் செலுத்துவதற்கு துளி அளவு உரிமையும் கிடையாது.

இதுபோன்ற ஆழமான கருத்துக்களை சூழலியல் இலக்கியத்தில் பதிவு செய்திருக்கும் அரனே நேஸ் ஒரு மழைக்காதலன். ‘ஆழ் சூழலியம்‘ மற்றும் ‘சூழலியல் தத்துவம் ஜி’ ஆகியவை இவரது மிகச்சிறந்த கருத்துக்கள். மலை யேற்றத்தையே தனது வாழ்வின் ஆகச்சிறந்த இன்பமாக கருதிய அவர் மலை உச்சியில் ஒரு குடிலை கட்டி அதில் வாழ்ந்து வந்தார். ‘T ver-gastein’ என்று தன் மலைக்குடிலுக்குப் பெயரிட் டிருக்கும் அவர் அதில் இருந்துகொண்டு, தான் சிந்தித்த தத்துவங்களின் பெயர்களில் ‘ஜி’ என்ற அந்த குடிலின் பெயர் சுருக்கத்தையும் இணைத்துக் கொண்டார். ரேச்சல் கார்செனின் ‘மௌன வசந்தம்’—நூலின் தாக்கத்தால் சூழலியல் புரட்சிகளில் நுழைந்தார். அணை கட்டுதல் எதிர்ப்பு போன்ற பல்வேறு சூழல் போராட்டங்களை முன்னின்று நடத்தினார்.

அதன்பின்பான மேற்கத்திய புரட்சிகளின் ஆழமின்மை குறித்து அதிருப்தி அடைந்தார். புரட்சிஎன்பதுமனதிலிருந்து ஆரம்பிக்கவேண்டும்; அதற்கான அடிப்படை காரணம், அது எடுத்துச் செல்லப்படும் நோக்கம், பாதைகள் மற்றும் அதன் விளைவாக எதிர்பார்க்கப்படும் மாற்றம் குறித்த சிந்தனைத் தெளிவு வேண்டுமென்று ஆசைப்பட்டார். போராட்டங்கள் நடத்தப்பட வேண்டியது இயற்கைக்காகவும் உயிர்களின் வாழ்வுரிமைக்காகவுமே ஒழிய மனிதர்களின் எதிர்கால சௌகரியத்திற்காக அல்ல என்று ஆழமாக நம்பினார்.

அதன்படி மனிதர்கள் தங்கள் தேவை சார்ந்து உயிர்களை மதிப்பிடும் கருத்தை விலக்குகிறார். மற்ற உயிர்களுக்கு தங்களது இருப்பின் சுய நினைவு உள்ளதா? அவைகளுக்கு முடிவற்ற ஆன்மா உள்ளதா? போன்ற கேள்விகளை எழுப்பி அவைகளை மதிப்பீடு செய்து



அவைகளை மனிதர்களுக்கு ஒருபடி கீழ் வைத்துப் பார்ப்பது தவறு; மனிதர்கள் உட்பட, உலகிலுள்ள அனைத்து உயிர்களும் இயற்கையில் சம பங்கு வகிக்கிறது என்கிறார்.

“இன்னும் அறியப்படாத ஒரே ஒரு நிதர்சனத்தின் வெவ்வேறு கோணங்கள்தான் ஒவ்வொரு உயிரினமும்‘ என்று நேஸை ஒத்த கருத்துடைய வார்விக் ஃபாக்ஸ் (Warwick Fox) குறிப்பிடுகிறார். அதே போன்று ஆல்டோ லெபோட் (Aldo Leopold) என்பவரும், “மனிதர்கள் இந்த உயிரியல் பிரிவின் சாதாரன உறுப்பினர்களே!” என்று தனது ‘A Sand County Almanac’ என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார்.

இயற்கையால் மனிதர்கள் ஏற்படுத்தும் மாற்றங்களை ஒரு குறிப்பிட்ட எல்லை வரைக்கும் தான் உள்வாங்க முடியும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும் மனிதர்களின் சில கால நடவடிக்கை இந்தப் பூமியை அதன் இயல்பு நிலையிலிருந்து பன்மடங்கு வேறுபடுத்திவிட்டது. பல்லுயிர் அழிப்பு, பருவ நிலை மாற்றம், கழிவு அதிகரிப்பு என்பனவெல்லாம் இதன் சின்னசின்ன படிகள். ஒரு நாளுக்கு 100 உயிரினங்கள் வீதம், நம் நடவடிக்கையால் ஒரு வருடத்திற்கு 1,40,000 உயிரினங்களைப் பெருமளவில் அழித்துக் கொண்டு வருகிறோம். இது இயற்கையாய் ஏற்படும் உயிரின அழிவைவிட 10,000 மடங்கு அதிகமானது. அதன்படி சூழல் சமனை உருவாக்க உலக மக்கள் தொகையை 100 மில்லியன் அளவிற்கு வருமாறு குறைக்க வேண்டும் என்று நேஸ் குறிப் பிடுகிறார்.

‘உலகின் ஒவ்வொன்றும் மற்ற எல்லாவற்றுடனும் தொடர்புடையது என்று பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சூழலியலாளர்கள் பதிவிட்டிருக்கிறார்கள். மேலும் இந்தத் தத்துவம் அரசியல் ரீதியாகவும் , சுயம் ரீதியாகவும் ஒவ்வொருவரும் எந்தெந்த இடத்தில் வாழ்கிறோம் என்ற புரிதலை முன்னெடுத்து பல தளங்களில் விரிவடைந்து செல்கிறது.

ஆயினும் மற்ற எல்லா கருத்துக்களையும் தத்துவங்களையும் போலவே, இதற்கும் உலகின் பல அறிவுசார் சமூகங்களிடமிருந்து விமர்சனங்களும் எதிர்ப்புகளும் வந்துள்ளன. பூக்சின் என்பவர் இந்தக் கோட்பாடு முழுவதும் மனிதத்திற்கு எதிரானது என்று குறிப்பிடுகிறார். இது, மனிதர்களை இந்த உலக உயிர்களைத்

தாக்க வந்த தொற்றுநோயைப் போலவும், புற்று நோயைப் போலவும் முன் நிறுத்துகிறது என்று கூறியுள்ளார். (தன் வயிறு முழுவதும் நெகிழி அடைத்துக் கொண்டு, வலியால் துடிக்கும் ஒரு கடல் ஆமையின் பார்வையில் இது 100% உண்மையே!)

இந்த விமர்சனத்திற்கு, ஆழ் சூழலியம் கோட்பாடு மனிதர்களை மையப்படுத்தும் (Anthropocentric) சூழலியல் அனுகுமுறைக்கு எதிரானது தானே ஒழிய, மனிதத்திற்கு எதிரானதல்ல என்று பதிலளிக்கப்படுகிறது. புக்சின் முன் நிறுத்தும் இரண்டாவது விமர்சனம் நாம் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டியது. ஆழ் சூழலியம் கொள்கை சூழலியல் சீர்கேட்டை, முதலாளித்துவத்துடனும் சமூக படி நிலைகளுடனும் தொடர்புபடுத்தவில்லை என்கிறார். சமூகத்தில் மக்கள் அனைவரும் பல்வேறு படி நிலைகளில் தனித்தனியே வாழும்போது இயற்கை சீர்கேட்டிற்கான குற்றத்தை பொதுவாக மனித இனத்தின் மீது முன் நிறுத்துவது தவறு என்கிறார். ஒவ்வொரு தனி மனிதனும் சமூகத்தோடு ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பைப் பொருத்து தான் மாற்றங்களைக் கொண்டு வரமுடியும் என்று ஆழமாகப் பதிவிடுகிறார். சூழலை அழிவிலிருந்து தடுப்பதற்கான ஒரே வழி சமூக கட்டமைப்பை மாற்றி அமைப்பது தான் என கூறியிருக்கும் புக்சின் ஒரு சமூக சூழலியலாளர் என்பது குறிப்பிடதக்கது. இதுவும் மனிதர்களை மையப்படுத்தும் சூழலியல் பார்வை தான் என சில ஆழ் சூழலியம் கருத்தியலாளர்கள் எதிர்வாதம் வைத்தாலும், வேறுசிலர் இந்த விமர்சனத்தை ஏற்றுக்கொள்ளவே செய்கின்றனர்.

ஒருவர் தனது சுயத்தை சூழல் சார்ந்து ,அறிந்து கொள்வதில் ஆழ் சூழலியம் போன்று இன்னொரு கருத்தியலும் முன் நிறுத்தப்படுகிறது. சூழல் பெண்ணியம் என்ற அந்தக் கருத்தியல் நிபுணர்கள் இயற்கையும் மனிதரல்லாத பிற உயிர்களும் பல நூற்றாண்டுகளாக எப்படி பயன்படுத்தப்பட்டு வந்ததோ, அதேபோல தான் பெண்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர் என்கிறார்கள். இந்த கருத்தியலில் மனிதர்களை மையப்படுத்திய சூழலியல் (Anthropocentrism) என்பது ஆண்களை மையப்படுத்திய சூழலியல் (Androcentrism) என்று பதிவிடப்படுகிறது. இனவாதம், மொழிவாதம், பொருளாதார வேறுபாடு போலவே, பாலின வேறுபாடும் தலைவிரித்தாடும் சமூகத்தில் ‘Anthropocentrism’ என்கிற சொல் பெண்கள் மீது புகுத்தப்படும் பாரபட்ச மன நிலையே என அழுந்தச் சொல் கின்றனர் சூழலியல் பெண்ணியவாதிகள்.

அனைத்துத் தரப்பு விமர்சனங்களையும் அறிந்துகொண்டு ஆழ் சூழலியம் கருத்தை அனுகினால் அது உயிர்களை ஒருவரது தேவை சார்ந்து அணுகுவதற்கு யாருக்கும் உரிமையில்லை என்கிறது. இதில் தேவையிருக்கும் அந்த ‘ ஒருவர்’ யார் என்பதில்தான் விவாதம் எழுகிறது. உலகின் பல்வேறு காலக்கட்டங்களிலும், பல்வேறு சமூகங்களிலும் மேல்தட்டு ஆண்கள் தான் தனது தேவைகளையும் சமூகத்தின் தேவைகளையும் நிர்ணயித்துள்ளனர் என்பது வரலாற்று உண்மை.

உங்கள்கைகளில்லெதர்பைகளைத்திணித்தவர் யார்? அதற்கு மதிப்பளித்தவர் யார்? உங்கள் குழந்தையை பழைய பொம்மையை வீசியெறிய வைத்து, புது பொம்மைக்காக அழ வைப்பது யார்? உங்கள் நிலத்திலுள்ள புளிய மரத்தையும் தேக்கு மரத்தையும் அதனதன் மதிப்பிற்கேற்றவாறு கையாளச் செய்வது யார்? உண்மையில் நீங்கள் உங்களது தேவையென நினைத்துக் கொண்டிருப்பது உங்கள் தேவையே இல்லை. சமூகத்தின் 1 சதவீதத்தினர் மீதமுள்ள உங்கள் 99 சதவிகிதத்தினரின் உடைமையை நிர்ணயித்து மதிப்பிட்டு விட்டு, தங்களின் மதிப்புகளை அதிகரித்துக் கொண்டேயிருக்கிறார்கள். ஒரு பணக்கார வீட்டின் நாய்க்குட்டிக்கு, அந்த வீட்டின் வேலைக்காரரின் குழந்தையைவிட மதிப்பு அதிகம் தான். இதுபோன்று அதிகாரச் சமூகத்திலிருந்து கொண்டு, சூழலியல் பேசியபடி திரிந்தால் சிரிக்கத்தான் செய்வார்கள்!

ஆனால், இவையெல்லாம் காரணங்களே! படுத்துப் பிரசவிக்கக்கூட இடமில்லாமல், கறிக்காக வளர்க்கப்படும் பண்ணையிலேயே பிறந்து, வளர்ந்து, செயற்கையாய் கருத்தரித்த ஒரு தாய்ப்பன்றியின் வேதனையை உங்களது இந்த சிரிப்பு எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது! மனதளவில் அனைத்து உயிர்களையும் சமமாகப் பார்க்கத் துவங்கிவிட்டாலே, சக



மனிதர்களையும் அவ்வாறே பார்க்கத்தோன்றும். இதற்கு யாரும், எந்த பாலினத்தவரும், எந்த மதத்தினரும், எந்த சாதியில் இருப்பவரும், எவ்வளவு சம்பளம் வாங்குபவராக இருந்தாலும் விதிவிலக்கல்ல.

இந்த உலகத்தின் மீது உங்களுக்கு எவ்வளவு உரிமையுள்ளதோ, அதே உரிமை தான் உங்கள் வீட்டு வாசலில் கட்டி வைக்கப்பட்டிருக்கும் நாய், நீங்கள் துரத்திவிட்ட பூனை, நீங்கள் ரயிலில் பயணிப்பதற்காய் தன் உயிரை வீட்டுக் கொடுத்த யானை, உங்கள் பார்வைக்காக பூங்காவில் அடைக்கப்பட்டிருக்கும் புலி, நீங்கள் விஷம் தெளித்தே வளர்க்கும் தோட்டத்து கத்திரி, அதில் அவ்வப்போது வந்து செல்லும் பூச்சி, ஆசையாய் வளர்க்கும் போன்சாய் மரம், அடிக்கிற வெயிலில் நடப்பட்டு செத்துக் கொண்டேயிருக்கும் ரோஜா செடி, உங்கள் வீட்டுக் கறவை மாடு, அதன் கன்று, கடலையே பார்த்தறியாத, தொட்டி மீன் என அனைத்துக்கும் இந்தப் பூமியில் நீங்கள் அனுபவிக்கும் அத்தனை உரிமையும் உள்ளன. அனைத்திற்கும் தனித்தனியே உள்ளார்ந்த மதிப்பு உள்ளது. நுகர்வு கண்ணோட்டத்தில் அவற்றின் தனிப்பட்ட வாழ்க்கையில் மூக்கை நுழைப்பது, அடுத்தவர் அறையை எட்டிப் பார்ப்பதைவிட இங்கிதமற்ற செயல். அவற்றுக்காக நாம் எதையும் வீட்டுக்கொடுக்க வேண்டியதில்லை.

இயற்கையின் மீதான அவற்றின் உரிமையை அபகரித்துக் கொள்ள நமக்குத்தான் உரிமை யில்லை. இன்னும் சிறப்பான விஷயம் என்ன வென்றால், இதையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்க வேண்டிய சில 'Natural History Society'—களின் 'Bio-resource' பார்வைக்கு நாம் அனைவரும் எவ்வளவு நேரம் கைதட்டினாலும் மிகையாகாது. தெரு நாயைத் தத்தெடுத்துவிட்டு, அதன் கழுத்தில் லெதர் பெல்ட் கட்டி விடும் மேம்போக்கான சூழலியல் பார்வை இங்கு வேண்டியதில்லை. நமக்காக படைக்கப்பட்டவை ஒன்றுமே இல்லை. ஒன்று இன்னொன்றாக மாறுவதுதான் இயற்கை. அந்த உணவுச் சுழற்சியில் நாமும் ஒரு பகுதிதானே தவிர, அதைக் கையாளப் பிறந்தவரில்லை. உணவில்லாத பிற உல்லாச தேவைகளுக்கு உயிரினங்களைப் பயன் படுத்திக்கொள்வதை நிறுத்துவோம். உணவுத் தேவைக்காகவும் அவற்றைக் 'கையாள்வதை' குறைத்துக்கொள்வோம். 32,000 மாடுகளை ஒரே நேரத்தில் அடைத்திருக்கும் பால் பண்ணையில் உங்கள் வாழ்நாளை கழிப்பீர்களா? தன் சூழலி லிருந்து பிரித்துக் கொண்டுவந்து வளர்க்கப்படும் வெளிநாட்டு நாய்களையும், பூக்களையும் இயற்கை உங்கள் ரசனைக்காகப் படைக்கவில்லை என்று உணரவேண்டிய காலமிது.

உலக உயிரினங்கள் அனைத்தும் உங்களின் வெவ்வேறு வடிவங்களே! ஜான் சீட் (John Seed) என்பவரின் ஒரு வாசகம் நினைவிற்கு வருகிறது. 'நான் மழைக்காடுகளைக் காப்பாற்றுகிறேன்' என்று சொல்வதற்குப் பதிலாக, 'இப்போது மெல்ல சுயநினைவிற்கு வந்துள்ள மழைக்காடு ஆகிய நான், என்னைக் காத்துக்கொள்கிறேன்' என்று சொல்வோம்".

●



ஜீயோ டாமின்

# சில அம்மாக்கள் வேற மாதிரி

தாய்ப் பாசத்தைப் பற்றி சொல்வதானால் மனிதர்கள் முதல் விலங்குகள்வரை கதை கதையாய் சொல்லிக் கொண்டே போகலாம். பொதுவாக (சில விதிவிலக்குகளைத் தவிர்த்தால்) எல்லா பாலூட்டிகளும், பறவைகளும் நம் அனைவருடைய அம்மா மாதிரி பாசமாய் பிள்ளைகளை வளர்க்கிறவர்கள்தான். உதாரணமாக மிகவும் சாதுவான பறவையான கோழி எப்போது தாயாகிறதோ அப்போது அந்த சீற்றம் கொண்ட தாய்க்கோழியின் பக்கத்தில் நெருங்க எவ்வளவு பெரிய வீரனும் அஞ்சுவான். கோழிகள் பெரிய அளவில் பறக்கும் திறனற்றதாய் இருந்தாலும் தன் குஞ்சுகளுக்கு கழுகுகள் போன்ற பறவைகளால் ஆபத்து என்றால் “எங்கிருந்துவந்ததோ இந்த வீரம்?” என்று எண்ணுமளவு அசுர சக்தியோடு எம்பிக் குதித்து கழுகுகளை விரட்டுவது பார்ப்போருக்கு பிரமிப்பைத் தருவது.

ஆனாலும் கோழிகளுக்குத்தான் எத்தனை எதிரிகள். எப்படித்தான் இந்தம்மா பொத்திப் பொத்தி பாதுகாத்தாலும் பத்துக்கும் மேற்பட்ட குஞ்சுகளில் கடைசியில் மிஞ்சுவது இரண்டோ மூன்றோதான். ஆனால் இன்னொரு பக்கம் பார்த்தால் இந்த வேட்டையாடி கழுகு அம்மா ரெண்டோ அல்லது மூணோ முட்டைதான் போடுவாங்களாம். ஒருவேளை கோழி பத்துக்கும் மேலே குஞ்சுகள் பொரிப்பதே இந்த கழுகுகளுக்கும் வல்லூறுகளுக்கும் உணவளிக்கத்தானோ?. இன்னொரு கேள்வி, (மனிதர்களைத்தவிர) பெரிய அளவில் எதிரிகள் இல்லாத இந்த கழுகுகள் ஒவ்வொன்றும் கோழியைப்போல 10—12 குஞ்சு பொரிச்சா கோழி மாதிரியான பறவைகளின் கதி என்ன ஆகும்? எல்லாத்துக்கும் சமநிலையை இயற்கை உறுதி செஞ்சாக வேண்டுமே? அதான் இந்த மூணு முட்டைக்கும் பத்து முட்டைக்கும் உள்ள வித்தியாசம்.

அடுத்து பாலூட்டிகளுக்கு வருவோம். ஒவ்வொரு விலங்கும் எல்லா காலத்திலும் பெரும்பாலும் ஒரே எண்ணிக்கையிலேயே

குட்டிகளை ஈனுகின்றன. ஆனால் சென்ற தலைமுறைவரை 10க்கும் மேல் பிள்ளைகள் பெற்று சமீபத்தில் ஒன்று அல்லது இரண்டுக்கு சரிந்திருக்கும் (சரிக்கப்பட்டிருக்கும்) மனிதர்களின் செயல்பாடு இயற்கையா அல்லது செயற்கையா என்பதில் நமக்கு குழப்பம் இருப்பதால் அவர்களைப்பற்றி நாம் இப்போது விவாதிக்க வேண்டாம்.

பாலூட்டிகளில் மனித முன்னோடிகளான குரங்குகளையோ அல்லது ஓங்கில்கள் (Dolphin) திமிங்கலங்கள் போன்ற கடல்வாழ் பாலூட்டி களையோ எடுத்துக் கொண்டால் "ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு" பாலிசியில்தான் குழந்தையைப் பெற்று பராமரிக்கின்றன. இங்கு குறிப்பிட வேண்டியது என்னவென்றால் ஒரே குழந்தையைப் பெற்றுக்கொள்ளும் இந்த அம்மாக்களின் பிள்ளைகளுக்கு இயற்கையில் பெரிய அளவில் எதிரிகள் இல்லை. இன்னொரு விதத்தில் பார்த்தால் பெரும்பாலான கடல்வாழ் விலங்குகளை உணவாகக்கொள்ளும் டால்பின், திமிங்கலம் போன்ற பெரிய விலங்குகள் எண்ணிக்கை கட்டுக்குள் இருக்கவேண்டிய அவசியமும் இந்த "ஒற்றைப் பிள்ளை" முறையால் சமன்செய்யப்படுகிறது.

அதேப்போன்று பெருமளவில் இறைச்சி உண்ணும் காட்டுவிலங்குகளின் முக்கிய உணவான காட்டுப்பன்றியோ அல்லது மருத நிலத்து இரவாடிகளான பாம்புகள், ஆந்தைகள் போன்றவற்றின் முக்கிய உணவான எலிகளோ அதிக எண்ணிக்கையில் பிள்ளைகள் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. எவ்வளவு எண்ணிக்கையில் அவை அதிகம் அதிகமாய் இரையாகின்றனவோ அவ்வளவு வேகமாய் பெருகுகின்றன அல்லது பெருக வேண்டியிருக்கிறது. ஒரு ஆப்பிரிக்க யானை வளரும் காலத்துக்குள் ஒரு வீட்டு எலி தனது முப்பது தலைமுறைகளைக் கடந்து விடுகிறது.

எப்படிப் பார்த்தாலும் பிள்ளைகள் ஒன்றோ இல்லை பத்தோ அல்லது அதற்கும் மேலாகவோ இருந்தாலும் பறவைகளிலும் பாலூட்டிகளிலும் இயற்கையில் தாய்க்கு குழந்தைகளை பராமரிக்கும் பணியில் விலக்கு இல்லை. இன்னொரு கோணத்தில் சொல்வதானால் இந்த பாலூட்டிகள் அல்லது பறவைகளின் பிள்ளை களுக்கு தாயின் பராமரிப்பு இல்லாமல் உயிர்வாழ இயலாது. பாலூட்டிகளின் குட்டிகளோ அல்லது பறவைகளின் குஞ்சுகளோ சுயமாய் உணவு தேடிக்கொள்வதுவரை (மனிதன் தவிர்த்து) தாயின் பாசமிகு பராமரிப்பு தொடர்கிறது.

ஆனால் எல்லா அம்மாக்களும் அப்படியல்ல. சில அம்மாக்கள் வேறமாதிரி. ஆமாங்க சில அம்மாக்கள் இருக்குறாங்க. அவங்க வேலை பெத்து போடுறதோட சரி. அப்புறம் திரும்பிகூட பாக்காம வேற வேலைய பாக்கப் போயிடுவாங்க.

ஆனால் இயற்கைக்கு எல்லாவற்றையும் சமன்படுத்தும் பொறுப்பு இருக்கிறதே. ஒற்றைப் பிள்ளையை பெற்றுப் போட்டுவிட்டு தாய் போய்விட்டால் அப்புறம் ஒன்று நடக்க ஒன்று ஆனால் எப்படி அவள் இனம் தழைக்கும்? அதற்கான உபாயம்தான் வியக்கவைக்கும் எண்ணிக்கையில் நூற்றுக்கணக்கான, ஆயிரக் கணக்கான சிலநேரங்களில் இலட்சக்கணக்கான பிள்ளைகள். எப்படியாகிலும் ஒன்றிரெண்டு தழைக்கக்கூடுமே என்ற நம்பிக்கையில்.

தான் பிறந்து கடலுக்குள் சென்றபின் பத்து பதினைந்து ஆண்டுகளுக்குப்பின் முட்டையிட முதல்முதலாய் மண்ணில் கால்பதிக்கிறாள் ஒருபெண். "வந்தோமா, முட்டையப் போட் டோமா, நடைய கட்டுனோமா" என்ற வேகத்தில் இல்லையென்றாலும் ஆமை வேகத்தில் வருகிறாள். ஆம் ஆமை வேகத்திலேதான். வருகிறாள். ஒரே இடத்தில் நூறு முட்டைகள்வரை இடுகிறாள். கடற்கரை மணலில் அடைகாப்பது உயிருக்கு ஆபத்தாயிற்றே. அதனால் விரைவாய் மணலால் முட்டைகளை மூடிவிட்டு அலைகளோடு புகுந்து கடலில் மறைகிறாள்.

சில வாரங்களில் மணலை விலக்கிக்கொண்டு வெளிவருகின்றன ஆமைக் குஞ்சுகள். அவர்கள் அத்தனை பேரும் ஒரே நேரத்தில் வெளிவர வேண்டுமென்பது இயற்கை அவர்கள் மரபணுக்களில் சங்கேத மொழியில் எழுதி வைத்திருக்கும் பரம இரகசியமான குறிப்பு. இவை ஒவ்வொன்றாய் வெளிவந்தால் வெளியே கடற்கரையில் விருந்துக்காய் காத்திருக்கும் விலங்குகள் பறவைகளும் அப்புறம் குறிப்பிட்ட தூரத்தில் கடலினுள் அவற்றின் வருகைக்காய் முகாமிட்டிருக்கும் விலங்குகளும் மிக எளிதாய் அத்தனைக் குஞ்சுகளையும் ஒவ்வொன்றாய்



சாப்பிட்டுவிடும். எனவே எல்லாரும் ஒரே நேரத்தில்தான் கடலைநோக்கிச்செல்லவேண்டும் என அவர்களுக்குச் கண்டிப்பாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனாலும் அவ்வளவுபேரும் பிழைத்துவிட்டால் காத்திருக்கும் விருந்தினர் களை வெறும் இலையோடு அனுப்பமுடியுமா என்ன? அதற்காகத்தான் இந்த வியக்கவைக்கும் எண்ணிக்கையில் குஞ்சுகள்.விருந்து முடியும்போது விருந்தினர்களுக்கு வயிறும் நிறைந்தது. ஒரு இனமும் பிழைத்தது. தன் குழந்தைகளுக்கு என்ன ஆயிற்று என்று திரும்பிப்பார்க்க கடற்கரைக்கு வந்தால் தாய் ஆமையின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்று கருதி அதைத் தவிர்த்த இயற்கை, இதைப்போன்றே முட்டையிடும் பண்பு கொண்ட தன் வாழிடத்தின் முடிசூடா மன்னனாகத் திகழும் முதலைகளின் குட்டிகளை தானாய் நீருக்குள் செல்ல இயலாததாகவும் தாயின் உதவி தேவைப்படுவதாகவும் வைத்திருக்கிறது. அதாவது பிள்ளைகளை வாயில் கவ்வி நீர்நிலைக்குச் செல்லும் தாய்முதலையைத் தாக்கும் உயிரினம் எதுவும் இல்லை.

தவளைகள், பாம்புகள் (சில வகைகள் தவிர்த்து), பல்லிகள் இன்னும் எண்ணற்ற பூச்சியினங்கள் எவற்றிற்கும் அடைகாக்கும் பண்போ அல்லது தம் பிள்ளைகளை பராமரிக்கும் பண்போ இல்லை. இவை ஆமைகளைப் போல எண்ணற்ற பிள்ளைகளைப் பெறுவதுடன் அவற்றின் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளிவந்தவுடன் சுயமாய் உணவு தேடக் கூடியவையாகவும் உள்ளன. உதாரணமாக பார்ப்பதற்கு வான் கோழியைப் போன்று தோற்றமளிக்கும் மெகாபோட் (Megapode) என்ற பறவைகளின் குஞ்சுகளைத் தாய் பராமரிப்பதில்லை. அதே நேரத்தில் இவைதான் பறவையினங்களிலேயே முட்டையிலிருந்து வெளிவந்த உடன் பறக்கும் திறன்பெற்றவை.

இப்படியான வினோதங்களுக்கிடையில் தன் கூட்டதைச்சார்ந்த மற்ற தாய்மாரின் குட்டிகளைப் பராமரிக்கும் அம்மாக்களும் இருக்கிறார்கள். ஒருவகை ஆப்பிரிக்க நாய்கள் வேட்டையாடி இருப்பிடத்துக்கு வந்ததும் அங்கே தாய்க்காக காத்திருக்கும் குட்டிகள் அந்த கூட்டத்திலிருக்கும் எல்லா தாய்களிடமும் பால் குடிக்கின்றன. சில குட்டிகள் மூன்று நான்கு அம்மாக்களிடம் பால்குடிக்கின்றன. மொத்தத்தில் ஒவ்வொரு அம்மாவுக்கும், தான் என்ன செய்யவேண்டும் என்பது தன் மரபணுக்களில் பொறிக்கப்பட்டிருக்கிறது. எல்லா அம்மாவும் ஒன்றல்ல. சில அம்மாக்கள் வேறமாதிரி.

●



அதிரவைக்கும் அழிவுக்கதை

கார்த்திகேயன் ராமலிங்கம்

# ஏஜெண்ட் ஆரஞ்சு



**வரலாறு எப்போதும் திரும்புகிறது. அதை நினைவில் கொள்ளாதவர்கள், பாடம் படிக்காதவர்கள் மீண்டும் பெருந்தவறுகள் செய்யும் சாபத்துக்குரியவர்கள்.**

ஏஜெண்ட் ஆரஞ்சு என்பது ரசாயன முறையில் இலைகளை உதிர்க்கச்செய்யும் ஒரு தாவரக்கொல்லி. இதை அமெரிக்க ராணுவம் 1962 —1971க்கு இடைப்பட்ட காலத்தில் வியட்நாம் போரில் பயன்படுத்தியது. வியட்நாம், கம்போடியா, லாவோஸ் ஆகிய நாடுகளின் எல்லைப் பகுதிகளில் இம்மருந்து தூவப்பட்டது. இந்த ஏஜெண்ட் ஆரஞ்சு. போரில் வியட்நாமியர்களுக்கு அரணாக விளங்கிய அடர்ந்த வெப்ப மண்டலக் காடுகளின் இலை களை உதிர்க்க இது பயன்படுத்தப் பட்டது.

மொத்தம்19மில்லியன்கேலன் அளவில்பல்வேறு ரசாயனக் கொல்லிகள் பயன்படுத்தப்பட்டதில் அதிகம் கையாளப்பட்டது இந்த ஏஜெண்ட் ஆரஞ்சுதான். ஆரஞ்சு நிற ஸ்டிக்கர்கள் ஒட்டிய ட்ரம்களில் வைக்கப்பட்டிருந்ததால் இதற்கு இப்படி ஒரு பெயர். அமெரிக்க பாதுகாப்புத் துறை போரில் பயன்படுத்துவதற்கென்றே பிரத்யேகமாக உருவாக்கிய மருந்துகள் இவை. வணிக பயன்பாட்டுக்காக அல்ல. ஏஜெண்ட் ஆரஞ்சின் இரண்டு முக்கியமான உட் பொருட்கள் சம அளவிலான 2,4-D (2,4-dinitrophenylhydrazine) மற்றும் 2,4,5-T (2,4,5-tetrachlorophenoxyacetic acid) ஆகியவற்றின் கலவை. ரசாயனம் தயாரிக்கையில் உபபொருளாக கிடைக்கும் 2,3,7,8 tetrachlorop-dibenzo-p-dioxin (TCDD)யும் சிறிது சேர்க்கப்படும்.

ஏஜெண்ட் ஆரஞ்சு தூவப்பட்ட கொஞ்ச நேரத்தில் காய்ந்துவிடும் என்றாலும் மண், இலை, புல், மிருகங்கள், மனிதர்கள் போன்ற உயிரிகளின் மேல் நிரந்தர ரசாயனமாகப் படிந்து பெரிய அளவில் தீங்குகளை விளைவிக்கும். பல ஆண்டுகள் கழித்து இப்போதும் சுற்றுச்சூழல் பாதிப்பையும் அப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு மருத்துவச் சிக்கல்களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

டையாக்ஸின்கள் அறிவியலுக்குத் தெரிந்த நச்சுப் பொருட்கள் அனைத்திற்கும் முதன்மை யானதாக கருதப்படுபவை. குப்பைகள் எரிப்பது, டீசல் புகை வெளியேற்றம் மற்றும் ரசாயன உற்பத்திகளால் இது சுற்றுச்சூழலில் பெருகுகிறது.

அதிலும் TCDD புற்றுநோய் ஏற்படுத்தும் அளவுக்கு இன்னும் மோசம்.

வியட்நாம் போரில் உயிர் தப்பிய அமெரிக்கர், வியட்நாமியர் இருவருமே புற்றுநோய் மற்றும் இதர மருத்துவச் சிக்கல்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். லுகேமியா (இரத்த வெள்ளை அணுக்களை பாதிக்கும் புற்றுநோய்), நீரிழிவு, Hodgkin's disease ( கல்லீரல், கணுக்கள், மண்ணீரல் வீக்கம், இரத்த சோகை), நிண நீர்ச் சுரப்பியில் புற்றுநோய் நடுக்குவாதம், கருப்பை புற்றுநோய், சுவாசப் புற்றுநோய் போன்றவை ஏஜெண்ட் ஆரஞ்சால் ஏற்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளன. நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் மட்டு மன்றி அவர்களது வாரிசுகளும் அபாய கரமான மருத்துவக் கோளாறுகளால் பாதிப் படைந்துள்ளனர். `Spina bifida` — வளரும் கருவில் முதுகுத் தண்டு முழுமையாக வளருவதைத் தடுக்கும் இந்த நோய் ஏஜெண்ட் ஆரஞ்சின் பக்க விளைவாகும்.

**மான்சாண்டோவின் மரபணு மாற்றப்பட்ட பயிர்கள்:**

Glyphosate மான்சாண்டோவால் 1970ல் கண்டுபிடிக்கப்பட்டு 1974ல் அறிமுகப்படுத்தப் பட்ட ரசாயன களைப் பயிர்க்கொல்லியாகும். இது நிலத்தை உழுவதின் தேவையைக் குறைக்கும் என்று கூறியது மான்சாண்டோ. (மண்ணை உழாமல் இருப்பதால் அதன் நீர் ஊடுருவும் திறன், உயிர்ம பொருள்களின் கொள்ளளவு, ஊட்டச்சத்து சுழற்சி ஆகியவை மேம்படும், மண்ணரிப்பு மட்டுப்படும், சிறு மண்ணுயிரிகள் வாழ வழி செய்யும். உரங்களின் தேவை குறையும் மற்றும் பசுமை இல்ல வாயுக்கள் (Greenhouse gases) விவசாய நிலங்களிலிருந்து வெளியேறுதலைக் குறைக்கும்.) ஆனால், அளவுக்கதிகமான Glyphosate பயன்பாடு அதனைத் தாக்குப்பிடித்து வளரும் களைப் பயிர்களை உருவாக்கிவிட்டது. ஆரம்பத்தில், களைப் பயிர்களைத் தடுப்பதற்காக பயன்படுத்தப்பட்டு இப்போது வேளாண்மைக்கே பெரும் அச்சுறுத்தலாக பரிணமித்து நிற்கிறது.

1995 வரை எந்தச் சிக்கல்களும் தென்படவில்லை. முதன்முறையாக ஆஸ்திரேலியாவில்தான் 15 ஆண்டுகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டதன் விளைவாக பிரச்சினை தோன்றியது. பிறகு, அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்காசிய நாடுகள், சீனா, மலேசியா எனப் பல்வேறு இடங்களில் இதே சிக்கல். எனினும், துரதிஷ்டவசமாக களைகளின் வளர்ச்சி Glyphosate-ன் விற்பனையை மேலும் அதிகப் படுத்தவே செய்தது. பின்னர், Glyphosate—ஐ தாக்குப்பிடிக்கும் மரபணு மாற்றப்பட்ட பயிர்களைக் கண்டுபிடித்தனர். இதன்மூலம், முதலில் களைக் கொல்லியை உருவாக்கிவிட்டு பிறகு அந்தத் களைக் கொல்லியையே எதிர்கொண்டு வளரும் பயிர் வகையை உருவாக்கும் வேலையைச் செய்தது மான்சாண்டோ. விளைவாக, இப்போது பயிர் களைப் பாதிக்காமல் களைகளை மட்டும் அகற்ற முடியும் என்று வாக்களித்தனர்.

இதன்மூலம் அதிக Glyphosate விற்பனையைச் சாத்தியப்படுத்தியது மான்சாண்டோ. உதாரணமாக, 1970களில் ஒரு ஹெக்டேருக்கு ஒரு கிலோ என்ற அளவில் பயன்பாட்டில் இருந்தது என்று வைத்துக் கொள்வோம். பின்னர் களைகள் தடையின்றி வளரத் தொடங்கியதும் அதைக் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டேருக்கு 5 கிலோ என்று அதிகரிக்கச் சொன்னார்கள். கூடவே மரபணு மாற்றப்பட்டப் பயிரும் அவசியமாக ஆகிப்போனது. ரசாயனக் கொல்லிகளின் தொடர் பயன்பாட்டால் மண் வளம் குறையும் என்பது நாம் அறிந்ததே. எனவே, எதிர்காலத்தில் உரங்களைக்கூட அவர்களே பரிந்துரைக்கும் வேலையையும் செய்வார்கள் என்பது தெளிவு.

மரபுசார்ந்த இயற்கை வேளாண் முறையில், பலவகையான நாட்டுரகப் பயிர்களைக் குறைந்த செலவில் விளைவித்து வந்த விவசாயிகள், இப்போது மான்சாண்டோ பயிர்களையும் அது பரிந்துரைக்கும் ரசாயனக் கொல்லிகள், உரங்கள் ஆகியவற்றையே பயன்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதன்மூலம் விவசாயிகளுக்கு நிதிச்சுமையும் நுகர்வோருக்கு உடல்நலச் சிக்கல்களும் அதிகரித்துள்ளது. ஆகையால், இது வளங்குன்றா தொழில்நுட்ப வளர்ச்சி (Sustainable Agricultural Development) என்றெல்லாம் சொல்வதற்கில்லை. மாறாக, பூமியின் உயிர் வகைகள் மேல் எந்த ஒரு பொறுப்போ அக்கறையோ இல்லாமல் வியாபார நோக்கில் செயல்படுத்தப்பட்ட தொலைநோக்குத் திட்டம் என்பதே சரி.

**புகைந்து கொண்டிருக்கும் குண்டு**

ஏஜெண்ட் ஆரஞ்சு 2,4—D ஐ தாக்குப்பிடிக்கும் பயிர்கள்: டர்ஸ்பன், நபால்ம், 2,3—D போன்ற ரசாயன பூச்சுக்கொல்லிகளை விலைக்கு வாங்கிய `Dow Chemical` எனும் நிறுவனம் இப்போது



ஏஜெண்ட் ஆரஞ்சை தாக்குப்பிடித்து வளரும் மரபணு வடிவம் மாற்றப்பட்ட பயிர்களுக்கு அனுமதி வழங்க அமெரிக்க அரசாங்கத்தை நிர்பந்தித்து வருகிறது.

அதன் சோளம் மற்றும் சோயா பயிர்கள் 2,4—D தாவரக்கொல்லியின் தொடர் பயன்படுத்து தலையும் சமாளிக்கும் ஆற்றல் கொண்டவை. கூடவே, இந்த ரசாயனம் சுற்றுச்சூழலில் டையாக்ஸின்களின் எண்ணிக்கையை வேறு அதிகரிக்கும்.

அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் `Dow chemical` நிறுவனத்தின் சுற்று வட்டார நதிகள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு டையாக்ஸின் கலப்பால் பாதிக்கப்பட்டுள்ளதை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இது அந்த இடங்களில் வாழும் மக்களுக்கு மார்பக புற்று நோய் அதிகரிக்கவும் காரணியாகவும் அமைந்திருக்கிறது.

2,4,—D சோளமும் சோயாவுமே (மரபணு மாற்றப்பட்டது) ரசாயன களைக்கொல்லியை மிஞ்சும் களைகளுக்குத் தீர்வாக அமையும் என்று மிகையாக விளம்பரம் செய்யத் துவங்கி யிருக்கின்றனர் இந்த `Dow chemical` நிறுவனத்தார். ஆனால், முதலில் மரபணு மாற்ற பயிர்கள்தான் இந்த களைகள் நீடித்து வளரவே காரணமாகி இருக்கின்றன என்ற உண்மையை நாம் உணர வேண்டும்.

Glyphosate-ஐ மிஞ்சும் களைகள் காலப்போக்கில் சாத்தியமாகியதைப் போல 2,4—D—ஐ மிஞ்சி வளரும் களைகள் தோன்றாது என்பதில் என்ன நிச்சயம்?

`Dow Chemicals`—ன் இந்த ஏஜெண்ட் ஆரஞ்சு பயிர்கள் ரசாயன ஆயுதப் போட்டியின் இன்னுமொரு விரிவாக்கம். இது இன்னும் நச்சுத் தன்மை கொண்ட ரசாயனங்கள் தோன்றவே வழி வகுக்கும். உணவு ஆதாரங்கள் கேள்விக்குள்ளாவதோடு புதுப்புது நோய்கள் தோன்றவும் சுற்றுச்சூழல் மேலும் சீர்கெடவும் செய்துவிடும்.

அது படைப்பு அல்ல, உயிர் தரும் உன்னதம் அல்ல, அது அழிக்கும் ஆபத்து.

●




## சுற்றுச்சூழல்சார் செயல்பாட்டு பட்டியலில் இந்தியாவிற்கு 141வது இடம்!

உலக நாடுகளின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை குறித்த செயல்பாடுகளை ஆய்வுசெய்த யேல் பல்கலைகழகம் "சுற்றுச் சூழல்சார் செயல்பாட்டு பட்டியல்" (Environmental Performance Index) ஒன்றை வெளியிட்டுள்ளது. இதில் இந்தியா 141வது இடத்தை பிடித்துள்ளது. ஐக்கிய நாடுகள் வகுத்துள்ள நீடித்த நிலைத்த வளர்ச்சியின் அம்சங்கள் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வு பட்டியல் கூறும் முக்கிய செய்திகள்: உலகெங்கும் மாசடைந்த குடிநீரால் இறப்பவர்கள் எண்ணிக்கையை விட மாசடைந்த காற்றினால் மடிபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. உலகெங்கும் சுமார் 3.5 பில்லியன் மக்கள் மாசடைந்த காற்றை சுவாசிக்கின்றனர். இந்தியாவிலோ சுமார் 75 சதவீத மக்கள் மாசடைந்த காற்றை சுவாசிகின்றனர். காற்று மாசடைவதை தடுக்க இந்திய அரசு போதிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளது இந்த அறிக்கை.


உலகில் 550 மில்லின் மக்களுக்கு குடிப்பதற்கான பாதுகாப்பான குடிநீர் கிடைப்பது அரிதாகவே உள்ளது. 2.4 பில்லியன் மக்கள் சுகாதார மான கழிப்பிட வசதி இல்லாமல் உள்ளனர். உலகின் மொத்த மீன் வளத்தில் சுமார் 4.34 சதவீதம் முற்றிலுமாக அழிக்கப்பட்டுள்ளது. 2.52 மில்லின் W.I. அளவிலான காடு 2014ம் ஆண்டில் மட்டும் அழிக்கப் பட்டுள்ளது. அறிக்கையை முழுமையாக வாசிக்க: http://epi.yale.edu/downloads

●

### 2015ம் ஆண்டு காலநிலையின் நிலை

அமெரிக்க வானிலை சங்கம் "2015ம் ஆண்டு காலநிலையின் நிலை" (State of Climate - 2015) ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. இவ்வறிக் கையில் கூறப்பட்டுள்ள தகவல்கள்: பச்சை இல்ல வாயுகளின் (Greenhouse gases) வெளியேற்றம் கடந்த ஆண்டுகளில் பதிவான அளவை விட மிகவும் அதிகமாக 2015ம் ஆண்டு இருந்துள்ளது.

இதுவரை பதிவானவற்றில் 2015ம் ஆண்டே மிகவும் அதிக தட்பவெப்ப உள்ள ஆண்டாக பதிவாகியுள்ளது. இதற்கு "எல்—நியோ" ஒரு காரணமாக இருக்கலாம் எனவும் கூறுகிறது



ஆய்வறிக்கை. கடல் மட்டளவு 2015ம் ஆண்டு சுமார் 70 மிமீ அளவு 1993ம் ஆண்டு இருந்த அளவை விட உயர்ந்துள்ளது. உலகெங்கும் சூறாவளி காற்றின் தாக்கம் சுமார் 101 இடங்களில் நிகழ்ந்துள்ளது. இது கடந்த ஆண்டுகளைவிட அதிகமான எண்ணிக்கை.

அறிக்கையை முழுமையாக படிக்க : <http://www.ametsoc.net/sotc/StateoftheClimate2015_hires.pdf>

●



# சென்னை வெள்ளம் குறித்தான நாடாளுமன்ற குழுவின் அறிக்கை !!

**2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் நிகழ்ந்த சென்னை பெருவெள்ளம் குறித்தான நாடாளுமன்ற குழுவின் அறிக்கை வெளியாகி உள்ளது. அறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய தகவல்கள் :**



நீர்நிலைகள் பல்வேறு வகையில் ஆக்கிர மிக்கப்பட்டுள்ளதே சென்னை பெரும் வெள்ளத் திற்கான முக்கிய காரணம் என்று நாடாளுமன்ற குழு கூறியுள்ளது. எனவே இவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந் துரைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகர கழிவு நீர் வடிகால் அமைப்பு மிகவும் மோசமாக உள்ளதாக குழு தெரிவித்துள்ளது.

திட்டமிடப்படாத நகர கட்டுமான் இது போன்ற நிகழ்வுக்கு மற்றொரு முக்கிய காரணம் எனவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆகவே இதுபோன்ற இயற்கை பேரிடர்களைக் கையாளும் வகையில் நகர கட்டுமானம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பிரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பேரிடர் மேலாண்மை மிகவும் சீர்கெட்டு கிடப்பதையும் குழு சுட்டிக்காட்டியுள்ளது. தேசிய பேரிடர் ஆணையம், மற்றும் மாநில பேரிடர் ஆணையம் செயல்படமால் இருப்பதை இக்குழு எடுத்துரைத்துள்ளது. மாநில பேரிடர் ஆணையம் செயலற்று உள்ளதையும் கூறியுள்ளது நாடாளுமன்றக் குழு. அதேபோல தமிழக அரசின் கூற்றான, இது எதிர்பாராத இயற்கை பேரிடர் என்னும் கருத்தை குழு மறுத்துள்ளது.

காலநிலை மாற்றம் காரணமாக நிகழும் தொடர் இயற்கை சீற்றங்களில் இருந்து நம்மை பாதுகாக்க போதிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது நாடாளுமன்ற குழு.

பேரிடர் மேலாண்மை, முன்தயாரிப்பு, மக்களுக்கான பயிற்சி, கட்டுமானம் போன்ற வற்றில் மத்திய மாநில அரசுகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளது.

சென்னை வெள்ளம் பல கோடி இழப்பை ஏற்படுத்தியுள்ளது எனவும், இந்த இழப்புகளை சந்திக்க தேவையான நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு இன்னும் தமிழக அரசுக்கு அளிக்கவில்லை என்பதையும் பதிவு செய்திருக்கிறது நாடாளுமன்ற குழு அறிக்கை.

●




# தில்லிப் பல்க(கொ)லைக் கழகத்தின் மரபீணிக் கடுகை மறுதளிக்க 25 காரணங்கள்!

**2010**இல் மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.ட்டி கத்தரிக்காய் நமக்குத் தேவையில்லாதது, நாம் விரும்பாதது, பாதிக்கக்கூடியது என்பன போன்ற காரணங்களால் நம்முடைய கூட்டு முயற்சியால் அது தடுத்து நிறுத்தப்பட்டது இன்னமும் உங்கள் நினைவிலிருந்து இருக்கும். மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.ட்டி கத்தரிக்காயை மத்திய அரசு பல்வேறு காரணங்களினால் விளைவிக்க அனுமதிக்க நிரந்தரத் தடையை விதித்தது. மத்திய அரசு இந்த நிரந்தரத் தடையை விதிக்கும் முன்னரே தமிழ்நாடு உட்பட 13 மாநிலங்கள் பி.ட்டி கத்தரியைத் தடைசெய்தன. அப்போது மத்திய அரசு சமூகத்தின் கருத்திற்கும் அறிவியல் உண்மைகளுக்கும் மதிப்பளிக்கும் வகையில் நிரந்தரத் தடை விதிப்பதாகத் தெரிவித்தது அந்த உத்திரவில்.

மரபணு மாற்றுப் பயிர்கள் குறித்த மாயைகளை கடந்த 15 ஆண்டுகளாக புழக்கத்தில் இருந்து வரும் பி.டி. பருத்தி வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது. எந்தப் புழுவைக் கொல்ல வேண்டுமோ அந்தப் புழு எதிர்ப்பு சக்தியைப் பெருக்கிக் கொண்டது, விவசாயிகள் இப்போது முன்பு பயன்படுத்தியதை விட, இதுவரையில்லாத அளவிற்கு, பூச்சிக் கொல்லிகளை அதிகம் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்திய பருத்தி விவசாயம் மற்றும் பருத்தி சந்தை மான்சான்டோ என்கிற அந்த ஒரேயொரு பன்னாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குள் சென்று விட்டதையும் நாம் காண்கிறோம். மேலும் இந்த நாட்டின் விவசாயிகள் இலட்சக்கணக்கில் தற்கொலை செய்து கொண்டதும் அதில் பெரும் பாலானோர் பருத்தி விவசாயிகள் என்பதையும் நாம் அறிவோம்.

இப்போது 2016ல் வேறொரு மரபணு மாற்றுப் பயிர் நம் மீது திணிக்கப்படத் திட்டமிடப் படுள்ளது. மரபணு மாற்றப்பட்ட மூன்று கடுகு வகைகளை விளைவிக்க அனுமதிக்க வேண்டும் எனக் கேட்டு இந்திய மரபணு மாற்றுத் தொழில்நுட்ப அங்கீகாரக் குழுவிடம் கேட்கப் பட்டுள்ளது. மரபணு மாற்று அங்கீகாரக் குழு என்பது மரபணு மாற்றுப் பயிர்களை உருவாக்கும் விஞ்ஞானிகளால், அதன் ஆதரவாளர்களால் நிரப்பப்பட்ட அமைப்பாகவும் உள்ளதை நாம் அறிவோம்.

இந்தியச் சுற்றுச்சூழல் சட்டம் 1989ன் படி அமைக்கப் பட்ட மரபணு மாற்று அங்கீகாரக் குழுவிடம் தேவைப்படும் அனைத்து சோதனைகளையும் செய்துள்ளோம், அதன்

தாக்கங்களையும் ஆராய்ந்துள்ளோம் எனக் கூறி அந்த ஆய்வு விவரங்களுடன் மனு செய்யப் படுள்ளது. தாரா வீரிய ஒட்டு 11 (அ) டி.எச்.எம்—11 என்று பெயரிடப்பட்டுள்ள ரகமும், மரபணு மாற்றும் செய்யப்பட்ட அதன் தாய், தந்தை ரகங்களும் என மூன்று மரபணு மாற்றம் செய்யப்பட்ட கடுகு ரகங்களை வெளியீடு செய்ய தில்லிப் பல்கலைக் கழகத்தின் மரபணு மாற்றுப் பயிர்கள் ஆய்வு மையம் கோரியுள்ளது. இதன் உண்மையான பொருள் விளைநிலத்தில் விவசாயிகள் விளைவிக்க அனுமதிக்க வேண்டும் என்பதே.

அதிக விளைச்சலைப் பெறவே இந்த மரபணு மாற்றுக் கடுகை உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உண்மையில் நம்மிடம் ஏற்கெனவே இந்த ரகங்கள் எவ்வளவு விளைச்சல் தருமோ அதைவிட அதிகமாக விளைச்சல் தரும் ரகங்கள் புழக்கத்தில் உள்ளன. மேலும் மரபணுக்களை மாற்றாமலேயே சி.எம்.எஸ் என்கிற தொழில் நுட்பம் மூலம் பல்வேறு நாடுகள் அதிக விளைச்சல் தரும் இரகங்களை உருவாக்கி வருகின்றன. ஆனால் உண்மையான காரணம் என்னவெனில் விதை உற்பத்தி செய்யும் விதை நிறுவனங்களிடம் விவசாயிகள் விதையையும் அதனுடனே களைக்கொல்லியையும் சேர்த்து வாங்கிட வைக்கவேண்டும் என்பதே. இதைவிட இன்னும் மோசமானது என்னவெனில் சி.எம்.எஸ் தொழில்நுட்பத்தைக் கையாள்வதில் தங்களுக்குள்ள சில பல இடர்பாடுகளைக் காட்டி, விளைச்சலை அதிகரிக்கக் கைவசம் உள்ள இதர பிற வாய்ப்புகளைப் பற்றியெல்லாம் கண்டுகொள்ளாமல், விவசாய விஞ்ஞானிகளாக இல்லாத சில விஞ்ஞானிகள் மரபணு மாற்றுத் தொழில் நுட்பம் மட்டுமே ஒரே வழி என்று மரபணு மாற்று கடுகை உருவாக்கி அதை நம் தலைமீது கட்ட முயல்கிறார்கள். இவர்கள் சி.எம். எஸ் நுட்பத்தைப் பயன்படுத்தாமல் செடிகளில் ஆண்மலட்டுத் தன்மையை உருவாக்கும் பார்னஸ் (barnes) என்கிற மரபணுவையும் பாக்டீரியத்தில் உள்ள மரபணுக்களையும் திணித்த மரபணு மாற்றுக் கடுகை உருவாக்கி அதனுடன். பார்ஸ்டார் (Barstar) என்ற மரபணு திணிக் கப்பட்ட இன்னொரு கடுகுடன் இணைத்து இந்த மரபணு மாற்றுக் கடுகை உருவாக்கியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள். இரு வேறு பெற்றோர்கள் இணைவதால் ஏற்படும் வீரியத் தன்மை அவைகளின் பிள்ளைகளுக்குச் செல்லும். இந்த இரு பெற்றோரின் சிறப்புத் தன்மைகளுடன், திணிக்கப்பட்ட பார்ஸ்டார் மற்றும் பார்னஸ் என்ற மரபணுக்களின் பூச்சிக் கொல்லிகளைத் தாங்கிக் கொள்ளும் தன்மையும் செல்லும். இதன் விளைவாக இந்தக் கடுகு வகைகளானது வெறும் பி.டி. ரகக் கடுகாக மட்டுமின்றி களைக் கொல்லிகளைத் தாங்கும் வகைகளாகவும் இருக்கும்.

இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகத்தின் கீழ் உள்ள உயிரித் தொழில்நுட்பத் துறையின் நிதி உதவியாலும், தேசிய பால்வள வளர்ச்சி வாரியத்தின் நிதி யுதவியும், பெற்றுதான் இந்த மரபணு மாற்றுக் கடுகு ரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதாவது மக்களின் வரிப்பணத்தால் எந்த விதத்திலும் தேவைப்படாதவை உருவாக்கப் பட்டு பல நூறுகோடி ரூபாய் பணம் வீணடிக்கப்பட்டுள்ளது. பால்வள வளர்ச்சி வாரியம் ஏற்கெனவே தனது தாரா என்ற பெயரிலான எண்ணெய் வணிகத்தை நிறுத்தி விட்டதுதான் இதில் உள்ள முரண்.

தில்லிப் பல்கலைக் கழகம் உருவாக்கிய இந்த மரபணு மாற்றுக் கடுகை ஏன் மறுக்க வேண்டும் என்பதற்காகவும் மனித குலத்திற்கும், உலகிற்கும் தேவையேபடாத, ஆபத்தானதா அல்லவா என்பதை முழுமையாக அறியப்படாத மரபணு மாற்றுப் பயிர்களைச் சோதித்துப் பார்ப்பதற்கான சோதனைச்சாலை எலிகள் அல்ல நாமும் நம் வாழ்க்கையும் என்பதை உரக்கச் சொல்லவதற்காகவும் என 25 காரணங்கள் இதோ..

1. மரபணு மாற்றுத் தொழில் நுட்பம் துல்லியமானதல்ல. இது இயற்கைக்கு எதிரானது மட்டுமல்ல, உயிருள்ளவைகளின் மீது செய்துபார்க்கக்கூடிய துல்லியமான நுட்பமுமல்ல, நல்ல விதை இனப்பெருக்க நுட்பமுமல்ல என்பதற்கான ஆதாரங்கள் குவிந்து கிடக்கின்றன. மேலும் திணிக்கப்பட்ட மரபணுக்கள் இருக்கவேண்டிய இடத்திலேயே நிலைத்து இருப்பவையுமல்ல, அவைகளின் செயல் வெளிப்பாடுகளும் ஒரேமாதியாக இல்லை. தவறு நடந்துவிட்டால் திருப்பி அழைத்துக்கொள்ளக்கூடிய சாத்தியங் களுமில்லாத தொழிட்பமும், தாவரங்களுமாகும் இந்தத் தொழில்நுட்பமும் இந்த மரபணுமாற்று உயிரினங்களும். இவைகள்தான் நம்முடைய விவசாயத்திலும் நம்முடைய உணவிலும் திணிக்கப்படுகிறது. மேலும் இவை நம்முடைய

உடல்நலத்தின் மீதும் சுற்றுச்சூழல் மீதும் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. அதுமட்டுமின்றி விவசாயத்தின்மீது கடுமையான தாக்கத்தை, பெருத்த சிக்கலையும் ஏற்படுத்தக் கூடியது என்பது எல்லோரும் அறிந்ததே. விவசாயிகளுக்கு மரபணு மாற்று விதைகளைத் தவிர வேறு விதைகளே இல்லை என்ற நிலையை ஏற்படுத்தும். நுகர்வோரின் கதியும் இதுவே—வேறு மாற்று இல்லை என்ற நிலை. மரபணு மாற்றப் பயிர்கள், அந்த வகையான உணவுப் பண்டங்கள் ஏற்படுத்தும் பாதிப்புகள், http://indiagminfo.org/?p=657> என்ற இணைய இணைப்பில் காணக் கிடைக்கின்றன.

2.களைக்கொல்லி தாங்கு பயிர்கள் விவசாயத்திற்கு, விவசாயிகளுக்கு, பிற உயிரினங்களுக்கு, மனிதர்களுக்கு, நூகர்வோர்களுக்கு கடும் பாதிப்பை உருவாக்கும்.

எவ்வளவு களைக் கொல்லியை தெளித்தாலும் அதைத் தாங்கி வளரும் பயிர்களே களைக் கொல்லிகளைத் தாங்கி வளரும் பயிர்கள் எனப் படுபவை.எடுத்துக்காட்டாக மான்சான்டோவின் ரவுண்டப் களைக் கொல்லியை எத்தனை முறை, எவ்வளவு அதிகம் தெளித்தாலும் சாகாமல் தாங்கி வளரக்கூடியவை மான்சான்டோவின் ரவுண்டப் ரெடி மரபணுமாற்றுப் பயிர்கள். இந்த வகை களைக் கொல்லிகளைத் தாங்கும் பயிர்கள் (இனி க.கொ.தா.பயிர்கள்) மனிதர்களின், பிற உயிரினங்களின் உயிருக்கும் வாழ்விற்கும் மிக அதிகமான பாதிப்புகளை உருவாக்குகின்றன. ரவுண்டப் ரெடி வகை பயிர்களை அமெரிக்கா, பிரேசில், கனடா, அர்ஜெண்டீனா உள்ளிட்ட நாடுகளில் அறிமுகம் செய்த பின் அந்த நாடுகளில் ரவுண்டப் ன் பயன்பாடு பன்மடங்கு பெருகியுள்ளது. (இதனால் விதைகள் மற்றும் ரவுண்டப் விற்றல் மூலம் மான்சான்டோவிற்கு இரட்டை லாபம் என்பது தனி கதை). இந்த ரவுண்டப் ல் உள்ள இரசாயன மூலமான கிளைப் போசேட் என்ற இரசாயனம் “மனிதர்களுக்கு புற்று நோயை உருவாக்கக் கூடியது” என்று உலக சுகாதார நிறுவனம் உலக நாடுகளை 2015ல் எச்சரித்துள்ளது. இதில் கொடுமை என்னவெனில் இந்த கிளைப்போசேட் மிகவும் பாதுகாப்பானது என்றே மான்சான்டோ ஆரம்பம் முதம் எல்லோரையும் நம்ப வைத்துள்ளதே. இது மட்டுமல்ல. இந்தக் களைக் கொல்லிகளைத் தாங்கிடும் தன்மையைத் தரும் மரபணுக்கள் களைச் செடிகளுக்கும் சென்றுவிட்டது. விளைவு களைகள் இப்போது சூப்பர் களைகளாகிவிட்டன. களைக் கொல்லிகள் அவைகள் என்ன சேதி என்று கேட்கின்றன. இந்த நிலை உலகின் பல நாடுகளில் தெளிவுறப் பதிவு செய்யப்படுள்ளது. களைக் கொல்வதற்காக என்று அறிமுகப்படுத்தப் பட்ட இவை களைகள் மட்டுமின்றி பிற உயிரினங்களையும் கடுமையாக பாதிக்கிறது, மண்ணில் வாழும் உயிரினங்களைப் பாதிக்கச் செய்து மண் வளத்தை பாதிக்கின்றன. இந்திய விவசாயச் சூழலில் களை எடுப்பு என்பதன் மூலமாக கிராமப்புற பெண்களின் வருவாய் மூலம் அக்குடும்பங்களின் வருவாய் உயர்கிறது. இத்தகு களைக் கொல்லி தாங்கு பயிர்களால் இனி இக்கிராமப் பெண்களின் வருவாய் ஆதாரம் அழிக்கப்படும்.

3. உண்மையில் களைகளில் பல மூலிகைகளாக உள்ளன அல்லது கீரைகளாகவும் கால்நடைகளின் தீவனமாகவும் உள்ளன. களைக் கொல்லிகளைத் தாங்கி வளரும் பயிர்களை அறிமுகம் செய்வதால் இந்திய விவசாயப் பாரம்பரியமும் மண்வளப் பாதுகாப்பு வழியாகவும் உள்ள கலப்புப் பயிர்கள் என்ற வழக்கம் இல்லாமல் போய்விடும்.

கலப்புப் பயிர்களே பருவநிலை மாற்றத்தின் பாதிப்பைக் குறைக்கச் செய்யும் வழியாகவும் இருந்து வருகின்றன. இது மட்டுமின்றி புதுவகையான சிக்கல்களைகளையும் இந்த மரபணுமாற்று களைக் கொல்லிகள் தாங்கு பயிர்கள் கொண்டுவந்துள்ளன. இந்த விதைகள், களைக் கொல்லி தெளிப்பு, காற்றின் மூலம் அவைகளின் பரவல் மூலம் பக்கத்து விவசாயியின் பயிர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதால் அமெரிக்கா போன்ற நாடுகளில் நேற்றுவரை நண்பர்களாக இருந்த அக்கம் பக்கத்து விவசாயிகள் சண்டைக்காரர்களாகி நீதிமன்றத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா போன்ற பெரும் பண்ணைகளாக உள்ள விவசாய சூழலில் அங்குள்ள விவசாயிகளே தாங்கமுடியவில்லையெனில் சிறுசிறு நிலங்களாக உள்ள இந்திய விவசாயிகளின் நிலை? மேலும் எவ்வளவு வேண்டுமானுலும் எப்போது வேண்டுமானாலும் என்ற நிலையில் களைக் கொல்லிகள் பயன்படுத்தப்படும் போது நுகர் வோரின் நிலை?

4. பின் கதவு வழியாக இக்கடுகைத் திணிக்க முயற்சி.

தில்லிப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ள இம்மூன்று வகையான மரபீணிக் கடுகு

வகைகளும் களைக் கொல்லியைத் தாங்கி வளரும் வகையைச் சேர்ந்தவை. அதிர்ச்சியூட்டும் வகையில் களைக்கொல்லி தாங்கு திறனைத் தரும் 'பார்' வகை மரபணுக்கள் இந்தக் கடுகு வகைக்குள் மரபணுக்களாக திணிக்கப்பட்டுள்ளது. அதாவது நேரிடையாக களைக் கொல்லி தாங்கும் பயிர்கள் என்று தெரிவிக்காமல் செய்யப் படுள்ளது. அனுமதிக்காக அளிக்கப்பட்ட மனுவில் இவைகள் களைக் கொல்லி தாங்கு கடுகு வகைகள் என்று தெரிவிக்காமலேயே அனுமதி பெற முயற்சிக்கப்படுகிறது. அப்படி தெரிவிக்கப்படாத காரணத்தால் இந்தக் கடுகு வகைகளை களைக் கொல்லி தாங்கு திறனுடைய பயிர்களுக்குச் செய்ய வேண்டிய சோதனைகளைச் செய்யாமலேயே அனுமதி வேண்டப்படுகிறது. உண்மையில் களைக் கொல்லி தாங்கு மரபணுக்களால் வரக்கூடிய பாதிப்புகள் மட்டுமின்றி அதிகம் களைக் கொல்லிகளைத் தெளிக்க வேண்டியிருக்கும் நிலையால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும், இவைகளின் கூட்டு விளைவால் ஏற்படும் பாதிப்புகளையும் ஆராய்ந்து பாதிப்பால்லாதவைகள் என்று நிரூபிக்க வேண்டும். ஆனால் அவர்கள் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரைகளைப் பார்த்தால் தில்லி பல்கலைக் கழகத்தின் நோக்கம் வேறாக இருப்பது தெரிகிறது. அதிக விளைச்சலுக்கான மரபணு மாற்றுப் பயிர்கள் என்ற பெயரில் களைக் கொல்லிகளைத் தாங்கும் பயிர்களை இந்திய விவசாயத்தில் திணிப்பதே அந்த நோக்கமாக இருக்கிறது. அதற்காகத்தான் இந்த மரபீணிக் கடுகு ரகங்கள் களைக் கொல்லி களைத் தாங்கும் திறனைக் கொடுக்கும் மரபணுக்கள் திணிக்கப்பட்டிருப்பினும் வெறும் விளைச்சலுக்கானவை என்றே கூறுகிறது.

பன்னாட்டு விதை நிறுவனங்கள் இந்திய விவசாயத்தில் களைக் கொல்லிகளைத் தாங்கும் மரபணு மாற்று விதைகளைப் புகுத்த ஓநாயாகக் காத்திருப்பதை நாம் அறிவோம். இப்படி களைக் கொல்லிகளைது தாங்கும் கடுகு வகைகளை அறிமுகம் செய்து விட்டால் அவைகளுக்கான இந்தியக் கதவி திறக்கப்பட்டு இராஜபாட்டையில் சிவப்புக் கம்பளம் விரித்து விட்டதாகிவிடும். இந்தப்பன்னாட்டு விதை நிறுவனங்கள் மரபணு மாற்றங்கள். திணிப்புகளுக்கான காப்புரிமைகளை வைத்துள்ளதும் அவைகளே களைக் கொல்லிகளைத் தயாரிப்பவைகளாகவும் உள்ளதையும் இந்துக் கூட்டு உரிமையின் பின்னால் அவற்றின் லாப நோக்கமும் வெறியும் புதைந்துள்ளதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆகவே இந்த மரபீணிக் கடுகு வகைகளை இந்திய மக்களின் பணத்தால் இயங்கும் பல்கலைக் கழகங்கள் உருவாக்கியவையா அல்லது பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கியவையா என்ற விவாதம் தேவையற்றது. நம் வீட்டுக் கொள்ளிக் கட்டை என்பதற்காக தலையில் சொரிந்து கொள்ள முடியுமா?

5. மரபீணிக் கடுகு வகைகள் அதிக விளைச்சலைத் தரும் என்பதும் உண்மையல்ல, உறுதிப் படுத்தப்படவில்லை.

இந்த டி.எச்.எம் 11 வகை மரபீணிக் கடுகு அதிக விளைச்சல் தருவதாகக் காட்டுவதற்கேற்ற வகையில் குறைந்த விளைச்சல் தரும் ரகங்களுடன் ஒப்பிட்டுக் காட்டுப்பட்டுள்ளது. புழக்கத்தில் உள்ள அதிக விளைச்சல் தரும் ரகங்களுடன் ஒப்பீட்டு ஆய்வுகளை நடத்தவேயில்லை. மேலும் டி.எச்.எம் 11 வகையை ஆய்வுக்குட்படுத்தக் கேட்ட அனுமதிக் கடிதத்தில் கூறப்பட்ட கட்டுப்பாடுகள் மற்றும் விதிகளையும், மரபணு மாற்று அங்கீகாரக் குழுவின் பல கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளையும் வேண்டுமென்றே மீறியுள்ளனர். இப்படிக் குறைந்த விளைச்சல் உள்ள ரகங்களுடன் ஒப்பீட்டு ஆய்வுகளை நடத்தி 28% அதிக விளைச்சல் என்று கூறப்பட்டுள்ளது. தவறான, பொருத்தமில்லாத ரகத்துடன் ஒப்பீடு செய்துவிட்டு அதிக விளைச்சல் தருகிறது என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளனர் தில்லிப் பல்கலைக் கழகமும் அதன் ஆய்வாளர்களும். அப்படி அது அதிகம் விளைந்திருப்பினும் வேறு பெற்றோர்களை இணைத்து உருவாக்கப்படும் கலப்பினத்தின் வீரியத்தால் ("hybrid vigour") ஏற்பட்டதாகவே கருத முடியுமே தவிர மரபணு மாற்றத்தால் அல்ல. ஆகவே இந்த மரபணு மாற்றக் கடுகால் விவசாயிகளுக்கோ, மக்களுக்கோ எந்த வகையிலும் உண்மையான பலனில்லை. ஏற்கெனவே இந்தியாவில் முழுமையாக சோதிக்கப்படாத, டி.எச்.எம் 11 ஐ விட அதிகம் விளைச்சல் தரும் ரகங்கள் பல வழக்கத்தில் உள்ளன.

6. இந்த மரபீணிக் கடுகு வகைகளால் கடுகு விளைச்சல் அதிகமாகி எண்ணெய் இறக்குமதி குறையும் என்பது உண்மையல்ல.

டி.எச்.எம் 11 ரக மரபீணிக் கடுகை உருவாக்கிய விஞ்ஞானிகள் டி.எச்.எம் 11 ரகத்தால் கடுகு

விளைச்சல் அதிகமாகும். அதன் கரணமாக இந்தியாவின் உணவு எண்ணெய் இறக்குமதி குறையும் என்கின்றனர். இந்தக் கடுகு வகை வழகத்தில் உள்ள ரகங்களை விட அதிகம் விளையவில்லை என்பதுடன் இது வரை உருவாக்கித் தரப்பட்ட உயர் விளைச்சல் வீரிய வித்துகளாலும் இந்திய இறக்குமதி குறையவில்லை என்பதே உண்மை நிலையாகும்.

7. 2002ல் பேயர் நிறுவனத்தின் மரபணீக் கடுகை நிராகரித்தற்கான அதே காரணங்கள் இந்த மரபீணிக் கடுகிற்கும் பொருத்தமாகவே உள்ளன.

2002ல் பேயர் நிறுவனத்தின் துணை நிறுவனமான புரோஅக்ரோ விதை நிறுவனம் இப்போது உருவாக்கப்படுள்ள மரபீணிக் கடுகில் உள்ளது போலவே பார், பார்னேஸ், மற்றும் பார்ஸ்டார் மரபணுக்களைப் புகுத்தி உருவாக்கிய மரபீணிக் கடுகிற்கு அனுமதி கேட்டது. அப்போது இந்திய வேளாண் அறிவியல் கழகம் (Indian Council of Agricultural Research) புரோ அக்ரோ நிறுவனத்தின் மரபீணிக் கடுகை சோதித்த முறையிலும் அதன் முடிவுகள் மீதும் திருப்தி இல்லை என்று அறிவித்தது. கடுகு ஒரு எண்ணெய் வித்து மட்டுமல்ல, நேரடியாக உணவில் பயன்படுத்தப்படும் பொருளாகவும், அதன் இலைகள் கீரையாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அப்போது எழுப்பப்பட்ட ‘மரபணு மாற்றுக் கடுகு விளைவிக்காத பகுதிகளுக்கு அதன் மகரந்தம் பரவுவதை எப்படிக் கட்டுப்படுத்தும்?’ என்ற கேள்விக்கு மரபணு மாற்று அங்கீகாரக் குழுவினரால் தெளிவான பதிலைத் தரமுடியவில்லை. மிக முக்கியமாக, களைக் கொல்லியைத் தாங்கும் தன்மைக்கான மரபணுக்களை கண்டறிதல் சோதனைக்காகவே (marker technology ) சேர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தாலும் புரோஅக்ரோவின் மரபீணிக் கடுகு களைக் கொல்லியைத் தாங்கி வளரும் கடுகு என்று அறிவித்தது. இந்தக் காரணத்திற்காகவே புரோ அக்ரோவின் மரபீணிக் கடுகு நிராகரிக்கப் பட்டாலும் அப்போதைய அங்கீகாரக்குழுவினர் விவசாயம் செய்யப்படும் நிலையில் இந்த மரபணுக்களின் விளைவைக் கண்டறிவது மிகவும் கடினமான காரியம் என்பதை அறிந் திருந்த து. இதே காரணங்கள் இப்போது



தில்லிப் பல்கலைக்கழகத்தின் டி.எச்.உம் 11 ரகக் கடுகிற்கும் பொருந்தும்.

8. எடி.எச்.எம் மரபீணிக் கடுகு என்பது பசுத் தோல் போர்த்திய புலிகளே— மரபணு மாற்றுப் பயிர்களை இந்திய விவசாயத்திற்குள் புகுத்தத் துடிக்கும் ஆதரவாளர்கள் இந்தியப் பல்கலைக் கழகம் போன்ற பொதுத் துறை நிறுவனத்தின் தயாரிப்பு என்ற பெயரில் மரபணு மாற்றுப் பயிர்களைத் திணிக்கத் துடிக்கின்றனர். பொதுத் துறை நிறுவனத்தின் தயாரிப்பு உயிரிப் பாதுகாப்பு சோதனைகளைக் கடந்துவிட்டால் அதைக் காட்டியே பன்னாட்டு விதை நிறுவனங்களின் மரபணு மாற்றுப் பயிர்களை மிக எளிதில் திணித்து விடலாம் என்று கபட நாடகம் ஆடுகின்றனர். எரிக்கும் தீயில் உள்ளாட்டுத் தீ பன்னாட்டுத் தீ என்றெல்லாம் இல்லை. எல்லா தீயும் ஒன்றே. எல்லா மரபணு மாற்றுப் பயிர்களும் ஆபத்தானவையே. மேலும் இதை உருவாக்கியவர்கள் அனுமதி பெற்றதுமே அதன் காப்புரிமையை எவருக்கு வேண்டுமானாலும் விற்கலாம். அது மான்சான்டோ உள்ளிட்ட

நிறுவனங்களாகவும் இருக்கலாம். இந்தியாவில் மரபணு மாற்றுப் பயிர்களுக்கு உள்ள மிகப் பெரிய எதிர்ப்புள்ள நிலையில் அனுமதிப் பெறுவதற்கான நிலைப்படி நிலையில் முன்படிகளில் மரபீணி மக்காச் சோளம் உள்ளிட்ட பல பயிர்களை வைத்துக் காத்திருக்கும் மான்சான்டோ உள்ளிட்ட பல பன்னாட்டு விதை நிறுவனங்கள் தில்லிப் பல்கலைக் கழகத்தின் மரபீணிக் கடுகை முந்த விட்டதின் காரணம். முதலில் இந்தியாவின் பொதுத்துறை நிறுவனம் என்ற மன உணர்வில் இது அனுமதி பெறட்டும்.பின்னர் அதைக்காட்டியே நாம் பெற்றுக் கொள்ளலாம் என்பதே. நம்மைப் பொறுத்த வரையில் தில்லிப் பல்கலைக் கழகத்தின் மரபீணிக் கடுகு என்பது புற்றீசல்கள் போல் வரக் காத்திருக்கும் புலித் தோல் போர்த்திய புலிகளில் முதல் புலி என்பதே.

9. தில்லிப் பல்கலைக் கழகத்தின் மரபீணிக் கடுகு விதை நிறுவனங்கள் இலாபம் பெறவே உதவும்.

ஜெர்மனியைச் சேர்ந்த பேயர் நிறுவனம் மான்சான்டோ நிறுவனத்தை வாங்கி உலகின் மிகப் பெரும் விதை நிறுவனமாகத் துடிக்கிறது. இந்தப் பேயர் நிறுவனம் தான் பார் வகை மரபணுக்கள் மீது பல்வேறு காப்புரிமைகளைக் கொண்டுள்ளது. இதுமட்டுமல்ல; இந்த மரபீணிக் கடுகு தாங்கிடக் கூடிய களைக் கொல்லியான குல்ஃபோசினேட் அமோனியம் (Glufosinate ammonium) என்ற களைக் கொல்லியை இந்தியாவில் அதிக அளவில் விற்பது பேயர் நிறுவனம். பொதுத் துறை நிறுவனமான தில்லி பல்கலைக் கழகம் தனது மரபீணிக் கடுகின் கொல்லி தாங்கும் தன்மையை மறைத்திருப்பது பேயர் நிறுவனம் போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் நலனுகளுக்காகவேயன்றி இந்திய விவசாயிகளுக்காவோ, மக்களின் நலனுக்காக அல்ல என்பதே உண்மை ஆகவே தொழில்நுட்பத்தைக்கூட இந்திய விவசாயிகள் நலனுக்காகவோ, இந்திய மக்களின் நலன்களுக்காக உருவாக்குவதற்குப் பதிலாக பன்னாட்டு நிறுவனங்களின் நலன்களுக் காகவே உருவாக்கப்படுகின்றன. உண்மையில் விவசாயிகள் மரபீணி இல்லாத அதிக விளைச்சல் தரும் கடுகை ஏற்கெனவே தம் கையில் வைத்துள்ளனர்.

10. கடுகு விளைவிக்கும் முக்கியமான மாநிலங்கள் உள்ளிட்ட பல மாநிலங்களும், முக்கிய விவசாய சங்கங்களும், விஞ்ஞானிகளும் நுகர்வோரும் மரபணீக் கடுகைக் கடுமையாக எதிர்க்கின்றனர். அதிக பரப்பில் கடுகு விவசாயம் கொண்ட மாநிலங்களான ராஜஸ்தான், மத்திய பிரதேசம் ஹரியானா ஆகியவை தங்கள் மாநிலத்தில் மரபீணிக் கடுகின் வயல் வெளி சோதனைகள் கூடக் கூடாது என்று அறிவித்து விட்டன. குஜராத், பீகார், ஒடிசா, மே.வங்கம் உள்ளிட்ட பல மாநிலங்கள் தங்கள் மாநிலத்தில் வயல் வெளி சோதனைகள் மட்டுமல்ல; எந்த மரபீணி உணவுப் பயிர்களுக்கும் அனுமதியில்லை என இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி விவசாயம் என்பது மாநில பட்டியலில் உள்ள பொருளாகும். மரபணு மாற்றுப் பயிர்கள் மீதான அனுமதி விவகாரத்தில் இந்த முக்கியமான அம்சத்தை மறந்துவிட முடியாது. பி.ட்டிக் கத்தரி தடை விவகாரத்தில் இந்தக் காரணிகள் முக்கிய பங்கு வகித்தன. ஒரு மாநிலத்தில் இருந்து அடுத்த மாநிலத்திற்கு பரவுவதைத் தடுக்க மத்திய அரசிடம் எந்த வகையான கொள்கையோ திட்டமோ இல்லை. இத்தகு நிலையில் இந்திய அரசின் முடிவு என்பது இந்தியக் கூட்டாட்சி முறைக்கே எதிரானதாக அமையும் என்கிறபோது மத்திய அரசு எப்படி இந்தியக் கூட்டாட்சி அமைப்பைத் தூக்கி நிறுத்தும் என்ற கேள்விகள் எழாமல் இல்லை.

இந்தியாவில் தீவிரமாக இயங்கி வரும் 55க்கும் மேற்பட்ட விவசாய சங்கங்கள் ஏற்கெனவே மரபீணிக் கடுகிற்கு எதிராக தீர்மானங்களை நிறைவேற்றி மத்திய அரசிற்குத் தெரிவித்துள்ளன. நூற்றுக்கணக்கான விஞ் ஞானிகள் மரபீணிக் கடுகை அனுமதிக்க வேண்டாம் என்று கடிதங்கள் எழுதியுள்ளனர். பல்லாயிரக்கணக்கான இந்தியப் பொது மக்கள் தங்களுக்கு மரபீணிக் கடுகு வேண்டாம் என்பதைத் தெரிவித்துள்ளனர். இத்துணை எதிர்ப்பும் மறுப்பும் மரபீணிக் கடுகை மத்திய அரசு அனுமதிக்கக் கூடாது என்பதற்கான காரணமாக அமையவில்லையா? ●

# சுற்றுச்சூழல் சர்வாதிகாரத்திலிருந்து மக்களை காக்க நேரம் வந்தது!

தமிழில்: நந்தினி

புற்களால் சூழப்பட்டு, ஒரு மரம் அல்லது மரங்கள் உள்ள நிலத்தை வைத்திருந்து அதனிடையே வாழ்வதுதான் உலகமய மாக்கலை எதிர்க்கும் ஒரே வழி. உங்கள் மகனின் மூன்று சக்கர விளையாட்டு வாகனம் அங்கு இருக் கட்டும். சில ஏழைக் குழந்தைகள் அங்கு வந்து விளையாடட்டும். பறவைகள் அங்கு வந்து அந்த மரங்களை பன்படுத்திக்கொள்ளட்டும். சின்ன விஷயங்கள். சின்ன கனவுகள்.”

அன்புத் தோழியும், சிறந்த எழுத்தாளருமான மகாஸ்வேதாதேவியின், பெருநிறுவன உலகமய மாக்கலிடம் இருந்து நம்முடைய விடுதலைக்கான கனவு இதுதான் என தன்னுடைய கடைசி பேச்சுகளில் குறிப்பிட்டுள்ளார். ஜூலை 28இல், தனது 90வது வயதில் அவர் மறைந்தார். ஆதிக்க பொருளாதார அமைப்புகள் கத்தி கொண்டு எல்லா மரங்களையும் புற்களையும் அழித்தொழிக்கும்போது, நமக்கான சுதந்திரம் புற்களிலும் மரங்களிலும் அடர்த்தியான வனங் களிலும் சுயாட்சியிலும்தான் இருக்கிறது என மகாஸ்வேதாதேவி நமக்கு நினைவூட்டுகிறார்.



நாங்கள் இருவரும், நம்முடைய அழகான பல்லுயிர்த்தன்மை நிறைந்த இந்த நாட்டில் யூகலிப்டஸை பயிரிட்டு பசுமை பாலைவனமாக மாற்றியதை பற்றி எழுதும்போதும் சரி, உலக மயமாக்கல் பெண்கள் மீது ஏற்படுத்திய தாக்கம் குறித்து பணியாற்றும்போதும் சரி, மகாஸ்வேதாதேவி எப்பொழுதும் இந்த பூமியின்,

ஒடுக்கப்பட்ட மற்றும் குற்றம் சுமத்தப்பட்ட மக்களின் குரலாகவே இருந்திருக்கிறார்.

பெருநிறுவனங்களுக்கு சாதகமான தாராள வர்த்தக ஒப்பந்தத்தை (Free Trade Agreement-FTA) மையப்படுத்திய உலகமயமாக்கல் மக்களின் சுதந்திரத்தையும் வாழ்வாதாரத்தையும் எப்படி பறித்துக் கொண்டது என அவரால் கவித்துவமாக கற்பனை செய்ய முடிந்தது. 'தாராள வர்த்தகம்' என்பது நாம் எவ்வாறு வர்த்தகம் செய்கிறோம் என்பது மட்டுமல்ல. அது நாம் எவ்வாறு வாழ்கிறோம்? நாம் வாழ்கிறோமா? என்பது பற்றியது. அது நாம் எவ்வாறு சிந்திக்கிறோம்? நாம் சிந்திக்கிறோமா? என்பது பற்றியது. உலக வர்த்தக மையத்தின் (World Trade Organisation-WTO) ஒப்பந்தங்கள் தங்களுடைய விதிகளை தளர்த்தியே, நம்முடைய பொருளாதாரம், நம்முடைய உற்பத்தி மற்றும் நுகர்வு அமைப்புகள், நாம் வாழ்வதற்கான ஆதாரங்கள், ஒட்டுண்ணியாக உள்ள பல பில்லியனர்களின் சிறு குழுக்களின் எழுச்சி ஆகியவற்றை ஒரு வடிவத்திற்கு கொண்டு வந்துள்ளது.

1994—ஆம் ஆண்டில் மொரோக்கோவில் உள்ள மர்ராகேஷில் இந்தியா காட் (GATT) ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தம் தான் 1995—இல் WTO உருவாக வழிவகுத்தது. WTO ஒப்பந்தங்கள் பெரு நிறுவனங்களால் பெரு நிறுவனங்களுக்காக உருவாக்கப்பட்டது. வளங்கள், உற்பத்தி, சந்தை, வர்த்தகம் மீதான தங்கள் கட்டுப்பாட்டை விரிவுபடுத்த, ஏகபோக தனியுரிமையை நிறுவ, பொருளாதார மற்றும் அரசியல் ஜனநாயகத்தை அழிக்க அமைக்கப் பட்டது.

WTO ஒப்பந்தத்தின் ஒரு அங்கம் (Trade-Related Aspects of Intellectual Property Rights-TRIPS) அதாவது, வர்த்தகம் சம்பந்தப்பட்ட அறிவுசார் சொத்துரிமை ஒப்பந்தம். இதனை வகுத்தது மான்சாண்டோ. ஏன்? நெல் விதைகளை உருவாக்கியது மான்சாண்டோதான் என வாதாடி அதன் மீதான உரிமைய நிலைநாட்டி நெல்களுக்கு காப்புரிமைய பெற. அதாவது, நெல் மான்சாண்டோவின் ஒரு 'அறிவுசார் சொத்து'. இதற்கான நோக்கம் ஒன்றுதான். நெல்லை சொந்தமாக்கி, தான் கட்டுப்படுத்தி, பல ஆதாய உரிமைகளினால் பெரும் லாபம் அடைவதுதான். மான்சாண்டோவின், முறைகேடான இந்த 'சொத்துரிமையின்' விளைவுகளை நாம் இந்தியாவில் அனுபவித்து வருகிறோம். இதனால் மரபணு மாற்றப்பட்ட விதைகளின் விலை கடுமையாக உயர்ந்தது.

WTO—இன் விவசாயத்துக்கான ஒப்பந்தத்தை தொகுத்தது Cargill, Inc. இதன் விளைவாக, எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகளை அதிகளவில் உற்பத்தி செய்த இந்தியா இன்று இதனை மற்ற நாடுகளிடமிருந்து பெருமளவில் இறக்குமதி செய்யும் நாடுகளாக மாறியுள்ளது. மரபணு மாற்றப்பட்ட சோயா எண்ணெய் மற்றும் பணை எண்ணெய், அதாவது பிண்ணாக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஹெக்சேனால் செய்யப்பட்ட எண்ணெயை 'நல்ல எண்ணெய்' எனக்கூறி இறக்குமதி செய்கிறோம். இதனால், அர்ஜெண்டினா, இந்தோனேசியா, பிரேசில் ஆகிய நாடுகளில் பெருமளவில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. பருப்பு வகைகளை கனடா, மொசாம்பிக்கிலிருந்து பெறுகிறோம். நம் நாட்டில் விளைந்த செழிப்பான பருப்பு வகைகளை உற்பத்தி செய்த நிலங்களை உயிரி—எரிபொருளை உருவாக்கும் அந்நிய நிறுவனங்களுக்கு கொடுத்துவிட்டோம். இந்த வடிவம் விவசாயம் மற்றும் உணவு முறையை அழித்துவிட்டது. இதனால், நம்முடைய நம்முடைய மற்றும் இந்த பூமியினுடைய நலத்தை அழித்து வருகிறோம்.

சுகாதாரத்திற்கான WTO ஒப்பந்தத்தை அதிவேக உணவு நிறுவனம் (The Junk Food Industry) எழுதியுள்ளது. நம்முடைய உணவு கலப் பட தடுப்பு சட்டம் 1954 இந்த ஒப்பந்தத்தால் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணை யமாக மாறியது. இந்த போலி பாதுகாப்பு சட்டங்களால், இந்தியாவின் வளமான மற்றும் பரந்துப்பட்ட , உணவு பொருட்கள் சம்பந்தப் பட்ட குடிசை மற்றும் சிறு தொழில்கள் மூடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

FTA-ஒப்பந்தத்தில் உள்ள UPOV-1991-(Union for the Protection of New Varieties of Plants)—இன் படி புதிய வகை தாவரங்களுக்கு காட் நாடுகளின் ஒப்புமை கோராத விதிகளை புகுத்தியது. இதனால், ஒரே மாதிரியான விதிகள் 'காட்' நாடுகளுக்கு புகுத்தப்பட்டது. இதன்மூலம், ஊட்டச்சத்தில் பல்லுயிர்த்தன்மை மற்றும் பருவநிலையின் வேறுபட்ட தன்மை ஆகியவை முக்கியம் என்பதை இந்த விதிகள் சிதைத்தன. FTA—இல் உள்ள பசிபிக் நாடுகளுடனான கூட்டுப் பங்களிப்பு ஒப்பந்தத்தில்(TransPacific Partnership-

TPP) ஆஸ்திரேலியா, புரூனே, கனடா, சிலே, ஜப்பான், மலேசியா, மெக்சிகோ, நியூசிலாந்து, பெரு, சிங்கப்பூர், அமெரிக்கா மற்றும் வியட்நாம் உள்ளிட்ட 12 நாடுகள் கையெழுத்திட்டன. ஆசிய நாடுகளுடனான பிராந்திய அளவிலான கூட்டுப் பங்களிப்புக்கான (The Regional Comprehensive Economic Partnership-RCEP) ஒப்பந்தத்தில் இந்தியா, சீனா, தென் கொரியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியவை வர்த்தக கூட்டுப் பங்காளிகளாக உள்ளனர். FTA—இல் உள்ள மற்ற ஒப்பந்தங்களை விட RCEP ஒப்பந்தம் மக்கள் தொகை அதிகம் உள்ள ஆசிய நாடுகளை வெகுவாக பாதிக்கும். இந்த நாடுகளை TPP ஒப்பந்தத்துக்கு இழுத்து வரும்போது மற்ற நாடுகளுடனான அழுத்தத்தை அதிகரிக்கும்.

TPP-இல் கையெழுத்திட்ட நாடுகள் UPOV—1991—இல் இணையச்செய்கிறது. இதனால் தாவரங்கள் மீதான காப்புரிமை எனும் உயிர்மத் திருட்டுக்கு வழிவகுக்கிறது. இதனால், வேம்பு, பாஸ்மதி, கோதுமை போன்று பல உயிர்மத் திருட்டுகள் ஏற்பட வாய்ப்புள்ளன. TPP—இல் உயிரியல் சம்பந்தப்பட்ட பிரிவில் TRIPS ஒப்பந் தத்தில் விடுபட்ட எல்லா வற்றையும் சேர்த்து விடுகிறது. இதனால் பல ஆபத்தான மற்றும் சோதிக்கப்படாத தடுப்பு மருந்து களுக்கான காப்புரிமை மற்றும் அதன் மீது செலுத்துதல், புதிய மரபணு தொழில் நுட்பங் களான ஜீன் தொகுப்பாக்கம் மற்றும் ஜீன் ஒட்டு ஆகியவற்றிற்கு வழிவகுக்கிறது. இதனால், TPP உயிரி ஏகாதிபத்தியத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும் கருவியாகவே இந்த ஒப்பந்தம் பார்க்கப்படுகிறது.

காப்புரிமையில் தாவரங்கள் மற்றும் விலங்கு களுக்கு விலக்கு அளிப்பதை உறுதிசெய்ய நம்முடைய காப்புரிமை சட்டத்தில் பிரிவு3(j) இந்தியா முயற்சி செய்கிறது. WTO—இல் உள்ள நாடுகள் UPOV-இல் இணைய வேண்டும் என்பது கட்டாயமில்லை எனவும் இந்தியா உறுதிபடுத்தியுள்ளது. ஆனால், தாவரவகைகளுக்கு காப்புரிமை பெற WTO நாடுகளின் ஒப்புதல் தேவையில்லை.

இவை நம்முடைய தாவர வகைகள் மற்றும் விவசாயி உரிமைகள் சட்டம்2001—இல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. WTO—துணையுடன் விதைகள் மீதான முழு ஏகபோக தனியுரிமையைஅனுபவிக்க முடியாததால், வேதி பெருநிறுவனங்கள் (உயிரி தொழில்நுட்பம் மற்றும் விதை பெருநிறு வனங்கள்) உயிரினங்கள் மற்றும் அதன் உற்பத்தி அமைப்புகளின் மீது காப்புரிமையை புதிய FTA—இன் மூலமாக புகுத்த முயற்சிக்கிறது. மேலும், நம்முடைய உள்ளூர் உணவு முறைய மாற்றி பெருநிறுவன அதிவேக உணவு களை நுகரச்செய்து நம்முடைய உடல் நலத் தையும் உயிரி—பாதுகாப்பையும் அழிக்க முயற்சிக்கிறது.

இறுதியாக, பெருநிறுவனங்களும் அதனை கட்டுப்படுத்துபவர்களும் ISDS (Investor-State Dispute Settlement) எனப்படும் ரகசிய தீர்ப்பாய அமைப்புகளின் மூலம் அரசுகளிடம் வாதாடி ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான அனைத் தையும் பெருநிறுவனங்களே தயாரிக்கும்படி செய்கிறது. இவ்வாறு 0.01 சதவீதம் உள்ள பெரும் செல்வந்தர்களின் வசம் உள்ள பெருநிறுவனங்கள் நம்முடைய ஜனநாயகத்தை ரகசிய ஒப்பந்தங்கள் மற்றும் நீதிமன்றங்கள் மூலம் மாற்றியமைக்க முயற்சி செய்கிறது. இந்த 0.01 சதவீத பெரு நிறுவனங்களிடமிருந்து நம் புவியை காக்க சுதந்திரமான இயக்கத்தை .முன்னெடுக்க காலம் கனிந்துவிட்டது.

**நன்றி: தி ஏசியன் ஏஜ்**

●







பூவுலகு இதழ் குறித்த வாசகர்களின் விமர்சனங்களையும், இதழ் மேம்பாட்டிற்கான கருத்துகளையும் ஆசிரியர் குழு வர வேற்கிறது. சுற்றுச் சூழல் சார்ந்த அனைத்துவிதமான படைப்புகளையும் வாசகர்கள் அனுப்பலாம்.

பூவுலகு இதழின் வாசகர்கள் மூலம் பல சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகிறது. எனவே தங்கள் நண்பர்களுக்கும், சுற்றத்தினருக்கும் அறிமுகம் செய்யும்படி பூவுலகின் நண்பர்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.



## தமிழக முதல்வருக்கு பூவுலகின் நண்பர்களிடமிருந்து

# ஒரு மனம் திறந்த மடல்!

**மாண்புமிகு தமிழக முதல்வருக்கு....**

கடந்த சட்டமன்ற தேர்தலில் ஒரு மகத்தான சாதனையை நிகழ்த்தியிருந்தது அ.தி.மு.க. 30 வருடங்களாக எந்தவொரு கட்சியும் தொடர்ச் சியாக இரண்டாம் முறை ஆட்சி அமைக்க மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதில்லை என்கிற நிலையை மாற்றி இரண்டாம் முறையும் தேர்தலில் வெற்றி பெற்றது.

மக்களுக்கு நல்லது செய்வீர்கள் என்று அவர்கள் கொண்ட நம்பிக்கைக்கு கிடைத்த வெற்றி அது. மக்கள் எதிர்ப்பை கண்ட பல திட்டங்களை அவை எந்த நிலையில் இருந் தாலும் நிறுத்திய பெருமை உங்களுக்கு உண்டு. கெயில், மீத்தேன் போன்ற திட்டங்களை பல அழுத்தங்கள் தாண்டி நீங்கள் நிறுத்தி மக்கள் போராட்டத்துக்கு ஆதரவான ஒரு நிலைப் பாட்டை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள்.

2007ல் நிமிட்ஸ் என்கிற அமெரிக்காவைச் சேர்ந்த அணுசக்தியினால் இயங்க கூடிய விமானம் தாங்கி கப்பல் சென்னைக்குள் வருவிருந்தபோது அதை பாதுகாப்பு காரணங் களுக்காக கடுமையாக எதிர்த்தவர் நீங்கள். அந்த கப்பலிலிருந்து வரக் கூடிய அணு கதிர் வீச்சு ஒட்டு மொத்த சென்னையை அழிக்க வல்லது என்று அன்று நீங்கள் எடுத்த நிலைப்பாடு மிக முக்கியமானது.

2011ல் நடந்த உள்ளாட்சி தேர்தலில் மக்களோடு மக்களாக நிற்பேன் என்று நீங்கள் உறுதியாக சொன்னதையும் இது போன்ற மக்கள் நலன் சார்ந்த அக்கறைகளின் தொடர்ச்சியாகவே பார்த்தோம். இந்த நிலையில்தான் கூடங்குளம் அணு உலை அலகு ஒன்றை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வில் நீங்கள் பங்கேற்று பேசியிருக்கிறீர்கள். அந்த நிகழ்வில் நீங்கள் சொன்ன விஷயங்களை, தெரிவித்த தகவல்களை பார்க்கும்போது உங்களிடம் பல உண்மைகள் மறைக்கப்பட்டிருக்கலாம் என்கிற சந்தேகம் எழுகிறது.

அணு உலைகள் பழுது அடைந்து நிற்றல் என்கிற சம்பவம் பொதுவாக உலகில் உள்ள எல்லா அணுவுலைகளிலும் இரண்டு வருடங் களுக்கு ஒரு முறை நடக்கும். ஆனால் கூடங் குளத்தில் அமைந்திருக்கும் அலகு ஒன்றில் கடந்த இரு வருடங்களில் 32 முறை அணு உலை பழுதடைந்து நின்றிருக்கிறது என்கிற தகவல் உங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. உலகில் வேறு எங்கும் இல்லாத அளவுக்கு 32 முறை பழுதாகி நின்ற அணுவுலையைதான் பாதுகாப்பான சிறப்பான அணுவுலை என்று சொல்லி நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது. உலகில் எங்கும் ஓடாத அணு உலைகள் ரஷ்யாவுடனான நட்புக்கு தரப்படும் விலையாக தமிழகத்தின் தலையில் கட்டப்பட்டிருக்கிறது. ரஷ்யா அணு உலையை ஒப்படைத்த பிறகு கிட்டதட்ட ஒன்றரை வருடங்கள் பொறுப்புறுதி காலத்தில்

கூட வெறும் 33 சதவிகிதம் நாட்களில்தான் அணு உலை முழு சக்தியில் இயங்கியிருக்கிறது. இந்த 521 நாட்களில் 222 நாட்கள் பராமரிப்பு பணிகளுக்காக மூடப்பட்ட நிலையில் இருந்திருக்கிறது. திட்டமிடப்படாத, அவசரமாக அணு உலை மூடப்பட்ட சம்பவங்கள் குறைந்தது ஐந்து முறை யாவது நிகழ்ந்திருக்கிறது.

இது போல தொடர்ந்து சிக்கல்களை சந்தித்து வரும் ஒரு அணு உலையைத்தான் பாதுகாப்பானது என்று சொல்லி நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கிறீர்கள். நிமிட்ஸ் கப்பலை சென்னைக்குள் அனுமதிப்பதில் உள்ள சிக்கல்களை கதிரியக்கம் பற்றிய தெளிவுடன் முன் வைத்த நீங்கள் அதை விட ஆபத்தான அணு உலைகள் பற்றி ஏன் இந்த முடிவுக்கு வந்தீர்கள் என்பது குழப்பமாகவே இருக்கிறது.

கூடங்குளம் அணுகி கழிவுகளை எங்கு வைப்பது என்பதில் கூட இன்னமும் எந்த தெளிவும் உருவாகாத நிலையில் அந்த அணு உலை எப்படி பாதுகாப்பாக இருக்க முடியும் என்பது தான் அந்த மக்கள் கேட்கும் கேள்வி. உண்மையில் அதற்கு என்ன பதில் இருக்கிறது?

புகுஷிமாவில் நடந்த விபத்து அப்போது ஜப்பானின் பிரதமராகவும் அணு சக்தி ஆதர வாளராகவும் இருந்த நவோடா கான் அவர்களை அணு சக்தி எதிர்ப்பாளராக மாற்றியது. அணு சக்தியின் ஆபத்துகளை, தீமைகளை அறிய ஒரு விபத்து நேரும் வரை நீங்கள் காத்திருக்க வேண்டுமோ என்கிற அச்சம் எங்களுக்கு இருக்கிறது.

கூடங்குளம் அணு உலை அலகு ஒன்றை நாட்டுக்கு அர்ப்பணிப்பத்தில் மிகுந்த மகிழ்ச்சி அடைந்த பிரதமர் நரேந்திர மோடியால் ஏன் அவரது சொந்த மாநிலமான குஜராத்தில் உள்ள மிதிர்விர்தியில் அந்த அணு உலையை தொடங்க முடியவில்லை? மிதிர்விர்தி மக்கள் எதிர்ப்பை விட தொடர்ச்சியானதும் பல மடங்கு வீரியமானதும்தானே இடிந்தகரை மக்களின் எதிர்ப்பும்? மிதிர்விர்தியில் அணு உலை அமைக்கப்படாததில், அங்கு நடந்த மக்கள் போராட்டத்துக்கு கிடைத்த நீதியில் உண்மையிலேயே எங்களுக்கு மகிழ்ச்சிதான்.

அணு சக்தியின் தீமைகள் குறித்து தொடர்ந்து பேசி வரும் எங்களைப் போன்றவர்கள் அதை மகத்தான வெற்றியாகதான் பார்க்கிறோம். ஆனால் மிதிர்விர்திக்கு ஒரு நீதி இடிந்த கரைக்கு ஒரு நீதி என்று செயல்பட மோடி குஜராத்தின் பிரதமர் மட்டும்தானா என்ன?

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜீ ஹரிப்பூரில் அணு உலை அமைக்கவிருக்கும் திட்டத்தை தடுத்து விட்டார் என்பதை நீங்கள் அறிவீர்கள். எல்லா அழுத்தங்களையும் தாண்டி ஹரிப்பூரில் திட்டத்தை நிறுத்த முடியுமென்றால் கூடங்குளத்தில் ஏன் முடியாது என்று அந்த மக்கள் உண்மையிலேயே குழம்புகிறார்கள். மக்களின் இந்த எளிமையான கேள்விகளை அறியாமை, பாமரத்தனம் என்று யாரும் புறம்தள்ளிவிட முடியாது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். எனில் தேர்தலில் வாக்களிக்கும் போது அவர்கள் காட்டுவது தெளிவு என்று நம்பினால் அதை விட கூடுதல் கவனத்தையும் தெளிவையும் அவர்கள் தங்கள் பாதுகாப்பு, வாழ்வாதாரம் சார்ந்த பிரச்னைகளிலும் காட்டுவார்கள் என்பதை மறுக்க முடியாது.

பிரதமர் மோடி வேண்டுமானால் குஜராத் துக்கு மட்டும் பிரதமராக செயல்படலாம். ஆனால் நீங்கள் சென்னைக்கு மட்டுமல்ல இடிந்தகரைக்கும் முதல்வர். கூடங்குளத்தில் அமைந்துள்ள அணு உலையால் பாதிக்கப்பட இருக்கும் அனைவருக்கும் நீங்கள் முதல்வர். அவர்களது பாதுகாப்பும் நலனும் இன்று உங்கள் கைகளிலேயே இருக்கிறது.

சில வருடங்களுக்கு முன்பு உங்களை சந்திக்க வந்த அணு உலை எதிர்ப்பு இயக்கத்தின் தலைவர் எஸ்.பி.உதயகுமாரிடமும் ஊர் மக்களிடமும் ஹரிப்பூர் பற்றிய கேள்விக்கு நீங்கள் தந்த பதில் ஹரிப்பூரில் திட்டம் ஆரம்ப கட்டத்திலேயே நின்றுவிட்டது என்பதுதான். இன்று கூடங்குளம் அலகு 3,4ம் ஆரம்ப கட்டத்தில்தான் இருக்கிறது. மக்கள் நலன், பாதுகாப்பு கருதி நீங்கள் ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்று உங்களை வேண்டுகிறோம். மக்கள் நலனில் காட்டப்படும் அக்கறை மட்டுமே மேலும் பல சாதனைகளை முறியடிக்கும் வல்லமையை அரசியல் வாதிகளுக்கு தரும் என்பதை அறியாதவர் அல்ல நீங்கள். உங்களுடன் இருப்பேன் என்ற உங்களது வாக்குறுதியை நம்பி வாக்களித்தவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. அதை நீங்கள் நிறை வேற்றுவீர்கள் என்கிற நம்பிக்கையில்...

இப்படிக்கு

**பூவுலகின் நண்பர்கள்**



# வாசகர் கேள்வி-வல்லுனர் பதில்

**பல வண்ணப் பறவைகளை கூண்டில் அடைத்து விற்கிறார்களே! இது குறித்து சட்டம் என்ன சொல்கிறது?**

**– வினோலியா, செங்கல்பட்டு**

காட்டுயிர் பாதுகாப்புச் சட்டம் (The Wildlife Protection Act 1972), விலங்குகளை கொடுமைப் படுத்துவதிலிருந்து தடுக்கும் சட்டம் (The Prevention of Cruelty to Animals Act 1960) மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code) ஆகியவை பறவைகள் உள்ளிட்ட உயிரினங்களுக்கு கொடுமை இழைப்பதை குற்றமாக வரையறை செய்கின்றன. பத்து ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமானமுடைய விலங்கை அல்லது விலங்குகளை கொல்வதோ, நஞ்சிடுவதோ, ஊனமாக்குவதோ அல்லது பயனற்றதாக செய்வதோ இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து வழங்க இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 428 வழிவகுக்கிறது. இவையே யானை போன்ற பெரிய விலங்கினங்கள் எனில் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்க பிரிவு 429 வழிவகுக்கிறது.

காட்டுயிர் பாதுகாப்புச் சட்டத்தின் விலங்கு என்ற வரையறைக்குள் பறவையும் வருகிறது. எந்த விலங்குகளுக்கும் (பறவைகள் உள்ளிட்ட) தேவையற்ற வலி அல்லது துன்பத்தை ஏற்படுத்துவது பிரிவு 11 (1) ன் கீழ் தண்டனைக் குரிய குற்றமாகும். விலங்குகளுக்கோ (பறவைகளுக்கோ) தேவையற்ற முறையில் கொடுக்கும் மருந்து அல்லது ஊசி ஆகியவை பிரிவு 11 (1)ன் (a) முதல் (o) வரை உள்ள பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே வளர்ப்பு விலங்குகள் மற்றும் பறவைகள் ஆகியவற்றிற்கும் அவற்றின் எடையை கூட்டவோ அல்லது அதிகம் பால் சுரக்கவோ அளிக்கப்படும் சிகிச்சைகள் மற்றும் மருந்துகள்; சட்டவிரோதமானதாகும். மேலும் விலங்குகள் மற்றும் பறவைகள் எதையும் அவற்றின் இயல்பான வாழ்க்கைக்கு போதுமான அளவில் நீல அகல உயரமில்லாத கூண்டுகளில் அடைப்பது பிரிவு 11 (1) (e)ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். காட்டுயிர் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 9, காட்டு விலங்குகளை (பறவைகள் உள்ளிட்ட) வேட்டையாடுவதை தடைசெய்கிறது. வேட்டையாடுவது என்பது விலங்குகளை பொறிவைத்து பிடிப்பதையும் உள்ளடக்கும் என்கிறது சட்டம். மேலும் அச்சட்டத்தின் பிரிவு 57 வனவிலங்குகள் பறவைகள் ஆகியவற்றை உடமையில் வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்கிறது.

வீட்டில் வளர்க்கும் புறா, காதல் பறவைகள் போன்றவற்றிற்கு விதிவிலக்குகள் உண்டு. எனினும் அப்பறவைகளை வியாபார ரீதியாக வளர்க்க உரிமம் (licence) வாங்க வேண்டும். மேலும் வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் 1972ன் பிரிவு 9ன் கீழ் அச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள மி முதல் IV வரை அட்டவணையில் கண்ட எந்த பறவைகளையும், விலங்குகளையும் வேட்டையாடுவது தடைச் செய்யப்பட்டுள்ளது. மேலும் அச்சட்டத்தின் பிரிவு 49 (சி)ன் படி தம்மிடமுள்ள அட்டவணையில் கண்ட பறவைகள் பற்றிய விவரத்தை அவ்வாறு பறவைகளை வளர்ப்பவர் முதன்மை வன உயிர் பாதுகாப்பு அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும். அப்பறவைகளை உரிமம் இன்றி வளர்க்க முடியாது. உரிமம் வழங்கும் அதிகாரி அப்பறவைகளின் நலன் வளர்ப்பவரின் தகுதி புதிதாக வேட்டையாடப்படுவதை தடுக்கும் வழிகள் ஆகியவற்றை அறிந்துதான் உரிமம் வழங்கவேண்டும். கடந்த 01.05.2011 அன்று குஜராத் உயர்நீதிமன்றம் பறவைகளை கூண்டில் அடைப்பதும் அவற்றிற்கு வலியையும் வேதனையையும் தருவது சட்டவிரோதம் என்று தீர்ப்பளித்தது டில்லி உயர்நீதிமன்றம். 15.05.2015 அன்று ஒருபடி மேலே போய் பறப்பது பறவைகளின் அடிப்படை உரிமை அதை அடைத்து வைக்க மனிதர்களுக்கு உரிமையில்லை எனவே பறவைகள் வியாபாரம் சட்டவிரோதம் என்று தீர்ப்பளித்தது. ஜல்லிக்கட்டுக்கு எதிரான வழக்கில் தீர்ப்பு வழங்கிய உச்ச நீதிமன்றம் கடந்த 07.05.2014 அன்று எல்லா உயிரினங்களுக்கும் (All living things) கண்ணியத்துடனும் அமைதியுடனும் வாழும் உரிமையுண்டு அவற்றின் நலனை பாதுகாத்துக் கொள்ளும் உரிமையும் அவைகளுக்கு உண்டு என்று தீர்ப்பு வழங்கியதுடன் விலங்குகளை கொடுமைப்படுத்துவதிலிருந்து தடுக்கும் சட்டம் (விலங்குகள் என்ற வரையறைக்குள் பறவைகளும் உள்ளடக்கம்) இதற்கான சட்ட பாதுகாப்பை (Statutory Protection) தருகிறது என்று தீர்ப்பளித்தது.

எனவே மேற்கண்ட சட்ட உரிமைகளிலிருந்து பறவைகள் உட்பட உலகில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் பசி, தாகம் மற்றும் ஊட்டச் சத்திற்கெதிரான விடுதலை, பயம் மற்றும் மன அழுத்தத்திற்கெதிரன விடுதலை. உடலியல் மற்றும் தட்பவெட்ப நிலைக்கெதிரான விடுதலை, அடிமைத்தனம், வலி, காயம் மற்றும் நோயிற்கெதிரான விடுதலை (அல்லது உரிமை) தம்மைப் போன்ற பிற உயிரினங்கள் அனுபவிக்கும் இயல்பான வாழ்க்கை வாழும் உரிமை ஆகியவை உள்ளன என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அழிந்து வரும் உயிரினங்களை வணிகம் செய்வதை தடை செய்யும் பன்னாட்டு கூட்டு ஒப்பந்தத்தில் (onvention of International Trade in Endangered Species) இந்தியா கையெழுத்திட்டுள்ளது. எனவே அயல்நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வரும் பறவைகளை பிடிப்பது, கூண்டில் அடைப்பது, வைத்திருப்பது, கொல்வது மற்றும் வியாபாரம் செய்வது ஆகியவையும் சட்ட விரோதமானதாகும்.

**க. திலகேஸ்வரன், உயர்நீதிமன்ற வழக்குரைஞர்**

# பூவுலகின் நண்பர்கள் குறுநூல் வரிசை

| | | |
|---|---|---|
| எது சிறந்த உணவு? | மருத்துவர் கு. சிவராமன் | ரூ.20 |
| பழந்தமிழர் வேளாண்மை | பாமயன் | ரூ.20 |
| மரங்களை நட்டவன் | ழான் ழியானோ | ரூ.20 |
| பூச்சிகளால் தைக்கப்பட்ட பூவுலகு | சண்முகானந்தம் | ரூ.20 |
| மறைக்கப்பட்ட தீர்க்கதரிசி ஜே.சி. குமரப்பா | மரு. வெ. ஜீவானந்தம் | ரூ.20 |
| இயற்கை வேளாண்மை செய்முறை விளக்கம் | என். ராஜகோபால் | ரூ.20 |
| எறும்புகளும், ஈக்களும் | வள்ளியப்பன் | ரூ.20 |
| பூமியில் தனிமைக்கென்று ரு இடம் இல்லை | துவாமிஷ் | ரூ.20 |
| மழைக்காடுகளின் மரணம் | நக்கீரன் | ரூ.20 |
| புட்டி நீர் | நக்கீரன் | ரூ.30 |
| அலையாத்திக் காடுகளும், அனல்மின் நிலையங்களும்... | நக்கீரன் | ரூ.40 |
| பார்ப்பனுத்துவமும், அணுத்துவமும் | சுப. உதயகுமாரன் | ரூ.20 |
| தாதுமணல் கொள்ளையும் | | |
| காணாமல்போன கிராமங்களும் | ஜே. பிரபாகர் | ரூ.20 |
| மன்னார் வளைகுடா | ஜே. பிரபாகர் | ரூ.20 |
| மாபெரும் விதைக் கொள்ளை | கிளாட் ஆல்வாரிஸ் | ரூ.30 |
| கூடங்குளம் அணுஉலை மீதான பார்வை | ஏ. கோபாலகிருஷ்ணன் | ரூ.20 |
| கண்ணுக்கு புலப்படாத தண்ணீரும், புலப்படும் உண்மைகளும் | மா. அமரேசன் | ரூ.20 |
| ஸ்டெர்லைட் வாழ்க, மக்கள் ஒழிக | பூவுலகின் நண்பர்கள் | ரூ.20 |
| கூடங்குளம் திட்டத்தை புறக்கணிப்போம் | கேரள இலக்கிய பேரவை | ரூ.20 |
| சேதுசமுத்திர திட்டம் | பூவுலகின் நண்பர்கள் | ரூ.20 |
| பூமி வெப்பமடைதலும், காலநிலை மாற்றமும் | பூவுலகின் நண்பர்கள் | ரூ.20 |
| மண்ணுக்கும் உயிர் உண்டு | பூவுலகின் நண்பர்கள் | ரூ.20 |
| கெயில் | பூவுலகின் நண்பர்கள் | ரூ.20 |
| கவுத்தி வேடியப்பன் மலையை காப்போம் | பூவுலகின் நண்பர்கள் | ரூ.25 |
| மிரட்டும் பி.டி. கத்தரிக்காய் | பூவுலகின் நண்பர்கள் | ரூ.30 |
| ஞெகிழி | பூவுலகின் நண்பர்கள் | ரூ.30 |
| மண்ணுக்கும் உயிர் உண்டு | பூவுலகின் நண்பர்கள் | ரூ.20 |

**திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் வழங்க மொத்தமாக வாங்குபவர்களுக்கு தக்க கழிவு கிடைக்கும். தொடர்புக்கு : 90949 90900**

**பூவுலகு**
**மாத இதழுக்கான ஆண்டு சந்தா ரூ.300 மட்டுமே.**

**இதனை நேரடியாகவோ,** Poovulagin Nanbargal **என்ற பெயரில் வங்கி வரைவோலையாகவோ,** Poovulagin Nanbargal Current A/c No.1154135000004357, Karur Vysya Bank, Anna Nagar, Chennai (IFSC Code: KVBL0001154) **என்ற வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்.**

# ‘சில கல்வியாளர்களுக்கு ஒரு அழைப்பு’

**ஹோரசேமரியா அர்கேதாஸ்**

**கேச்சுவாவிலிருந்து ஆங்கிலத்தில் வில்லியம்ரோவி**
**தமிழில் : வெற்றி**

அவர்கள் சொல்கிறார்கள்,
நமக்கு எதுவுமே தெரியாதென
அவர்கள் சொல்கிறார்கள்,
நாம் பின் தங்கியவர்களென

நமது தலைகள் அவற்றைவிடச்
சிறந்த தலைகளால்
மாற்றப்பட வேண்டியிருக்கிறதென
படித்தவர்கள் சிலர் நம்மைப்பற்றி
இப்படியெல்லாம் சொல்வதாக
அவர்கள் சொல்கிறார்கள்
நமது வாழ்வை வைத்து
தம்மைப் பெருக்கிக் கொள்ளும்
இந்தக் கல்வியாளர்கள்

இந்த ஆறுகளின் கரையில்
என்ன இருக்கிறது, முனைவரே?
உங்கள் தொலைநோக்கிகளை எடுங்கள்
உங்கள் கண்ணாடிகளையும் கூட
முடிந்தால் பாருங்கள்.

படுகுழிகளிகளுக்கு மேலே
சமதளங்களில் முளைக்கும்
ஐநூறுவிதமான
உருளைச்செடிகளில் இருந்து
ஐநூறு பூக்கள்
உங்கள் கண்கள் தொடாத
அந்த ஐநூறுபூக்களும்
எனது மூளை
எனது சதை

தமிழில்: மகேஷ் நாகேந்திரன்



# ஹிரோஷிமா பலியாளிடமிருந்து பராக் ஒபாமாவிற்கு...

ஜூன் மாதத்தில் 2015—ஆம் ஆண்டிற்கான ஆயுத கட்டுப்பாடு நபர் விருதைப் பெற்ற செட்சுகோ தர்லோவ் (Setsuko Thurlow) உடன் நாங்கள் குழுவாக வாஷிங்டன் சென்றிருந்தோம். கடந்த வசந்த காலத்தில் பராக் ஒபாமாவுடன் ஹிரோஷிமா வந்திருந்த அவரது பேச்சு எழுத்தாளர் பென் ரோட்ஸை அப்போது சந்தித்து நட்பு ரீதியான கருத்தியல் பரிமாற்றங்கள் செய்ததோடு, ஒபாமாவிடம் ஒப்படைக்க ஒரு கடிதத்தைத் தந்திருந்தார். அதை படித்துப் பார்த்து பின் ஒபாமாவிடம் தருவதற்காக உறை ஒட்டப்படாமல் கொடுத்தும், குடியரசுத் தலைவரே முதலில் அக்கடிதத்தை படிக்க தான் விரும்புவதாகவும், அன்று மதியமே அவரின் கையில் ஒப்படைப்பதாகவும் சத்தியம் செய்தார். ஒபாமாவின் ஹிரோஷிமா உரையாடலையும் அணு கொள்கையையும் இதயபூர்வமாய் விமர்சித்த செட்சுகோவின் கடிதத்திற்கு இன்னும் எப்பதிலும் வரவில்லை. அதற்காக காத்திருக்கும் போது, கடிதத்தின் உள்ளடக்கத்தை நாங்களே படித்து, அணு ஆயுதங்களை கைவிட தொடர்ந்து செயல்படும் அவரது உணர்ச்சியால் பிறர் ஊக்குவிக்கப்படுவதை காண விரும்பினார். — கத்லீன் சுல்லிவன், ஹிபாகுஷா கதைகள் (விநயம்: அணு ஆயுதங்களை ஒழிக்கும் சர்வதேச பிரச்சாரம்)

**அன்பிற்குரிய குடியரசுத் தலைவர் ஒபாமாவிற்கு,**

வரலாற்று சிறப்பு மிக்க மே மாத ஹிரோஷிமா வருகையைத் தொடர்ந்து, பலரும் எனது கருத்துக்களைப் பகிருமாறு கேட்டுக் கொண்டனர். நேருக்கு நேர் அமர்ந்து நாம் பேசும் வாய்ப்பு கிடைத்திருந்தால் நான் என்ன கூறியிருப்பேன்?

கருகி உப்பிய குழந்தையாய் மயங்கிய குரலில் நீர் கேட்டுக்கொண்டே கடுந்துயரில் இறந்துபோன

எனது நான்கு வயது அண்ணன் மகன் எய்ஜியின் (Eiji) புகைப்படத்தை முதலில் பகிர்ந்திருப்பேன். அணுகுண்டிற்குப் பலியாகாமல் இருந்திருந்தால் இந்த ஆண்டு அவனது வயது 75. இந்த எண்ணம் என்னைத் திடுக்கிடவைக்கிறது. உலகின் அப்பாவிக் குழந்தைகளின் பிரதிநிதியாக வந்தவனாய், ஒரு நான்கு வயது குழந்தையாகவே காலங்கள் பொருட்படுத்தாமல் என் நினைவில் மிஞ்சுகிறான். அணு ஆயுதங்களின் கொடூரத்திற்கு எதிரான எனதிந்த தொடர் போராட்டத்திற்கு உந்து சக்தியே அப்பாவிகளின் இந்த மரணம் தான். எய்ஜியின் உருவம் எனது விழித்திரையில் எரிந்துள்ளது.

அணு சக்தியை முழுமையாய் ஒழிக்கும் நிறைவேறாத கனவுகளோடு உயிர் பிழைத்தோர் பலர் சமீப காலமாக இவ்வுலகை விட்டு மறைகின்றனர். "நம் வாழ்நாளில் ஒழித்தல்" என்பதே அவர்களது குறிக்கோள். எங்கள் உணர்வுகளைத் தீவிரப்படுத்தும் இந்த மங்கிய ஆண்டுகளின் நிதர்சனம், வலுவான அர்ப்பணிப்பைச் சந்தித்துள்ளது. "என் வாழ்நாளில் இது நடக்காமலும் இருக்கலாம்" என்று தாங்கள் கூறியது மிகுந்த வருத்தத்தைத் தருகிறது.

உங்களது ஹிரோஷிமா வருகையின் போது நான் அங்கில்லை, ஆயினும் இந்த வருகை ஊடகங்களால் சூழப்பட்டு மிகவும் கவனமாக கட்டுப்படுத்தி இயக்கப்பட்டது என்பதை உணர்வேன்: யார் எங்கு அமரவேண்டும்; உங்களை அணுக அழைக்கப்பட்டவர்கள் யார்; ஜப்பானின் வெளியுறவு அமைச்சகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் அணுவெடிப்பில் உயிர் பிழைத்தவர்கள் (hibakusha). அவ்வாறு இருந்தும் வந்தீர்கள். உங்கள் உரை இதயபூர்வமாய் இருந்தாலும் முக்கிய பிரச்சனை தவிர்க்கப்பட்டது. அணு வன்முறைக்கு நிகராய் எந்த போரும் இருக்க முடியாதென்பதை நரகத்திற்கு இணையான எனது சுய அனுபவத்தால் அறிகிறேன்.

வெறும் வார்த்தைகளால் இத்தகைய துயருக்குக் குரல் கொடுக்க இயலாது; வரலாற்றின் கண்களில் நேராகப் பார்த்து, இத்தகைய துயர் மீண்டும் வராமல் தடுக்க நாம் மாறுபட்டு என்ன செய்ய வேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்ளும் பகிரப்பட்ட பொறுப்புகள் நமக்குள்ளது என்று கூறினீர். ஜெர்மனி சரணடைந்த 40—ஆம் ஆண்டு நிறைவு விழாவில் அப்போதைய ஜெர்மனியின் குடியரசுத் தலைவர் ரிச்சர்ட் என்ற வெய்ஸிகரின் எழுச்சியூட்டும் பேச்சைத் தான் இந்த வார்த்தைகள் எதிரொலிக்கின்றன. எந்தவொரு கற்பனையோ விலகளோ இன்றி ஜெர்மனியர்களாகிய நாம் உண்மையை வரலாற்றின் கண்களில் நேரே காணவேண்டும்; நினைவுகளின்றி சமரசமில்லை என்று அவர் கடந்தகாலத்தின் போர்க்கால அட்டூழியங்களை நாணயமாய் எதிர்கொண்டது அதிக ஜப்பானியர்களை ஊக்குவித்தது.

ஜப்பானிய அரசு தன் அண்டை நாடுகள், குறிப்பாககொரியா மற்றும்சீனாவுடனான தீர்க்கப்படாத உறவுகளைக் கையாளவும் கடந்தகாலத்தை எதிர்கொள்ளவும் இத்தகைய ஆழமான மனக்கிளர்ச்சியினைப் பின்பற்றவேண்டும். துயரகரமாய், தற்போதைய அபே நிர்வாகம் இந்த பகுதிகளில் ராணுவ விரிவாக்கத்திற்கு முயன்று பெரிதும் நேசத்திற்குள்ளான சமாதான அரசியலமைப்பைக் கைவிட்டுள்ளது.

நீங்கள் சந்தேகமின்றி அறிந்ததுபோல் அமெரிக்காவில் துரதிருஷ்டவசமான ஒரு நினைவகம் அமையவிருக்கின்றது. தேசிய பூங்கா சேவை மற்றும் ஆற்றல் துறை சேர்ந்து மன்ஹட்டன் திட்டம் தேசிய வரலாற்று பூங்காவை நிறுவ உள்ளனர். ஆஷ்விட்ஸ் மற்றும் ட்ரெப்லிங்காவில் உள்ள நினைவகம் போலின்றி, லாஸ் அலமோஸ், ஓக் ரிட்ஜ் மற்றும் ஹன்போர்ட்டில் இருந்த உயர்மட்ட ரகசிய தளங்களின் வரலாற்றை, அந்த தொழில்நுட்ப 'சாதனை'யைக் கொண்டாடும் விதத்தில் பாதுகாக்க விழைகின்றனர். என் காதலுக்குரிய ஹிரோஷிமாவில் நரகத்தை உருவாக்கியதே அந்த முயற்சிகளின் முதல் வெற்றியெனப்படுவது.

இப்படித்தான் "Aug. 6, 1945—இன் அதிகாலை நினைவுகள் நினைவகலாமல்" உறுதிபடுத்தப்பட வேண்டுமா?

பட்டொளியால் பார்வை பறிபோன, சூறாவளி போன்ற வெடிப்பில் தட்டையான, 4000°C வெப்பத்தில் எரிந்து போய் ஒரு அணு குண்டின் கதிர்களால் கறை படிந்து போன ஹிரோஷிமா நகரத்தை 13 வயது பள்ளி மாணவியாய்க் கண்டேன்.

சடலங்களும் காயமுற்ற உடல்களும் நிலத்தில் படர்ந்து நீருக்கு நம்பிக்கையில்லாக் குரலில் இரவல் விடுத்து எவ்வித மருத்துவ உதவியும் கிட்டா தருணமதில், காளான் மேகத்தில் எழுந்த புகையும் தூசும் பிரகாசமான கோடைக் காலையை இருண்ட அந்தியாய் மாற்றியது. பரவும் நெருப்புப் புயலும், எரிந்த சதைகளின் அழுகிய துர்நாற்றமும் காற்றை நிரப்பியிருந்தன.

அணு வெடித்த மத்திய தரையிலிருந்து 1.8 கி.மீ. தொலைவில் தகர்ந்து போன கட்டிடத்திலிருந்து அதிசயமாய் மீட்கப்பட்டேன். அதே அறை யிலிருந்த பெரும்பாலான சக மாணவர்கள் உயிருடன் எரிந்து போனார்கள். தன் தாயையும் இறையையும் உதவிக்கழைக்கும் அந்த கூக்குரல்கள் இன்னும் என்னால் கேட்கமுடிகிறது. நகரத்தின் மத்தியிலிருந்து உரசிக்கொண்டு பவனி வரும் பேயுருவங்களை என்னோடு தப்பிப் பிழைத்த இரு மாணவிகளோடு கண்டேன். குண்டு வெடிப்பால் மிகுந்த காயமுற்று கந்தலான ஆடைகளோடு அல்லது நிர்வாணமாய் ஆக்கப்பட்டவர்கள். அவர்கள் ரத்தம் சொட்ட, எரிந்து, கருகி, வீங்கியவர்கள். அவர்களது உடலின் பல பாகங்கள் தொலைந்து சதையும் தோளும் எலும்புகளில் தொங்கிக்கொண்டிருந்தது, சிலரது கருவிழிகள் கைகளில் தொங்க, மேலும் சிலரது வயிறு வெடித்துப் பிளந்து குடல்கள் வெளியே தொங்கிக்கொண்டிருந்தது.

உயிர்வாழ்வதற்கான பல்லாண்டு போராட்டத் தினூடே சாம்பலிலிருந்து வாழ்வை மீட்டெடுத்து, மனிதாபிமானமற்ற ஒழுக்கமற்ற கொடூரமான அணுகுண்டு தாக்குதலின் அனுபவங்களை எந்த மனிதரும் மீண்டும் அனுபவிக்க வேண்டுமென்பதில் உயிர் பிழைத்த நாங்கள் உறுதியானோம். மேலும், அணு ஆயுதங்களின் தீமையை மக்களுக்குப் புரிய வைப்பதும், அணு அச்சுறுத்தலின் மெய்மையை உலகிற்கு எச்சரிப் பதுவும் எங்களது பணி. மனிதமும் அணு ஆயுதங் களும் ஒன்றுசேர்த்திருக்க முடியாது.

கென்னடியைப் பொழிப்புரை செய்ய இன்றும் கூட டமோசில்ஸின் வாள் ஆபத்தான முறையில் ஊசலாடுகிறது. பூகோள அரசியலின் போர்வெறிக் கூச்சல்கள், மனிதப் பிழை, கணினி தோல்வி, சிக்கலான அமைப்புகள் தோல்வி, சுற்றுசூழலில் அதிகரிக்கும் அணுக்கதிர் மாசும் பொதுமக்கள் மற்றும் சுற்றுசூழல் சுகாதாரத்தில் அதன் பாதிப்பும், அத்துடன் உலக பஞ்சம் மற்றும் காலநிலை குழப்பம் அதோடு தொடரும் விபத்து அல்லது திட்டமிடப்பட்ட அணு ஆயுத பயன்பாடு போன்ற பல்வேறு அபாயங்களால் நம் வரலாற்றில் எப்போதுமில்லா அளவிற்கு அணு ஆயுதங்கள் தற்போது ஆபத்தானவையென பெரும்பாலான அறிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர். ஆக, வருங்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான உலகை உறுதி செய்ய அணு ஆயுதங்களை முழுமையாய் அழிக்கவேண்டிய தார்மீக கட்டாயம் நமக்குள்ளது. ஹிரோஷிமாவில் நீங்கள் சொன்னதுபோல் பயமென்னும் தர்க்கத்திலிருந்து விடுபட்டு அத்தகைய உழகைத் தொடர நமக்குத் துணிவு வேண்டும். பிறகு ஏன், அணு ஆயுதங்களைக் கைவிட வேண்டி இந்த தலைமுறையின் மிக குறிப்பிடத்தக்க முன்னேற்றமான, மனிதாபிமான முயற்சியால் பிறந்த ஐக்கிய நாடுகளின் ஆயுத கைவிடல் பேச்சுவார்த்தைகளை அமெரிக்க அரசாங்கம் புறக்கணிக்கிறதென தகுந்த மரியாதையுடன் குடியரசுத் தலைவரிடம் கேட்கிறேன்?

கடந்த ஐந்தாண்டுகளில், அணு ஆயுதங் களை ஒழிக்க அணுசக்தி இல்லாத நாடுகள் மற்றும் அரசு சார்பற்ற அமைப்புகள் ஒன்றிணைந்து விரைவாக முன்னேறும் உலக உலகத்தைக் காண்கிறேன். மனிதாபிமான பிரச்சனைகளில் அணு ஆயுதங்களே முதலும் முக்கியத்துவ மானதென்றும் அதன் பயங்கரமான அபாயம் அனைத்து தொழில்நுட்ப—ராணுவ பரிசீலனைகளை பொருத்தமற்றதாக ஆக்குகின்றது என்பதும் இந்த இயக்கம் ஐயதிற்கு அப்பால் காண்பிக்கின்றது. மன்னிக்க முடியாத தங்கள் அரசின் புறக்கணிப்புகளோடு தொடர்ந்த மூன்று அணு ஆயுதங்களுடைய மனிதாபிமான தாக்கம் என்ற சர்வதேச மாநாட்டில் 127 நாடுகள் சேர்ந்து அணு ஆயுதங்களின் தடை மற்றும் நீக்கத்திற்கு இடையிலான சட்ட இடைவெளியை நிரப்ப மனிதாபிமான உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். அணு ஆயுத நாடுகள் மற்றும்

அவர்களோடு நிற்பவர்களை ஆயுதங்களைக் கைவிடும் செயல்முறையைத் துவங்க இந்த நாடுகள் அழைப்பு விடுகின்றனர்.

ரிச்சர்ட் என்ற வெய்ஸிகரின் வார்த்தைகளை மறுமொழிகிறேன்: "கற்பனைகளோ விலகளோ இன்றி உண்மையை கண்களில் நேரே காண வேண்டும்". தினந்தோறும் அணு ஆயுதங்களின் அச்சுறுத்தலில் வாழ்கிறோம் என்பதே அந்த உண்மை. ஒவ்வொரு கிடங்கிலும், ஒவ்வொரு நீர்மூழ்கிக் கப்பலிலும், விமானங் களின் குண்டு தளங்களிலும், ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு நொடியும் ஆயிர கணக்கில் உயர் எச்சரிக்கையோடு அணு ஆயுதங்கள், நாம் காதலிக்கும் அன்பு செலுத்தும் ஒவ்வொருவரையும் அச்சுறுத்த தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதனால் தான் ஹிரோஷிமா வந்தோம். நாம் காதலிப்பவரை நினைத்துப் பார்த்துக் கொள்ளலாம். காலையில் நம் குழந்தையின் முதல் சிரிப்பு. சமையலறை மேசையில் மனைவியின் மென்மையான தொட்டுணர்வு. தழுவி அரவணைக்கும் பெற்றோர். இவற்றையெல்லாம் சிந்தித்து, 71 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த இத்தகைய மதிப்புமிக்க தருணங்களை அறிந்து கொள்வோம்.

இருப்பிலுள்ள அணு ஆயுதங்கள் மாற்றும் தாங்கள் அங்கீகரிது அமெரிக்க அணு குடை யினுள் உள்ள நாடுகளுக்கு, எனது தாய் நாடான ஜப்பான் உளப்பட, வழங்கும் அச்சுறுத்தல் கொள்கையால் நாம் காதலிப்போர், குழந்தையின் சிரிப்பு, அன்பிற்குரியவரின் தழுவல், இத்தகைய மதிப்பற்ற தருணங்களும் மக்களும் முற்றிலும் அழிந்துவிடும் அச்சுறுத்தலுக்கு ஆளாகி உள்ளனர் என்ற ஆழமான உணர்வைப் புரிந்து கொள்ளுமாறு மன்றாடி கேட்கிறேன். அணு தாக்குதலுக்கு உள்ளான ஒரே நாடு தன் பாது காப்பிற்காக அதனினும் மிக கொடூரமான ஹைட்ரஜன் குண்டுகளை நாடிச் செல்கிறது என்பது உண்மையில் மூடத்தனம். அணு கைப்பெட்டியுடன் கடமையால் பிணைக்கப் பட்ட அதிகாரியின் துணையோடு, ஹிரோஷி மாவிற்கு வருகை தரும் ஒரே அமெரிக்க குடியரசுத் தலைவார் திரு.ஒபாமா, உலகின் உயிர்களை அழிக்க பீடிகையாய் தொலை விலுள்ள ஏவுகணைகளுக்குக்குள் நெகிழ் வட்டை நுழைக்கக் கட்டளையிடும் குறியீடுகள் வேண்டுமா?

"சொந்த தார்மீக எழுச்சி"யைத் துரிதப்படுத்த உண்மையில் நீங்கள் விரும்பினால் பின்வரும் மூன்று உடனடி நடவடிக்கைகளால் அணு ஆயுதங்களைக் கைவிடுதலை மெய்ப்பியுங்கள்:

1. சர்வதேச அணு ஆயுத கைவிடல் சந்திப்புகளின் புறக்கணிப்பை நிறுத்தி விட்டு, தடை மற்றும் நீக்கலுக்கான அணு ஆயுத தடை ஒப்பந்தத்திற்கான விதிகளையும் அதற்கான புதிய சட்ட ரீதியான அமைப்பையும் துவங்குவதற்கு மனிதாபிமான உறுதிமொழி எடுத்துள்ள 127 நாடுகளுடன் சேர்ந்து கொள்ளுங்கள்.

2. அமெரிக்க அணு ஆயுதங்களை நவீனப்படுத்த, மலைக்க வைக்கும் ஒரு டிரில்லியன் டாலர்களை அடுத்த மூன்று தசாப்தங்களுக்கு நிறுத்தி விட்டு, அந்த தொகையை மனித தேவைகளுக்காகவும் சுற்றுசூழல் பாதுகாப்பிற்காகவும் பயன்படுத்துங்கள்.

3. உயர் எச்சரிக்கையிலிருந்து அணு ஆயுதங்களை எடுத்துவிட்டு, அணு ஆயுத விபத்துகளை ஒழுங்குமுறை படுத்த புறக்கணிப்பு கலாச்சாரத்தை அம்பலப் படுத்தும் சமீபகால ஆராய்ச்சியின் பொருளான பழமை பட்டுவரும் கட்டளை மற்றும் கட்டுப்பாடு அமைப்புகளை மறு பரிசீலனை செய்யவேண்டும்.

குடியரசுத் தலைவர் ஒபாமா, உண்மையான மாற்றத்தை இயற்ற உங்களுக்குத் தனிப்பட்ட சக்திகளுண்டு. இது உங்களது மரபாய் இருக்க முடியும். அணுப்போரின் அச்சுறுத்தலிலிருந்து மக்களை மீட்டு அவர்களின் நாட்கள் அமைதியாய் நகர, நிதர்சனத்தில் அணு ஆயுதங்கள் கைவிடப் பட்ட நூற்றாண்டை வரவேற்போம். இது எவ்வளவு விலைமதிப்பற்ற செயல். இதை பாதுகாத்து ஒவ்வொரு குழந்தைக்கும் நீடிக்கச் செய்வோம்.

தங்கள் உண்மையுள்ள,

செட்சுகோ தர்லோவ்

●



அணுசக்திக்கு எதிரான பிரச்சாரத்திற்கு தயாராகும் மக்கள்




அணுகதிரியக்க அளவை தெரிவிக்கும் கருவி

... 2ம் பக்கத் தொடர்ச்சி

சுதந்திர இந்தியா காணாத மகத்தான ஒரு வரலாற்று போராட்டம் கூடங்குளத்தில் நடந்தது. உள்ளூர் ஊடகங்களால் பெரிய அளவில் கண்டு கொள்ளப்படாத அந்த போராட்டத்தை சர்வதேச ஊடகங்களில் இடம்பெற வைத்த பெருமை சில போராட்டத் தருணங்களுக்கு உண்டு. அந்த தருணங்களை, அதன் காட்சிகளை புகைப்படங்களாக மாற்றி சர்வதேச கவனத்தை அந்த போராட்டத்தின் மீது திருப்பியவர் புகைப்பட கலைஞர் அமிர்தராஜ் ஸ்டீபன்.

ஜப்பான் உள்ளிட்ட சர்வதேச ஊடகங்களில் இடம் பெற்றன அமீரின் புகைப்படங்கள். இன்று புகுஷிமாவின் வரலாற்று துயரத்தை புகைப்படங்களாக்கி வெளியிட்டிருக்கிறார்.

நமது கூட்டு மனசாட்சியின் குரல் ஆகட்டும் இந்த புகைப்படங்கள்.




புகுஷிமா அணு உலை விபதிற்கு பின் மக்கள் அனைவரும் வெளியேறிய நிலையில் Tomioka நகரம்




காற்று ஒருபோதும் ஆடாத மரத்தை பார்த்ததில்லை
காற்றில் அலைக்கழியும் வண்ணத்துப்பூச்சிகள்,
காலில் காட்டைத் தூக்கிக் கொண்டு அலைகின்றன...

புவியை காக்க வாசிப்போம்... பரிசளிப்போம்..
90949 90900